SHERIDAN'S

# PIZARRO

IN TAMIL

BY

T. N. SESHACHALAM, B. A.

MADRAS:
C. COOMARASAWMY NAIDU & SONS
1915
Registered] [Price 6 As.

# பிஸாரோ

## (ஓர் துன்பியல் நாடகம்)

இது

டி. என். சேஷாசலம், பி. ஏ.

இயற்றியது

சென்னை:

ஸி. குமாரசாமி நாயுடு ஸன்ஸ்

ரிஜிஸ்தர் செய்தது] 1915 [விலை 6 அணா

PRINTED AT

THE 'CAXTON PRESS'

MADRAS, E.

# முகவுரை

இம் மொழிபெயர்ப்பிற்கு முதல் நூலாசிரியர் புகழ் பெற்ற ஆங்கில நாடக கவிகளுள் ஒருவராகிய ஷெரிடன் என்பவர். அவரது நாடகங்களி லெல்லாம் விடா நகை விளைக்கும் அஹஸ்ய ரஸமே எங்கும் வியாபித்திருக்கின்றது. எனினும் சோக ரஸத்திலும் இப் 'பிஸாரோ' வெனும் ஓர் துன்பியல் நாடகமும் இயற்றியுளர். 'பிஸாரோ' முற்றிலும் கட்டுக் கதையா யில்லாமல் சிறிது சரித்திரத்தை யொட்டி இருப்பதாற்றான் நான் இந் நாடகத்தை மொழி பெயர்த்துத் தமிழுலகிற்குக் கொடுக்கக் கருதினேன். மேலும், இந் நூலின்கண் அருமை பெருமையுள்ள அநேக விஷயங்களும், மிக்க மேன்மை பொருந்திய பல நீதிகளும், அவைகளுக் கேற்ற வெகு கம்பீரமான நடையும் சிறந்து விளங்குகின்றன.

ஆங்கில கிரந்தங்களுள் ஒன்றாகிய இப் 'பிஸாரோ' மேலெழுந்த வாரியாய் ஒரு தரத்திற் படித்தெறிந்து விடத்தக்கதன்று. கருத்தூன்றி ஆழ்ந்து படித்தாலன்றி, இந் நாடகத்தின் அமைப்புச் சிறப்பும், அணியலங்காரங்களி னழகும், நீதிவாக்கியங்களி னுண்மையும் எளிதிற் புலப்படா. ஆங்கிலத்தில் அல்லது நமது பாஷையிலேயே உள்ள உயர்தர சாகித்தியங்களிற் பயின்றோர்க்குத் தாங்கள் படிக்கப்புகும் காவியங்களைக் கிளறிப் பார்ப்பதின்

பலனை எடுத்துக் காட்டுவ தனவசியகம். தற்காலம் தமிழில் வெளியாகி வரும் நாவல்களு ளனேகம், உப்புச் சப்பின்றி, கிளறிச் சலித்துப் பார்க்கச் சத்தொன்று மற்றிருப்பது யாவர்க்கும் தெரிந்த விஷயமே. அத்தகைய புஸ்தகங்களுடன், ஜனங்கள், இவ்வரிய நூலையும் சேர்த்து மதிக்காதிருக்கவே, இந்த விதமாக முதலில் எச்சரிக்க வேண்டி வருகிறது. இப் 'பிஸாரோ'வை எழுதியவர் ஷெரிடனே யாதலின், தற்புகழ்ச்சி என்னும் வசைக்கு நானுளல்ல வென்பது நன்குணர்ந்தே, இந் நாடகத்தின் மேன்மைச் சிறப்பையும், இதில் ஆங்காங்கே ஆழ்ந்து விளங்கும் சாராம்சத்தின் மகிமையையும் சிலாகித்துக் கூறி அவைகளைக் கிரகித்து அனுபவிக்க வேண்டின், இப் புஸ்தகத்தை எடுப்போர் ஒரு முறைக்குப் பன்முறை ஊன்றிப் படிப்ப தவசியமென்று நான் இவ்வளவு தூரம் வற்புறுத்தவும் துணிந்தேன்.

பின் வரும் நூன்முகம் கதையின் சந்தர்ப்பம் தெரிவித்து, அதன் சம்பவங்களின் பொருத்தத்தை விளக்கும்.

இந்நூலினை அச்சிடும்போது மிக்க அன்புடன் என் உடனின்றுதவிய ம-ள-ள-ஸ்ரீ S. அநவரத விநாயகம் பிள்ளை யவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட் டிருக்கின்றேன்.

சென்னை,
12-12-'14

T. N. சேஷாசலம்.

# நாடக பாத்திரங்கள்

## — ஸ்பானியர் —

**பிஸாரோ** (Pizarro) — *ஸ்பானிய வீரன்.*
**எல்விரா** (Elvira) — *பிஸாரோவைத் தொடர்ந்து வந்து விட்ட அவனது காதலி.*
**வல்வேர்தே** (Valverde) — *பிஸாரோவின் காரியதரிசி.*
**அல்மாக்ரோ** (Almagro), **தவில்லா** (Davilla), **கன்ஸாலோ** (Gonzalo) — *பிஸாரோவின் பிரதானிகள்.*
**கோமேஸ்** (Gomez) — *ஓர் போர்வீரன்.*
**லஸ்-கஸஸ்** (Las-casas) — *பிஸாரோவுடன் சென்றிருந்த ஓர் வயோதிக குரு.*
**அலான்ஸோ** (Alonzo) — *பிஸாரோவின் ஆதித் தோழன். பிஸாரோவின் கொடுமை சகிக்கமாட்டாமல் பெருவியருடன் சேர்ந்து விட்டவன்.*

## — பெருவியர் —

**அத்தாலிபா** (Attaliba) — *பெருவியர் அரசன்.*
**ரோலா** (Rolla) — *பெருவிய தளகர்த்தன்.*
**ஓரோஸிம்போ** (Orozembo) — *ஒரு பெருவிய சிற்றரசன்.*
**ஓரேனோ** (Orano) — *ஒரு பெருவிய போர்வீரன்.*
**கோரா** (Cora) — *அலான்ஸோவின் மனைவி.*
**பர்னண்டோ** (Fernando) — *கோராவின் குழந்தை.*
**மரீனா** (Marina), **ஸுலுகா** (Zuluga), **ஓலியா** (Olea) — *பெருவிய ஸ்திரீகள்.*

*ஒரு பெருவிய வயோதிகக் குருட்டுக் கிழவனும் அவன் பையனும். மற்ற சிபாய்கள், பெருவிய ஸ்திரீகள், குழந்தைகள், குருக்கள், சூரிய கன்னிகைகள் முதலானோர்.*

**கதை நிகழுமிடம்** — *தென் அமெரிக்காவிலுள்ள 'பெரு' என்னும் நாடு.*

# நூன்முகம்

'திரைகடலோடியும் திரவியம் தேடு' என்று சொல்லியது நமது ஒளவை மூதாட்டியே யாயினும் அவ் வாக்கியத்தி னுண்மையை முற்றிலு முணர்ந்து அதை ஆதி முதல் பரிபாலனம் பண்ணி வருபவர்கள் ஐரோப்பியர்களே. சுமார் ஐந்நூறு அறுநூறு வருடங்களுக்கு முன் இங்கிலாந்து, உலாந்தா, ஸ்பெயின், போர்ச்சுகல் முதலிய மேனாட்டோர், தூரதேசங்களுடன் வர்த்தகம் செய்து தங்கள் செல்வத்தை விருத்தி பண்ணுவதற்காக நூதன தேசங்களையும், அந்நிய நாடுகளுக்கு நூதன மார்க்கங்களையும் கண்டுபிடிப்பதிலேயே தங்கள் சர்வ சக்தியையும் செலுத்தத் தலைப்பட்டனர். அத்தகைய முயற்சிகளுள் ஒன்றின் பலனைத்தான், அமெரிக்கா என்னும் புதிய கண்டமொன்று கண்டு பிடிக்கப்பட்டு, வியந்து நிற்கும் இவ் வுலகிற்குக் கொடுக்கப்பட்டது. ஐரோப்பியர்களுக்கு இக்காலம் வாய்த்திருக்கும் செல்வ மேன்மையும், அளவற்ற அதிகாரமும், அந் நாட்களில், கொலம்பஸ், வாஸ்கோடிகாமா, ட்ரேக், ராலே போன்ற தீரமிகுந்த கடற்காரர்கள், செய்துள சாகசச் செய்கைகளின் பலனேயாம்.

எவ்வாறெனில், நாடு தேடிக் கடலோடும் இத்தகைய மாலுமி யொருவன் கைக்குப் புதிய தேச-

மொன் றெட்டுமோயின், அம் மாலுமியைச் சேர்ந்த நாட்டோரிற் சிலர் தங்கள் அரசனிடமிருந்து அனுமதிச் சீட்டுப் பெற்று, வர்த்தகம் செய்வதற்காகக் கப்பல்களிற் சரக்கேற்றி அப் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட தேசத்திற்குப் போய், அங்கே, தாங்கள் கொண்டு போகும் பீங்கான் பொம்மை, கண்ணாடி மணிபோன்ற அற்ப சாமான்களுக்குப் பதில் அவ்வூர்ச் சுதேசிகளிடம் பசும் பொன் அபகரிக்கிறதுமன்றி, மெள்ள மெள்ள, தங்கள் கிறிஸ்தவ மதத்தையும் அதனுடன் தங்கள் நாட்டதிகாரத்தையும் அச் சுதேசிகள் தலையிற் சுமத்திக் கடைசியில் படைவலியாலோ அல்லது வேறு உபாயங்களினாலோ அந் நாட்டையே தங்கள் இராஜாங்க ஆதீனத்திற்குட்படுத்தி விடுவார்கள். இவ்விதமே, கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தவுடன், அத் தேசத்தை ஜயித்து அதை ஸ்பானிய அரசாட்சிக்குட்படுத்த ஹேதுவா யிருந்தவன்தான் நம் கதாநாயகனாகிய பிஸாரோ.

பிஸாரோ ஸ்பெயின் தேசத்தைச் சேர்ந்தவன். இவனது பேராண்மைக்கும் புஜபல பராக்ரமத்திற்கும் அளவில்லை. தேகபலத்திற்கேற்ற மனோதிடமும் இவனிடம் அமைந்திருந்தது. எண்ணுதற்கரிய இவனது சாகசச் செய்கைகளைக் கண்டு ஸ்பானியர் பிஸாரோவைத் தம் நாட்டுத் தெய்வங்களுள் ஒன்றாகக் கொண்டாடி வந்தனர். மேற் சொன்னபடி அமெரிக்காவை ஜயிப்பதற்காகப் பிஸாரோ ஒரு சிறு படையுடன் புறப்பட்டுத் தென் அமெரிக்காவிலுள்ள 'பெரு' என்னும் ஒரு நாட்டிற் போயிறங்கினான். அத் தேசத்துச் சுதேசிகளுக்குப் 'பெரு-

வியர்' என்று பெயர். அவர்கள் மனோவாக்குக் காயங்களாற் செய்யக்கூடிய பாபமொன்றும் அறியா மிக்க சாது ஜனங்கள். வெகு யோக்கியர். ஸத்யஸந்தர். இத் தகைய ஜனங்கள் நடுவிற் போயிறங்கின பிஸாரோவையும் அவன் பரிவாரங்களையும் அவ் வூரார் மிக்க மரியாதையுடனும் பட்சத்துடனும் இனிய விருந்தினர்களாக நல்வரவு கூறி இவ் வன்னியரைத் தெய்வமாகக் கொண்டாடி, சர்வசம்மதத்துடன் தங்கள் செல்வத்தை அவர்களுடன் பங்கிட்டுக் கொண்டனர். (I. 1. 13 & 14) நன்றி கெட்ட பிஸாரோவோ இவ்வளவையும் பெற்றும் அச் சுதேசிகளை இரக்கமின்றி ஹிம்ஸித்து வந்தான். கையி லகப்பட்டவர்களைக் கொன்றும், சென்றவிட மெல்லாம் கொள்ளையடித்தும் பெருவைப் பாழாக்கிச் செல்ல முயலவே, உண்மையில் இராட்சசர்களாகிய இந்த ஸ்பானியர்களைத் தாங்கள் மனிதருக்கு மேலான தெய்வமாக மதித்து ஏமாந்தோம் என்றுணர்ந்து, அத் தேசத்தரசனாகிய அத்தாலிபா பிஸாரோவை அடித்துத் துரத்தத் தலைப்பட்டான். பெருவியர் பேராண்மை பொருந்திய போர் வீரர்க ளெனினும், அவர்களது ஆயுதம் கத்தி, ஈட்டி, வில் முதலியனவே யாதலின், ஐரோப்பியரின் பீரங்கி போன்ற தற்காலபோர் எந்திரங்களுக்கு முன் அவர்களால் நிற்க முடியவில்லை. வெற்றி பெற்ற பிஸாரோ, ஏற்கனவே வரம்பு கடந்த தன் அக்கிரமக் கொடுமைகளை முன்னிலும் ஆயிர மடங்கதிகம் செய்து பெருவையும் அவ் வூராரையும் அடியுடன் அடையாளமற அழித்து விட்டே மீள்வதென்று தீர்மானித்து, எமதூதர்களெனத் தக்க

தன் பரிவாரத்தை அக் கொடிய வேலைக்கு ஏவினான்.

இது நிற்க, நிரபராதியான இந்த ஜனங்களை நிஷ்காரணமாய்ப் பிஸாரோ இவ்விதம் வதைப்பதற்குக் காரணம் ஏதாகிலும் உளதோ! இயற்கையிலேயே பிஸாரோ கொடியவன், இரத்த வெறி கொண்டவன், கன்மனத்தன், பதுங்கிப்பாயும் பாதகன் (I. I. 2.) எனினும் உலகத்தில் நாலு பக்கங்களிலும் நடந்துள்ள இதே விதக்கொடுமைகளுக்கு மனிதத்தனமற்ற பிஸாரோ போன்ற தலைவர்களின் துர்க்குணங்களே யன்றிப் பெரும் பான்மை அக் காலத்து ஐரோப்பிய கொள்கைகளும் உத்தரவாதமா யிருந்தன. ஐரோப்பிய மதாசார தேசாசாரங்களை அனுசரிக்காத சாதியார் — அவர்கள் சுய நாகரிகம் எவ்வளவு உயர்ந்ததே எனினும் அக் காலத்து ஐரோப்பியர் கண்களுக்குக் காட்டு மிராண்டிகளாகவே தோன்றினர். அதுவுமன்றிக் கிறிஸ்தவர்களல்லாதவர்கள் அஞ்ஞானிகள்; மனித இனத்தைச் சேர்ந்தவர்களே அல்லர்; அவர்களை என்ன பண்ணினாலும் பாவமன்று என்பது தங்கள் மதக்கோட்பாடுகளுள் ஒன்றெனும் பொய் யெண்ணம் அக் காலத்துக் கிறிஸ்தவ உலகத்தில் எங்கும் வியாபித்திருந்தது. (I. I. 9.) இத்தகைய எண்ணங்கள் குடிகொண்டிருந்த படியால், அந்நிய மதஸ்தர்களையும் அந்நிய அனுசரணை களுடையவர்களையும், நாம் இக்காலத்தில் புலி கரடி போன்ற காட்டு மிருகங்களைச் சிறிதும் அனுதாபமின்றி வேட்டையாடிக் கொல்வதைப் போல், ஐரோப்பியர் கொல்லப் புகுந்தது முற்றி-

லும் ஆச்சரியமன்று. செய்கைகள் எவ்வளவு கொடியதேனும் அவர்கள் நோக்கம் பெரும்பான்மை சுயநயமற்றிருந்தது. அந்நியர்களைக் கிறிஸ்தவர்களாக்குவது முற்றிலும் அவ் வந்நியர் நன்மைக்கே என்று நம்பி யிருந்தபடியால்தான் அவர்கள் இத் தகைய கொடுமைகளுக்கும் தங்கள் கடவுள் சம்மதித்துளர் என்று எண்ணியிருந்தனர். (v. i. 118). இந் நோக்கத்துடனேயே பாலஸ்தீனம் சென்று ஸரஸன் என்னும் ஜாதியாரை இவ்வித வருத்தத்திற் குட்படுத்தி இருக்கின்றனர். டிப்பு சுல்தான், வெகு சமீபத்தில், கத்தி நுனியில் அனேகரை மகம்மதியர்களாக்கின விதம் யாவரும் அறிந்ததே. டிப்புதான் நாகரிக மற்ற துருக்கன்? — நல்லது, முன் காலத்து ஐரோப்பிய நாகரிகமும் அதனிலும் இழிய செய்கைகளுக்கனுமதி கொடுத்ததுமன்றி அவைகளைச் செய்யவும் தூண்டி வந்தது. ஷேக்ஸ்பியர் எழுதியுள்ள "வெனிஸ் வர்த்தகன்" (Merchant of Venice) என்னும் நாடகத்தைப் படித்திருப்பவர்களுக்கு இவைகளின் உண்மை தெளிவாய் விளங்கும்.

இத்தகைய எண்ணங்கள் பிஸாரோவின் மனதிலும் ஊறியிருக்கு மாகையால் பிஸாரோ தன் காலத்திற்குப் பின்னிடாமல் அவ் வெண்ணங்களுக்கேற்ற கருமங்களும் செய்தான். பிஸாரோ எண்ணியபடி பெருவியர் நாகரிக மற்ற காட்டுமிராண்டிகளல்லர். அவர்கள் சிற்சில கலா சாஸ்திரங்கள் கற்றிருந்தனர். அவர்களது இராஜாங்க முறை மிக்க மேன்மையானது. களங்கமற்ற மதாபிமானமும், தேசாபிமானமும் இராஜாபிமானமும் பெரு-

வியரிடம் சிறந்து விளங்கிய பூஷணங்களிற் சிலவா-கும் (II. 2. 39). குற்றமற்ற மனச்சாட்சி அவர்களது சிறந்த பொக்கிஷம். தர்ம நியாயமெனும் கொத்த-ளங்கள் அவர்கள் கோட்டையின் எல்லாப் பாகங்-களையும் காத்துநிற்கின்றன (I. 1. 22). காமக்குரோ தாதிகளுக்கு இடங் கொடாமல் மனோவாக்குக் காயங்களில் தூய்மையும் ஸத்யமும் பொருந்தி யிருப்பது நாகரிகச் சின்னமன்றெனிற்றான் பெரு-வியர் நாகரிகமற்றவர்களாவர். இத்தகைய ஜனங்-களைக் கொடிய பிஸாரோ இரக்கமின்றி வதைத்-தான். ஆனால் பிஸாரோவுடன் சென்றிருந்த லஸ்கஸஸ் என்னும் ஒரு வயோதிகக் குருவிற்கு மாத்திரம் இக் கொடுமைகள் சகிக்காமல், அவர் அவைகளை விட்டொழிக்க எவ்வளவோ மானுட தர்ம நியாயங்களை எடுத்துக் காட்டிப் பிஸாரோவி-டம் மன்றாடினார். பிஸாரோ அவைகளுக்குச் செவி கொடுக்கவில்லை. எனினும் பிஸாரோவின் உயிர்த் தோழனாகிய அலான்ஸோவின் மனதில், லஸ்கஸஸ் எடுத்துக் காட்டிய நியாயங்கள் உண்மையென்று படவே, அவனும் பெருவியரிடம் இரக்கம் காட்டப் பிஸாரோவை வேண்டினன். சாமபேத தான உபா-யங்களுக்குப் பிஸாரோ இணங்காமற் போகவே, அலான்ஸோ, மகா தருமசிந்தையுடையவனாகை-யால், இனி தண்டமே சரி யெனத் தீர்மா-னித்து — முன் காலத்தில் விபீஷணன் கொடிய இராவணனைக் கைவிட்டு ஸ்ரீராமருக்குதவியது போலவே — பிஸாரோவை விட்டுப் பெருவியர் பக்கம் போய்ச் சேர்ந்து, சுபாவத்திலேயே சுத்த வீரர்களான பெருவியச் சைனியத்தை ஐரோப்பிய

முறையிற் பழக்கிப் பிஸாரோவினிடமே அவன் போர்த் தொழில் பழகியுளனாதலின், பிஸாரோவின் படையைக் குலைத்து, உயிர்தப்பினாற் போதுமென அவன் பெருவை விட்டு ஸ்பெயின் தேசம் மீளும்படி துரத்திவிட்டான். இவ் விதம் அவமான மடைந்து ஊர் திரும்பிய பிஸாரோ, தன்னிடம் கற்ற அலான்ஸோவினாலேயே தனக்குற்ற தோல்வியை எண்ணி எண்ணிக் கோபம் பற்றி எழ அலான்ஸோமீது எவ்விதத்திலும் தான் பழிதீர்க்காது விடுவதில்லையென்று சபதம் பண்ணி, கூடிய சீக்கிரத்தில் இன்னொருதரம் பெருவின் மேற் படை யெடுத்துச் செல்வதற்கு வேண்டிய பிரயத்தனங்கள் செய்யலாயினன்.

இதற்கிடையில், நன்றி பாராட்டும் பெருவியருடனேயே தங்கிவிட்ட அலான்ஸோ, அந் நாட்டில் அனேக சீர்திருத்தங்கள் ஏற்படுத்திப் பெருவியருக்கு மிக்க அமைதியும் செல்வப் பெருக்கும் விளைவித்தனன். அத்தாலிபா மகாராஜனும், தூமகேதுவைத் துலைத்தருளிய தெய்வமென அலான்ஸோவை மதித்து அவனைத் தன் முதன் மந்திரியாய்ப் பாவித்து வந்தான். மற்றவர்கள் அலான்ஸோவிற்குக் காட்டிய நன்றிக்கும் அளவில்லை. பெருவிய தளகர்த்தன் ரோலா என்பவன் ஒருவன், கோரா என்னும் ஒரு ஸ்திரீயைக் காதலித்திருந்தான். பேதை என்றால் இக் கோராவிற்கே தகும். அவள் அலான்ஸோவைக் கண்டதும் அவளது நாட்டம் அலான்ஸோவிடம் சென்றது. அலான்ஸோவும் கோராவின்மீது காதல் கொண்டான். இதையறிந்த ரோலா அலான்ஸோ தன் நாட்டிற் கிழைத்-

துள பேருபகாரத்தை எண்ணிக் கோராவை அவ-னிடம் ஒப்புவிக்க, அவ்விருவரும் மணந்து, சீக்-கிரத்தில் குழந்தையொன்றையும் பெற்றுச் சுகமே வாழ்ந்து வந்தனர். இவ்விதம் கோராவை ரோலா அலான்ஸோவிற்குக் கொடுத்துவிட்டதனால் அவ-னுக்கு அவளிடம் அதிக காதல் இருந்ததில்லை யென்று எண்ணலாகாது. கரை கடந்த காதல் இருந்ததாற்றான் ரோலா கோராவைத் தியாகம்செய் தான். இது முன் பின் முரணாய்த் தோன்று மெனி-னும் ஊன்றிப் பார்த்தால் உண்மை தெரிய வரும். ரோலாவிற்குக் கோராவினிடம் இருந்த காதல் சுயநயமற்ற தெய்வீகத் தன்மையது. தன் இச்சை நிறைவேறும் பொருட்டு அவன் கோரா மேற் காதற் கொள்ளவில்லை. அவனது நோக்க மெல்-லாம் கோராவின் க்ஷேமமும் பாக்கியமுமே. அலான்-ஸோவின் கையிலும் கோராவினது க்ஷேமமும் பாக்கியமும் வளருமென்னும் முழுநம்பிக்கை அவ-னுக்கிருந்தது. கோராவும் அலான்ஸோவை நாடி-னாள். அலான்ஸோவிற்கோ, ரோலா தன் நாட்டி-னிமித்தம் மிக்க கடமைப்பட்டுளன். இவைகளைக் கருதியே ரோலா, தன் மனவமைதி அதனுடன் நசித்ததெனினும், சுயநயமற்றுக் கோராவைப் பிரியவும் சகித்தனன்.

பிஸாரோ, மறுபடி 'பெரு'மேற் பாய்ந்து பகை முடிக்கப் படை சேர்த்துப் புறப்பட்டான். இந்தத் தடவை பிஸாரோவுடன் அவன் காதலி எல்விரா என்பவளும் வந்திருந்தாள். இவள் கன்னிமாடத்-தில் வசித்திருந்த சிறு பெண்ணா யிருக்கும்போது, ஊரெங்கும் பரவிய பிஸாரோவின் புகழ் அவள்

காதிற் கெட்டிற்று. பிஸாரோவின் தீரமும் கியாதியும் அவள் ஹிருதயத்தைக் கவர்ந்து விட்டன. பிஸாரோ மேற் காதல் கொண்டாள் என்று சொல்வோமானால், சாதாரணமாய் ஸ்திரீகள் புருஷர்கள் மேற் கொள்ளும் காதலைப் போன்றது தான் எல்விராவின் காதலும் என்றெண்ணலாகாது — அவள் பிரபஞ்சமெல்லாம் பிஸாரோவே பிஸாரோ எல்விராவின் அழகைக் கண்டு ஆசை கொண்டு, உண்மையி லவளை விவாகம் செய்து கொள்ளுகிற எண்ணம் சிறிதுமின்றி, நயவஞ்சகத்தினால் இழி நோக்கத்துடன், ஏற்கனவே மெய்ம்மறந் திருந்த எல்விராவை அபகரித்தான். பிஸாரோ மேலிருந்த காதல் வலிமையால் எல்விராவும், பிஸாரோவின் வார்த்தைகளை நம்பித் தன் கற்பையும் கவுரவத்தையும், உற்றோர் பெற்றோரையும், கன்னி மாடத்தையும் கைவிட்டு அவனைப் பின்பற்றி யோடிவிட்டாள். இச் செய்தி கேட்ட அவள் தாய் மனமுடைந்திறந்தாள். தன் தங்கைக்குத் தீங்கிழைத்த பாதகனைப் பழிவாங்க நின்ற அவள் தமையனையும் பிஸாரோ, வழிமறித்து மென்னியைப் பிடித்துக் கொன்று விட்டனன். இத்தனைக்கும் எல்விரா சம்மதித்ததற்குக் காரணம், காதலின் வலிமையே யன்றி அவளது சுயதுர்க்குணமன்று. எல்விராவினது பெருந்தன்மையும் ஸத்யமும் இவ்வள வென்பது நம் நாடகத்திலேயே ஏற்படும்.

பிஸாரோ இரண்டாமுறை பெருவிற்கு வந்து சேர்ந்ததிலிருந்து நம் நாடகம் ஆரம்பிக்கின்றது. இது வரையில் சொன்னது பூர்வ கதையாகும். மேல் நடந்த தெல்லாம் இந் நாடகத்திலிருந்தே தெரிந்து

கொள்ளலாம். எனினும், இந் நாடகத்தின் முடிவு சரித்திரத்தினின்று முற்றிலும் மாறுபட்டிருக்கிறது. பிஸாரோ அலான்ஸோவினால் தனிப் போரில் கொல்லபபடவில்லை. இரண்டாமுறை யுத்தத்திலும் பிஸாரோ தோல்வி யடைந்து, அத்தாலிபாவுடன் சமாதான உடன்படிக்கை பண்ணவேண்டி, அத்தாலிபாவை மெய்க்காப்பாளர்க ளின்றியும், நிராயுதபாணியாயும் சிநேகபாவமாய்த் தன் இருப்பிடத்திற்கு வரும்படி பிரார்த்தித்தான். கபடமற்ற அத்தாலிபாவும், இத்தகைய வேண்டுகோளி லடங்கி யிருக்கும் வஞ்சனையை யறியாமல் அதற்குடன்பட்டுப் பிஸாரோவினிடம் வர, பிஸாரோ அவனைச் சிறைப்படுத்தித் தலைவனற்றுத் திகைத்து நின்ற பெருவியரைச் சம்ஹாரம் பண்ணிவிட்டான். இந்த விசுவாஸகாதகமே 'பெரு' நாட்டை ஜயித்து ஐரோப்பியருக்குத் தந்தது...........ஆனால் கடைசியில் பிஸாரோ தன்னைச் சேர்ந்த ஒருவனாலேயே செய்யப்பட்ட சதிக்கொலைக்கு இரையாய் மடிந்தனன்.

# பிஸாரோ

## முதல் அங்கம்

### முதற் களம்

இடம் — பிஸாரோவின் கூடாரத்திற்கு முன்னால்.

[எல்விரா தூங்கிக்கொண்டிருக்கிறாள். வல்வெர்தே வந்து எல்விராவைச் சிறிது நேரம் உற்று நோக்கி அவளருகில் குனிந்து எல்விராவின் கையையெடுத்து முத்தம் கொடுக்கப் பார்க்கிறான். எல்விரா திடுக்கிட்டெழுந்து வல்வெர்தேவைச் சினந்து பார்க்கிறாள்.]

எல்விரா — என்ன அகம்பாவம்! இச் சைனிய கோஷ்டியின் நடுவில் கிடைப்பதற்கரிய இரண்டொரு நிமிஷம் நான் சற்று அயர்வேனானால், அதையும் கெடுக்க எங்கிருந்து வந்த துனக்குச் சுதந்தரம். இந்த துரோகத்தை உன் எஜமானர் பிஸாரோவினிடம் சொல்லட்டுமோ?

வல்வெர்தே — அவர் சேவகன் நான் — வாஸ்தவம் தான் — அவரது நம்பிக்கை பெற்றவன் —

அவரை எனக்கு வெகு நன்றாய்த் தெரியவும் தெரியும். அதனால்தான் நானிப்பொழுது உன்னை ஒன்று கேட்கப் போகிறேன். என்ன மாயத்தினால் பிஸாரோ உன் இருதயத்தைக் கவர்ந்திருக்கக் கூடும். என்ன விதிப்பயனால் உனது ஆசையெல்லாம் அவரிடம் இன்னும் குடிகொண் டிருக்கிறதோ!

எல்விரா — போதும், போதும். உத்தம கார்ய தரிசியே!

வல்வேர்தே — ஈனப் பிறப்பு. மனதிலும் மாதிரியிலும் மூர்க்கன். இரத்தவெறி கொண்டவன். நாகரிக மற்றவன். சமயத்திற் பதுங்கிப் பாயும் பாதகன். இளமையில் துன்மார்க்கம். மானுடரை மிருகம் போலவும் உலகத்தைக் கொள்ளைப் பொருள் போலவும் பாவிக்கும் அஞ்சாத கடற் கொள்ளைக்காரன். இவனுக் கன்றோ இப்பொழுது ஸ்பானிய வீரனெனும் பட்டம் கிடைத்திருக்கிறது — வெற்றி மாலையும் அணிந்து விட்டான். ஆகா! இவ்வளவு குண விசேஷங்கள் பொருந்திய ஓர் யுத்தவீரனை நம்பி எல்விரா உயர்குலத்தையும், தன் கீர்த்தியையும், தனதகத்தையும் கைவிட்டு இத்தகைய காதலனின் ஆபத்துக்களையும், மனோ விகாரங்களையும், பழி பாவங்களையும் சேர்ந்தனுபவிக்க வெளிக் கிளம்பினது ஆச்சரியமல்லவே!

எல்விரா — என்ன! வல்வெர்தேயா நீதிபோதனை செய்கிறது! நான் செய்தது தவறே என்று

வைத்துக்கொள். அதற்குக் காரணம் என்ன? காதல் — மோகம் — என்னவென்றுகிலும் சொல்; ஆனல் இவ்விழிகுலத் தலைவனிடம் உனக்கிருக்கும் பிடிப்பிற்குக் காரணம் என்னவோ! கேடுகெட்ட பொன் பெறுவது உன் நோக்கம். இழிவான மோசம் உனது மார்க்கம். அல்லவா? என்னையும் அபகரிக்கக் கூடுமானல், பிஸாரோவின்மேல் வீசி இருக்கும் வலையை இன்னும் இறுக்கிச் சுருக்கலாமே என்று பார்க்கிருய். உன்னை யானறிவேன்!

வல்வேர்தே — என் உயிர்மேல் ஆணை, நீ எனக்கிப்பொழுது தீங்கிழைக்கின்ருய். என்னிடத்து என்ன என்ன குற்றங்கள் இருந்தாலும் உன் விஷயமாக ஒன்றுமில்லை. ஆனல் நீ என்னை எவ்வளவு நிந்தித்துத் திரஸ்கரிக்கலாமோ அவ்வளவும் பண்ணிவிடு. உம், — காற்றுள்ள போதே தூற்றிக்கொள். நமது அந்தியகாலம் இதோ குறுகிவிட்டது.

எல்விரா — வல்வெர்தே தீர்க்கதரிசியும் கூடவா!

வல்வேர்தே — உற்றுக்கேள் எல்விரா. முன்னடைந்த தோல்வியினுலுண்டான ரோஷமும், பழிவாங்க வேண்டுமென்று பற்றி யெரியும் கோபமும் பிஸாரோவைக் கொண்டு வந்தன. மறுபடி இப் 'பெரு' விற்கு. நான் சொல்வது உண்மை. தன் பராக்கிரமத்தை அளவிற்கு மிஞ்சி மதிக்கிருன். பகைவரின் பலத்தைச் சரியாய் அளக்கவில்லை, மதியிலி அவன்.

நாமோ வந்திருப்பது அன்னிய நாடு. இவர்களோ பயமென்பதறியாத்தீரர். பரிதானத்தைப் பற்றிப் பேசவும் கூடாது இவர்களிடத்தில். ஆயின் நமக்கு எவ்வழியில் இருக்கிறது விமோசனம். இனியொருவித கஷ்டத்திற்கும் உட்படோம் என்று நமது சைனியம் ஒரே வாயாய் முணுமுணுத்து நிற்கப் பிஸாரோ கொள்ளைப் பொருள் கொண்டு தன் மண்டபாலங்காரத்திலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தால் நமது வீரர் நாளுக்குநாள் நம்மைவிட்டகலாது மிருப்பரோ?

எல்விரா — ஆயின் அழிபவர்கட்கெல்லாம் வார்ஸ் நீ யல்லவோ?

வல்வேர்தே — பொருளும் கொள்ளையும் தவிர ஓர்வித எண்ணமும் எங்களுக் கில்லையா? இதுவோ எல்விரா சௌரியமென்று கொள்வது?

எல்விரா — இல்லை. இல்லை. கடவுளருளால் அதுவன்று. உங்கள் தொழிலின் நோக்கத்தை யாகிலும், காரணத்தையாகிலும், காரியத்தை யாகிலும் எண்ணினால் என் குலை நடுங்குகிறது. உங்க ளொருவரையும் நம்பமாட்டேன். உங்கள் சைனிய முழுவதிலும் இருதயம் என்பது படைத்தவன் ஒருவன் இல்லையே. ஆம், அந்த வயோதிக 'லஸ்கஸஸ்', அவர் தவிர.

வல்வேர்தே — அவனா! ஏன் அவனும் வேறொரு வழியில் வரம்பு கடந்திருக்கிறான். அது இன்னும் கேடாயிற்றே.

எல்விரா — ஐயோ! அத் தர்மபுருஷரை யான் ஏற்கனவே அறிந்திருப்பேனாயின் என் கதி எப்படி முற்றிலும் மாறியிருக்கும்!

வல்வேர்தே — அவ்வளவு சீக்கிரம் பிஸாரோ உன்னை ஏமாற்றி இருக்க முடியாது. வாஸ்தவம் தான். நீ அவரைக் கண்டு எப்படித்தான் மதிமயங்கிப் போனாயோ? ஆச்சரியம்!

எல்விரா — கேள், சொல்லுகிறேன் வல்வெர்தே! என் கன்னிமை நீங்கி மனதில் காதலுதிக்குங் காலத்து, பிஸாரோ என் நாட்டோரால் பூஜிக்கப்படும் விக்ரகமாயிருந்தான். தானே கற்று, தானே உயர்ந்து வீரனானவன் அவன்; மேன்மையாலும் கீர்த்தியாலும் கவரப் படுவ-தற்கென்று சிருஷ்டிக்கப் பட்டவள் நான். 'பனமா'வி லிருந்து அவனுடன் கப்பலில் சென்றவர்கள் நூறுபேர் இல்லை. 'காலோ' தீவுவந்து சேர்ந்ததும் கடற்கரையில் தன் வாளால் ஒரு கோடு கிழித்துத் தன் தலைவ-னுடன் மாளவோ ஜயிக்கவோ துணியாதவர்-கள் இக்கோட்டைத் தாண்டி விடுங்கள் என்-றான். மீந்தவர் பதின்மூன்று பேரே. இச்சிறு படையுடன் வெற்றி பெற்றான் பிஸாரோ. இச் செய்தி என் செவிக் கெட்டினதும், எனது இருதயம் 'பிஸாரோதான் நினது தலைவன்' என்று துள்ளிற்று. அன்றுமுதல் இதுவரை-யில் நான் கண்டதும், எண்ணினதும், பட்ட-தும், உன்னையன்றி வேறு யார் அறியக்கூடும்!

வல்வேர்தே — போதும். இனியொன்றும் கேட்க-வில்லை. நமது தலைவனின் சிஷனும் ஆதிதோழ-

னுமாகிய 'அலான்ஸோ' பகைவரை நடத்தும் வரையில் வெற்றி என்பது நம்மைச் சுற்றி நாடாது. இதை கெட்டியாய் வைத்துக்கொள்.

[உள்ளே எக்காளம் ஊதுகிறது]

எல்விரா — அவன் வருகிறான், மருள மருள விழிக்கர்தே. சூதும் வாதும்தான் முகத்தை எப்படிக் கலக்கி விடுகிறது. உம், கூடுமானால் கொஞ்சம் யோக்கியன்போல் தோற்று பார்ப்போம். சீக்கிரம்.

பிஸாரோ (உள்ளே) — இறுகக் கட்டிப் பிடியுங்கள். நானே விசாரிக்கிறேன் அவனை.

[பிஸாரோ வருகிறான். வல்வெர்தே தலை வணங்குகிறான். எல்விரா நகைக்கிறாள்.]

பிஸாரோ — எதற்காக நகைக்கிறாய், எல்விரா?

எல்விரா — காரணமின்றி நகைப்பதும் அழுவதும் எங்களைப் போன்ற ஸ்திரீகளுக்குள்ள சிற்சில சுதந்திரங்களுள் ஒன்றன்றோ?

பிஸாரோ — எல்விரா, காரணம் தெரியவேண்டும், தீர்மானித்திருக்கிறேன்.

எல்விரா — வெகு சந்தோஷம். ஏனெனில் தீர்மானம் செய்யல் எனக்கு வெகு ஆசை. உங்களுக்குக் காரணத்தைச் சொல்வதில்லையென்று நானும் தீர்மானம் பண்ணியிருக்கிறேன். இவ்விரண்டில் எனது தீர்மானமே சிறந்ததல்லவா? ஏனெனில் இது என்னையே பொறுத்தது. உங்களது அவ்வாறன்றே!

பிஸாரோ — சே! அற்பமே!

வல்வேர்தே — எல்விரா நகைத்ததற்கு என் பீதி...

பிஸாரோ — பீதியா?

வல்வேர்தே — ஆம் — அலான்ஸோவின் சாதுர்யமும், யோசனையும் நம் சத்துருக்களை அவ்வளவு வலிமைப்படுத்தியிருக்க, நாம்........

பிஸாரோ — அலான்ஸோ! பெரும்பாதகன்! ஆகா,. நான் ஒரு காலத்தில் அவன் மேல் எவ்வளவு ஆசை வைத்திருந்தேன். சிறுபையனாயிருக்கும் போதே, அவன் சிறந்த தாய் அவனை என்னிடம் ஒப்புவித்தாள்.

[யோசனையில் ஆழ்ந்தவளாய் எல்விரா பின்புறத்தில் உலாவுகிறாள்.]

என்னுடன் உண்டான். என்னுடன் துயின்றான். அவனது பாலிய புத்தியையும் அதனுடன் வளரும் வீரியத்தையும் நான் சீக்கிரம் கண்டறிந்தேன். எனது ஸாகஸச் செய்கைகளைப் பற்றியெல்லாம், நான் அடிக்கடி அவனுடன் பேசுவதுண்டு. எப்படிப்பட்ட புயலில் தத்தளித்தோம் — எவ்வெவ்வித விபத்துக்களினின்று தப்பினோம் — அப்பா! எவ்வளவு அற்பப் படையுடன் அயல் நாடு சென்றோம். சென்றவிடத்தில் கஷ்டமும் பஞ்சமும்; கலகமும் குழப்பமும்; நெருக்கி வரும் பகைவர் நடுவில் நம் பலத்தை எவ்விதம் குறைத்தன. இருந்தும் மனம் தளராமல் இவைகளை எல்லாம் எவ்விதம் சகித்தேன், எவ்விதம் துணிந்தேன்! இத்தனை கலகக்குழப்பக் கஷ்டங்கள் நடுவில் கைக்குள்

அடங்கும் என் சிறு சைனியத்துடன் நான் எப்படிக் கடைசியில் வெற்றியும் அடைந்து விட்டேன்! — இவைகளைப் பற்றி யெல்லாம் நான் சொல்லும் போதும் பேசும்போதும், அவ்வாலிபன், அலான்ஸோ, ஆச்சரியத்துடன் கூடிய ஆனந்தக் கண்ணீர் பெருக, என் கழுத்தைக் கட்டிக்கொண்டு நானன்றி "வேறோர் தலைவன் மனப்பூர்வமாய் வேண்டேன்" என்று சத்தியம் செய்வான்.

வல்வெர்தே — இவ்விதம் ஜனித்த நட்பு எவ்விதம் கரைந்ததோ.

பிஸாரோ — லஸ்கஸஸ் — அவன்தான் மானிட தர்மத்தைப் பற்றி ஏதேதோ உளறி யுக்திவாதம் செய்து, அலான்ஸோவின் மனதிலோர் மடவைராக்கியத்தைக் கிளப்பி விட்டான். அதனாலல்லவோ தனக்குத் தேசாபிமானத்தைவிட மானுடாபிமானம் மேலிட்டதென்று பிதற்றிச் சென்று பகைவருடன் சேர்ந்தானப் பாதகன்.

வல்வெர்தே — அவ்விராஜ துரோகி, தங்களையும் தனது நாட்டையும் கைசோர விட்டு நமக்குக் கொடும்பகைவனாயினன். ஆம்!

பிஸாரோ — ஆனால், முதல் முதல் சிறிதும் சலியாது, என் எண்ணத்தை மாற்றிக் கொலை செய்யக் கொண்டிருக்கும் என் வாளை நழுவ விடுவதற்காக, எவ்வளவோ நியாயங்கள் எடுத்துக் காட்டிக் கெஞ்சினான். சுதந்தரத்தைப் பற்றியும், நீதியைப் பற்றியும், காருண்யத்தைப் பற்றியும் என்னென்னவோ பிதற்றினதுமன்றி,

இப்பெருவியர்களை ஒன்றுமறியாக் குற்றமற்ற நம் சகோதரர்களென்றல்லவோ அழைத்தான்.

வல்வேர்தே — பெருவியர்களா! கிருஸ்தவர்களல்லவே அவர்கள். அஞ்ஞானிகள்! அவர்களா நம் சகோதரர்கள்?

பிஸாரோ — ஆனல், அவன் கெஞ்சியழும் பேதைக் கண்ணீர் எனது கன் மார்பில் வீழ்கிறதென்றுணர்ந்ததும், ஓடிச்சென்று பகைவரைச் சேர்ந்தான். - - - இந்தப் பிஸாரோவின் பாடசாலையிலேயே பயின்றுளாஞதலின் — தன் புதுச் சைனியத்தை வெகு விமரிசையாய் நடத்தி என்னை வெகு சீக்கிரத்தில் — ஹோ! சொல்லும்போதே கோபமும் ரோஷமும் பற்றி எரிகிறது!! — நிலை குலைத்துப் புறங்காட்டி யோடும் என் சைனியத்தை முறியடித்துத் துரத்திவிட்டான்.

வல்வேர்தே — பழி தீர்க்கும் வேளைதான் வந்துவிட்டதே.

பிஸாரோ — வந்துவிட்டது. நானும் திரும்பி வந்திருக்கிறேன்: என் சைனியமும் பலத்திருக்கிறது. பிஸாரோ உயிருடனிருப்பதை அவ்வகம்பாவம் கொண்ட பையல் வெகு சீக்கிரம் அறிவான். தான் செய்ததற்கெல்லாம் தக்க கைம்மாறு என்ன செய்ய வேண்டுமென்பதை நான் வெகு நன்றியுடன் மறக்காமலிருக்கிறேன் என்பதும் அவனுக்கு இதோ தெரியவரும்.

வல்வேர்தே — ஆனல் அலான்ஸோ உயிருடன் இருப்பது சந்தேகமாயிற்றே.

பிஸாரோ — அவன் உயிருடன் இருப்பது நிச்சயம், அவனது மெய்காப்பாளன் ஒருவனை இப்பொழுதுதான் சிறையாக்கினோம். பன்னீராயிரம் போர்வீரர்கள் இருப்பதாகச் சொல்லுகிறான். அலான்ஸோவும பெருவிய ரோலாவும் போர்த் தலைவர்களாம். இன்றையதினம் தங்கள் அனுசார பீடத்தில் எல்லாரும் ஒருங்கு சேர்ந்து பலியிடப் போகிறார்கள். அவர்கள் நிர்ப்பயமாயிருக்கும் அத்தருணத்தை நாம் தப்பவிடலாகாது. நிராயுதபாணிகளா யிருக்கும்போதே எதிர்த்து - - - - பலியிடுவோரைப் பலியிட்டு விடவேண்டும்.

எல்விரா —அதிர்ஷ்ட வீன நிரபராதிகளே! ஐயோ பாவம். உங்கள் ரத்தமே உங்கள் பலிபீடத்தில் தோயவேண்டுமா!

பிஸாரோ — நல்லது ! (உள்ளே எக்காளம் ஊதுகிறது) எல்விரா உட் செல்.

எல்விரா — எதற்காகப் போகவேண்டும்?

பிஸாரோ — ஏனெனில், புருஷர்கள் கூடிச் சில ஆண்மையான காரியங்கள் செய்வதற்கு இருப்பதிங்கே.

எல்விரா — ஓ புருஷர்களே. நன்றி கெட்ட மூர்க்கப் புருஷர்களே! நிந்திக்கப் பட்டும் ஆசை குறையா அகமுடைய ஓ ஸ்திரீயே !

[வல்வெர்தே பின்புறம் போகிறான்.]

களித் துல்லாசமா யிருக்கும் நாட்களில் உங்களுக்கு உற்சாகமும், நம்பிக்கையும், பிரம்-

மானந்தமும் பிறக்கும் எங்கள் கண் பார்வை வேண்டி யிருக்கிறது! வருந்தித் துயருற்ற காலையிலும் எங்கள் மார்புமேற் சாய்ந்து அமைதியும் தேறுதலும் அடைகிறீர்கள்! ஆனாற் பேரவா மேற்கொண்டு அட்டகாஸத்துடன் தீக் கர்மங்கள் செய்கையிலோ எங்களை விளையாட்டுப் பொம்மைகளாகவும் அடிமைகளாகவும் பாவித்து நடத்துகிறீர்கள் — நான் இதை விட்டகலமாட்டேன்.

பிஸாரோ — ஆயின் இரு. கூடுமாயின் சற்று மௌனமா யிருக்க வேண்டும்.

எல்விரா — யோசனு சக்தி யற்றவர்கள்தான் பிதற்றின வண்ணமா யிருப்பார்கள். நான் யோசிக்கிறேன் — எண்ணத்திற்குச் சப்த மில்லையே.

பிஸாரோ — (ஒருபுறமாய்) அவள் நடவடிக்கையில் கொஞ்ச காலமாய் என்னவோ —

[எல்விராவைக் கடினமாகவும், சந்தேகத்துடனும் உற்று நோக்குகிறான். அவளும் இவனைக் கம்பீரமாகக் கண் வாங்காமல் பார்க்கிறாள்]

[லஸ்கஸஸ் அல்மாக்ரோ கன்ஸாலோ தவில்லா போர்ச் சேவகர்கள் போர்த்தலைவர்கள் வருகிறார்கள்.]

லஸ்கஸஸ் — பிஸாரோ, சித்தமா யிருக்கின்றோம்.

பிஸாரோ — வருக, வயது முதிர்ந்தமகானே! நண்பர்காள் வருக! வீரர்காள்! நண்பர்காள்!

நாம் இந்நாள் வரை சலியாது பட்ட கஷ்டங்களுக்கு விமோசனமும், பிஸாரோவினது எண்ணங்கள் நிறைவேறும் வேளையும் இன்றே கூடின. நம் பகைவர் நிர்ப்பயமாய் பலியிடுவதிலேயே தங்கள் கவனத்தைச் செலுத்தியிருக்கிறார்கள் இப்பொழுது. தைரியத்துடன் அவர்கள் பண்டிகை நடுவில் புகுந்தடிப்போமானால் — உங்கள் தலைவன் வார்த்தையை நம்புங்கள் — நாம் ஒரு போதும் அபஜெயப்பட மாட்டோம்.

அல்மாக்ரோ — ஏற்கனவே வெகு காலம் நாம் வேலையற்றுக் கரையோரத்தில் கிடந்தாய் விட்டது. பண்டங்கள் ஆய்விட்டன. போர்ச் சேவகர் முணு முணுக்கிறார்கள். இனி யுத்தம்! யுத்தம்! கத்தி பிடித்தவர்களுக்குக் கொலையும் சக்தி யற்றவர்களுக்குச் சிறையும் தான் இனி.

தவில்லா — பெருவியரின் வம்சமே அற்றுப் போக வேண்டும்!

லஸ்கஸஸ் — இரக்க மில்லையோ, ஈசனே!

அல்மாக்ரோ — ஆம். எதிர்ப்போம். ஒன்று சேர்ந்து ஒரே க்ஷணத்தில்! அப்பொழுது தான் அலான்ஸோ, மதம் நீங்கி, நம் வல்லமையை இகழ்ந்து நம் துன்பத்தைக் கண்டு நகைப்ப தொழிப்பான்.

லஸ்கஸஸ் — அலான்ஸோவா! அகம்பாவமும் அவமதிப்பும் எள்ளளவும் அவன் சுபாவத்திற் கிடையாவே.

அல்மாக்ரோ — லஸ்கஸஸ் தன் சிஷனுக்காகப்-பரிந்து பேசுவது தகுதி தானே.

பிஸாரோ — அத் துரோகியைப் பற்றிப் பேச வேண்டாம். எனது இரத்த வெறி கொண்ட கத்திக்கு இரையாக்க வன்றி அவன் பேரை ஸ்மரிக்கவும் வேண்டாம் — நாமெல்லாம் சம்-மதித்து விட்டோ மல்லவா?

அல்மாக்ரோ — சம்மதித்து விட்டோம்.

கங்ஸாலோ — யுத்தம்! யுத்தம்!

[எல்லாரும் அப்படியே கூவுகின்றனர்]

லஸ்கஸஸ் — ஆயின் உன் கொடுமையின் அளவு இன்னும் முற்றுப் பெற வில்லையோ! யுத்த-மாமே! கருணாகரக் கடவுளே! யார் பேரில்! உங்கள் அக்ரமக் கொடுமைகள் இன்னும் கூடப் பகை கிளப்பாத இளகிய ஹிருதய முடைய அரசனொருவனுக்கு விரோதமாகவா! உங்களால் திரஸ்கரிக்கப் பட்ட அவ்வரசன் வெற்றி கொண்டும் சமாதானமாக வேண்டு மென்று மன்றாடுகிறதிலா? ஜீவஹிம்ஸை யென்பதறியா ஒரு சாது சனங்களுக்கு விரோதமாகவா யுத்தம்! பழி பாவமறியாக் குழந்தைக ளல்லவோ அவர்கள்? உங்களை இனிய விருந்தினர்களாக நல் வரவேற்றுச் சர்வ சம்மதத்துடன் சகலத்தையும் உங்கள் கையில் ஒப்புவித்தார்கள். என்ன உதார குணம்! தங்கள் சவுகரியத்தையும், செல்வத்-தையும், தேசத்தையும் உங்களுடன் பங்கிட்-டுக் கொள்ள வில்லையா? அதற்குப் பதிலாக

நீங்கள் மோசத்தையும், கொடுமையையும், மானக் கேட்டையும் கொடுத்தீர்கள். நான் சொல்வதற்கெல்லாம் இக் கண்களே சாட்சி. அவர்கள் உங்களைத் தெய்வமாக பாவித்து அங்கீகரித்தார்கள். நீங்களோ பூதகணம் போல நடந்து கொண்டீர்கள்.

பிஸாரோ — லஸ்கஸஸ்!

லஸ்கஸஸ் — பிஸாரோ, சொல்வதைக் கேள்! — பிரதானிகளே கேளுங்கள்! கற்பாறைகளைப் பொடியாக்கவல்ல இடியையும், நடுங்கி நிற்கும் பூமியில் ஊடுருவிச் செல்லும் மின்னலையும் நடத்தும் ஒப்பற்ற சக்தியுள்ள கடவுளே கேள். உனதாவி என் மனதிற்குத் தைரியம் கொடுப்பது போலவே, உனது சக்தியும் அடியேன் வார்த்தைகளை நிறைவேறச் செய்யட்டும். வேண்டாம், கேட்டுக் கொள்ளுகிறேன். பிரதானிகாள் — சுதேசிகளே — வேண்டாம் — கெஞ்சுகிறேன். தீராப் பேராசையால் இது வரையில் அக் குற்றமற்ற சாதியோருக்கு நீங்கள் இழைத்த குலை நடுங்கும் கொடுமைகளெல்லாம் போதும்! இன்னுமொருதரம் ஆரம்பிக்க வேண்டாம். வியாகுலமே அடங்கு! துக்கத் துளிகளே நீங்கள் விழுந்து தான் என்ன பயன்! மார் பிளக்கும் வேதனையே, என் தொண்டையை அடைக்காதே. ஐயோ! யான் வேண்டுவதெல்லாம் என்ன! நீங்கள் சத்துருக்கள் என்று பெயர் வைத்திருக்கிறீர்களே, அவர்களிடம் என்னை இன்னொரு தரம் தூதனுப்பலாகாதா? நீங்கள் அனுதாபப்

படுகிறீர்கள் என்னும் வதந்தியுடன் அவர்களிடம் செல்வேனுனல் உங்களுக்குச் சமாதானமும் ஆசிர்வாதமும் அவர்களிட மிருந்து பெற்று வருவேன்.

[எல்விராவினண்டை திரும்பி]

எல்விரா அழுகின்றனையா ? ஐயோ ! இக்கொடிய நிலை உன் மனத்தை யன்றி வேறெருவர் மனத்தையும் உருக்க வில்லையா !

அல்மாக்ரோ — ஏனெனில் — உன்னையும் அவளையும் தவிர இங்கே வேறு ஸ்திரீ இல்லையே.

பிஸாரோ — இவ் வீண் வாதத்தை நிறுத்துங்கள். காலம் பறக்கிறது. நமக்கு வாய்த்த தருணத்தையும் இழப்போம். தலைவர்களே, சண்டைக்குச் சித்தம் தானே ?

அல்மாக்ரோ — சித்தம் !

லஸ்கஸஸ் — இரத்த வெறி கொண்ட, ஓ, மானுடர்களே !

[முழங்காற்படி யிடுகிறுன்]

தெய்வமே, என் தேசத்தாரை வாழ்த்தவன்றிச் சபிக்க வன்று நீ என்னைச் சிருஷ்டித்தது. ஆயினும் இம் மூர்க்கரை நான் இப்பொழுது வாழ்த்துவேனுயின், அது உன் கருணைக்கு விரோதமான தெய்வ நிந்தனையே யாகும். (எழுந்திருக்கிறுன்) மாட்டேன் ! உங்கள் நோக்கமும் கொலைத் தொழிலும் நாசமாய்ப் போகட்டும். உங்களை யொன்றுய்ச் சேர்க்கும் இரத்த ஸ்பரிசம் நிர்மூலமாகட்டும். கலகமும் கட்சி-

யும் உண்டாகி உங்கள் கொடிய ஆசை யெல்லாம் படுநாச மாகாதா. இன்றைக்குச் சிந்தும் நிரபராதிகளின் இரத்தப் பழியெல்லாம் உங்கள் தலையிலும் உங்கள் வம்சத்தின் தலையிலும் விடியட்டும். உங்களை விட்டகல்கிறேன், இனி மீள்வதில்லை. காட்டிலும் குகையிலும் ஒளிந்து கொள்வேன். "கொடுங்கோன் மன்னர் வாழு நாட்டில் கடும்புலி வாழும் காடு நன்றே." பரிசுத்தக் கடவுளிட்ட கற்பனைகளை யவமதித்துத் திரஸ்கரிக்கும் நீங்களும் நானும் அவருடைய நியாயஸ்தலத்தில் சந்திக்கும் போது இப்பொழுது உங்களை இடித்துக் காட்டும் என் ஹிருதயத்தை யுடைக்கின்ற வேதனாவஸ்தைகளை நீங்கள் உணர்ந்தறியாமற் போகீர்கள்.

எல்விரா — (எழுந்து லஸ்கஸஸ் கையைப் பிடித்துக் கொண்டு) ஓ! லஸ்கஸஸ் என்னையும் உம்முடன் அழைத்துச் செல்லும்.

லஸ்கஸஸ் — வராதே, அவமதிப் படைந்த சீமாட்டியே! இங்கு யாதொருவனே உபயோகமில்லாதவனாக இருக்கிறேன். விவேகமும், மதாசாரமும் வீணே வாதாடிய விடத்தில் ஒரு வேளை உன் சவுந்தரியம் இரக்கம் காட்டத் தூண்டலாம். ஹோ! கூடுமாயின் அப் பேதைகளி னுயிரை இரட்சியேன். அப்பொழுது தான் நீ செய்த தோஷத்தை மீட்டினவளாவாய். இரக்கம் காட்டுகிறவர்களே இரக்கம் பெறுவார்கள்.

பிஸாரோ — என்ன, எல்விரா! என்னை விட்டுப் போக வேண்டுமோ!

எல்விரா — நான் திகைத்துப் போய்விட்டேன், கண்டு வெருண்டேன்! உங்கள் குரூரமும் — அத் திவ்ய லஸ்-கஸஸும், ஹோ! இப்பொழுதவர் தேவர்களிலும் உயர்ந்தவராய்த் தோன்றினார். நீங்களோ! நீங்களெல்லாம் மனிதருக்கும் கீழ்ப்பட்டவர்களாய்க் காணப் படுகிறீர்கள்.

பிஸாரோ — ஆகா! கருணை யொன்றுதான் சிற்சில சமயங்களில் அழகுக்கழகு செய்வது.

எல்விரா — தர்மம் ஒன்றுதான் எப்பொழுதும் வீரனுக்கு ஜயம் கொடுக்கின்றது.

அல்மாக்ரோ — அப்பா! கடவுளருளால் அக் கிழச் சன்மார்க்க போதகன் தொலைந்தான்.

கந்ஸாலோ — பிரசங்கம் செய்யும் தன் சீடன் அலான்ஸோவினிடம் போய்ச் சேர்வான் என்று எண்ணுகிறேன்.

பிஸாரோ — (அல்மாக்ரோவுக்கு) உம். இப்பொழுது நாம் கூடிப் படையெடுத்துச் செல்வதைப் பற்றி - - - - பலியிடும் வேளை நண்பகல். வழி காட்டுபவர்களுடன் கலந்து பேசி இன்ன சேனாதிபதி இன்னவழி போகவேண்டு மென்பதை ஏற்பாடு பண்ணிவிட வேண்டும். திடீரென்று தோன்றி நாம் அவர்களைத் திகைக்கச் செய்வோமானால் வெற்றி யடைந்து விடுவோம். வெற்றி யடைந்து விட்டால் நகர் வாயில் நமக்குத் திறந்து விட்டது.

அல்மாக்ரோ — பிஸாரோவும் 'பெரு'நாட்டுச் சக்ரவர்த்தியாய் விட்டார்.

பிஸாரோ — அவ்வளவு அவசரம் வேண்டாம். ஆசையும் கொஞ்சகாலம் யுக்தியுடன் கலந்தே சில காரியங்கள் செய்யவேண்டும். அத்தாலிபாவே சிறிதுகாலம் செங்கோலைத் தன் கையிற் பிடித்திருக்க வேண்டி யிருக்கிறது — நான் ஸ்பெயின் அரசனுக்குக் கீழ்ப்பட்டவன் போலவே இருப்பேன். அவனது புத்திரியை மணந்து, நான் கோரும் அவ்வரசுரிமையை நான் வகிக்கும் வரையில் —

[எல்விரா திடுக்கிட் டெழுகிறாள்]

அல்மாக்ரோ — அது சரி. யுக்தி யேற்பாடுகளில் பிஸாரோ பிரதானியின் விவேகத்துடன் வீரனின் பராக்கிரமத்தை நடத்துகிறார் பார்.

வல்வேர்தே — (எல்விராவுக்கு இரகசியமாய்) கேட்டாயா, எல்விரா.

எல்விரா — ஆகா — அதுதான் சரி — வெகு திவ்யம்!

பிஸாரோ — என்ன, கோபித்துக் கொண்டாற்போல் இருக்கிறது. என் ஹிருதயம் முழுவதும் குடிகொண் டிருப்பது எல்விராவே. நீதான் எண்ணிப் பார் — ஓர் செங்கோல் என்னைக் கூப்பிட் டழைக்கின்றதே.

எல்விரா — கோபமா? இல்லை. உனது கீர்த்தியே எனது விக்ரகமென்று அறிவையே நீ! இது-

தான் மிக்க மகிமையுள்ளது. என்ன நியாயம், என்ன கவுரவம் இதற்கு !

பிஸாரோ — இதற்கெல்லாம் என்ன அர்த்தம், எல்விரா?

எல்விரா — ஓ! ஒன்றுமில்லை! ஏதோ ஸ்திரீ பிதற்றினது — பொருமையால் உண்டாகும் சாபல்யமோ என்னவோ : அது இவ் விராஜவீரனின் மார்க்கத்திற்கு யாதோர்வித தடையாயும் இருக்கவேண்டாம்.

[உள்ளே எக்காளம் ஊதுகிறது]

யுத்தாயுதங்கள் உங்களை எதிர்பார்த்து நிற்கின்றன — போங்கள், இவருடன் நின்று போர்செய்யும் தீரவீரர்களே புறப்படுங்கள். உம், போங்கள்.

பிஸாரோ — உம். நீ என்னுடன் வரவில்லையா ?

எல்விரா — சந்தேகமுமா! 'பெரு' சக்ரவர்த்தியாகப் போகிறவரை நானல்லவோ முதல்முதல் வாழ்த்தி யழைக்கவேண்டும்.

[கோமேஸ் வருகிறான்]

அல்மாக்ரோ — என்ன, கோமேஸ், என்ன விசேஷம்?

கோமேஸ் — அதோ அக் குன்றிலுள்ள பனஞ்சோலையில், அவர்கள் சிற்றரசன் ஒருவனை அவன் சேவகனுடன் விரட்டி வெகு சுலபமாய்ப் பிடித்து விட்டோம்; ஆயினும் அவமதிப்புடன் கூடிய கோபமொழிகளன்றி வேறொன்றும் அவன் வாயினின்று வரவில்லை.

பிஸாரோ — எம்முன் இழுத்துவா அவனை.

[எல்விரா வியாகுலத்துடன் உட்காருகிருள். கோமேஸ் உட்சென்று ஒரொஸிம்போவையும் அவன் சேவகனையும் விலங்கிட்டு, காவலுடன் கொண்டு வருகிருன்.]

நீ யார்? அன்னியனே!

ஓரோஸிம்போ — முதலில் இக் கள்வர்க்குத் தலைவனெவனென்று எனக்குச் சொல்.

பிஸாரோ — ஹா!

அல்மாக்ரோ — பைத்தியமே! பிளந்து விடுங்கள் அவன் நாவை; இல்லாவிட்டால் —

ஓரோஸிம்போ — உண்மையிற் சில ரகசியங்கள் வெளிவந்துவிடும்.

தவில்லா — (தன் கத்தியைக் காட்டி) இதை அவன் மார்பில் செலுத்தி விடட்டுமா?

ஓரோஸிம்போ — (பிஸாரோவைப் பார்த்து) உன் சைனியத்தில் இவனைப்போன்ற சுத்த வீரர்கள் இன்னு மனேகரிருந் துனக்குக் கவுரவ முண்டாக்குகின்ருர்களோ?

பிஸாரோ — என்ன அகம்பாவம்! இச் செருக்கே உனக்கு நமனுய் நின்றது. நீ சாகத்தான் வேண்டும். ஓ, மயிர்நரைத்த முண்டமே. ஆனல் முதலில் உனக்குத் தெரிந்தவைகளெல்லாம் சொல்லிவிடு.

ஓரோஸிம்போ — தாங்கள் இப்பொழுது தயைகூர்ந்து எனக்கு என்ன வாக்களித்தீர்களென்பது தெரியும் — நான் சாவேன் என்பது.

பிஸாரோ—அகம்பாவம் கொஞ்சம் குறைந்திருக்குமானல் ஒருவேளை உன் உயிர் மீந்திருக்கலாம்.

ஒரோஸிம்போ — எனது உயிர் ஒரு பட்டுப்போன மரம். அதைக் காப்பாற்றி ஆகவேண்டியதென்னவோ !

பிஸாரோ — கிழவா, கேள். இப்பொழுதுதான் பெருவியருடன் போர் புரியப் புறப்படுகிறோம். கற்கள் நடுவே இருக்கும் அவர்கள் கோட்டைக்குட் செல்ல அந்தரங்கச் சுரங்கமொன்றிருக்கின்றதாமே, அதை மாத்திரம் காட்டிக் கொடுத்துவிடு; பிறகு உனக்கென்ன வேண்டுமோ கேள். அளவற்ற ஐசுவரியத்தின்மேல் உனதாசை —

ஒரோஸிம்போ — ஹ ! ஹ ! ஹ ! ஹா !

பிஸாரோ — எனது நற்கொடையையும் இகழ்கின்றனையோ?

ஒரோஸிம்போ — உன்னையும் உனது நற்கொடையையும் ஒன்ருய்ச் சேர்த்து! ... ஐசுவரியமா? தீரவீரபுத்ர செல்வங்கள் இரண்டுண்டு எனக்கு. இவ்வுலகில் நற்காரியங்கள் செய்து பெற்ற தர்மமாம். ஐசுவரிய மெல்லாம் வேண்டியது நான் மோட்சத்தில் சேர்த்துவைத்திருக்கின்றேன் — மேலும் எனது ஒப்பற்ற பொக்கிஷமும் சதா என்னிடமே இருக்கின்றது.

பிஸாரோ — அதுவென்ன? எனக்குச் சொல்.

ஒரோஸிம்போ—ஆஹா, சொல்லுகிறேன். ஏனெனில் நீ அதை ஒருபோதும் அபகரிக்க முடி-

யாது — களங்கமற்ற என் மனச்சாட்சி தான் அப் பொக்கிஷம்.

[ஒரோஸிம்போவைக் கவனித்து நோக்கிய வண்ணமாய் எல்விரா உட்காருகிறாள்.]

பிஸாரோ — உன்னைப்போல் பேசத்துணியும் பெருவியன் நீயன்றி இன்னொருவன் இரானென்று எண்ணுகிறேன்.

ஒரோஸிம்போ — ஐயோ! அவ்விதமே, நீ செய்கிறதுபோல் செய்யத் துணியும் பாதகன் உங்களுள் இன்னொருவன் இல்லையென்று நானெண்ண இடமிருக்கலாகாதா?

கோமேஸ் — மூர்க்க அஞ்ஞானியே! உங்கள் சைனியத்தில் எவ்வளவு பேர் இருக்கிறார்கள்?

ஒரோஸிம்போ — அதோ அக் காட்டிலுள்ள இலைகளை எண்ணிப்பார்.

அல்மாக்ரோ — உங்கள் கோட்டையின் மிக்க பலஹீன பாகமெது?

ஒரோஸிம்போ — பலஹீனமான இடமே கிடையாது, ஒவ்வொரு பாகத்தையும் தர்ம நியாயமாகிய கொத்தளங்கள் காத்து நிற்கின்றன.

பிஸாரோ — உங்கள் மனைவி மக்களை எங்கே ஒளித்து வைத்திருக்கின்றீர்கள்?

ஒரோஸிம்போ — அவரவர் கணவன் தகப்பன் ஹிருதயங்களில்.

பிஸாரோ — அலான்ஸோவைத் தெரியுமோ வுனக்கு?

ஒரோஸிம்போ—தெரியுமோவா? அலான்ஸோவை யா? அம்மகானையா! எங்கள் பேருபகாரியை! 'பெரு'வைக் காக்கவந்த எங்கள் குலதெய்வத்தை!

பிஸாரோ — இவ்வளவு புகழ் அவன் பெற்றது எதற்காக?

ஒரோஸிம்போ — உன்னைப்போல் இராததற்காக.

அல்மாக்ரோ — அலான்ஸோவினுடன் சேர்ந்து படை நடத்துகிருனே அந்த ரோலா யார்?

ஒரோஸிம்போ — அதற்குப் பதில் சொல்லுகிறேன்; ஏனெனில் அவ் வீரனின் நாமதேயத்தைக் கேட்பதையும் சொல்லுவதையும்விட வேறு பிரம்மானந்தம் எனக்குக் கிடையாது. ரோலா எங்களரசனின் உறவினர். சைனியமெல்லாம் பூஜிக்கும் விக்ரகம். யுத்தத்திலோ வேங்கை; சமாதானத்திலோ பசுவினும் சாந்தமானவர். அவர் கோராவை மணம் செய்துகொள்வதாய் நிச்சிதார்த்தம் செய்யப்பட்டிருந்தது. ஆனல் அவளுக்கு அலான்ஸோவினிடம் அதிகப் பிரியம் உதித்ததைக் கண்டு—நட்பின் பொருட்டும், கோராவின் க்ஷேமத்தைக் கோரியும் — தனதுரிமையையும் — அத்துடன் தன் மன அமைதியையும் — தியாகம் செய்துவிட்டார். ஆயின் இன்னு மவள்பேரில் அவருக்குக் களங்க மற்ற விசுவாசமுண்டு.

பிஸாரோ — என்ன ஆச்சரியமான காட்டுமிராண்டியிவன். இவ்விரோலாவை வெகு சீக்கிரம் காண்பேன்!

ஒரோஸிம்போ — பார்க்காதிருப்பதே நலம். அவர் கண்களினின்று பற்றி எழும் கோபாக்னி உன்னைச் சாம்பலாக்கிவிடும்.

தவில்லா — மூடு வாயை. இல்லாவிட்டால் நடுங்கு.

ஒரோஸிம்போ — மீசை முளையாக் கொள்ளைக்காரா! நானிதுவரையிற் கடவுள் முன்கூட நடுங்கினதில்லையே; மனிதனொருவன்முன் நடுங்கவா? அதுவும் மனிதனிலும் கேடுகெட்ட உன் முன்னலா?

தவில்லா — இன்னொரு வார்த்தை — கர்வங் கொண்ட அஞ்ஞானி பிண்டமே — குத்தி விடுவேன்.

ஒரோஸிம்போ — குத்து, குத்து; ஞானஸ்நானம் பெற்ற கிருஸ்தவ திலகமே, குத்திவிடு. பிறகு உங்களூர் சென்று நானும் பெருவியனொருவனைக் கொன்றுவிட்டேனென்று பெருமை பாராட்டிக் கொள்ளலாம்.

தவில்லா — நரகமே! இப்பழி தீராது விடேன்.

[அவனைக் குத்துகிறான்.]

பிஸாரோ — நில்! நில்!

தவில்லா — இவன் வசைகளை இன்னும் கூட உங்களாற் பொறுத்திருக்க முடியுமோ?

பிஸாரோ — ஆகையாற்றான் அவனைச் சித்திரவதை செய்யாமலனுப்பிவிட்டனையோ?

ஒரோஸிம்போ — வாஸ்தவம். நீயே பார், வாலிபனே. (தவில்லாவைப் பார்த்து) நினது யோசனை

யற்ற மூர்க்கமே என்னைக் கழுமரத்தினின்றும் தப்புவித்தது; நீயும் ஒரு திவ்ய உண்மையை யறிய ஹேதுவில்லாமற் போயிற்றிதனுல் — துஷ்டர்கள் எவ்வளவு குரூரமான ஹிம்சை-களைச் செய்தபோதிலும் சாதுக்கள் எவ்வளவு பொறுமையுடன் அனுபவித்திருப்பார்களென்பதுனக்குத் தெரிய வந்திருக்குமே.

எல்விரா — (ஒரொவிம்போவின் தலையைத் தன் மார்பு மேற் சார்த்தி) சீ! நீங்களெல்லாம் இராட்சஸர்-கள்! — ஏறெடுத்துப் பார்; பிராணத்யாகம் செய்த நிரபராதியே, இன்னுமொருதரம் பார். உயிர் நீங்குமுன் என்னை நீ யாசீர்வதித்துச் செல்லலாகாதா? தெய்வமே! என்மனம் சகிக்கவில்லையே.

ஓரோஸிம்போ—என்னைக் கண்டும் மனமுருகுகிறதாவுனக்கு! என்னையும் கண்டா? ஆயின் எனக்-குச் சுவர்க்கம் இரு விரற்கிடைதான். வாழ்த்-தவா வேண்டு முன்னை யம்மா? — ஸ்பானியர்-களே — கடவுள் உங்கள் ஹிருதயத்தை மாற்றி — நானுங்களை மன்னிப்பதுபோலவே — மன்னித்து விடட்டும்.

பிஸாரோ — சே, போ!

[ஒரொவிம்போவைத் தூக்கிச் செல்லுகிறார்கள்.]

சே, போ! தவில்லா! இன்னு மொருதரம் நீ இவ்விதத் துடுக்கான காரியம் செய்வா-யானுல் —

தவில்லா — விரைந்து வந்த வெஞ்சினத்தால் - - - செய்த இக் குற்றத்தை மன்னித்தருளவேண்டும்.

**பிஸாரோ** — போதும்! அப் பாவியை: அவிழ்த்து விட்டுவிடுங்கள் — அவன் போகட்டும். அவனெவ்வளவு அகங்காரத்துடன் நம்மை அலட்சியம் செய்தும், நாமவனுக்கு எவ்வளவு இரக்கம் காட்டியிருக்கிறோம் என்பதை அவர்களிடம் போய்ச் சொல்வதே நலம் — கேளுங்கள், நமது படைகள் புறப்பட்டு விட்டன.

**சேவகன்** — (எல்விராவைத் தாண்டிப் போகும் போது.) தங்களது சிபார்சால் ஏன தெசமானன் சவத்தையாகிலும் நிந்தனைக்குட் படுத்தாமற் காப்பாற்ற முடியுமானுல் - - - - -

**எல்விரா** — நீ சொல்வது புரிகிறது.

**சேவகன்** — அவரது மக்கள், தம் தந்தைக்கிழைத்த தீங்கிற்குப் பழி வாங்காது விட்டால், உங்கள் தர்ம குணத்திற்காகவாவது எப்பொழுதும் நன்றியுள்ளவர்களா யிருப்பார்கள்.

**பிஸாரோ** — அவ்வடிமை யாது பிதற்றுகின்றுன்?

**எல்விரா** — நீங்கள் காட்டின இரக்கத்திற்காக உபசாரம் சொல்லிவிட்டுப் போகிறுன்.

[காவலாளர்களும் வழி காட்டிகளும் வருகிறுர்கள். சைனியம் இவர்கட் கெதிரில் செல்கின்றது]

**பிஸாரோ** — என்னுடன் வாருங்கள், நண்பர்காள் — ஒவ்வொருவருக்கும் அவரவர் வேலையைச் சொல்லி விடுகின்றேன். பெருவியர் தேவதைக்குப் பலியிட்டு மீள்வதற்குள்ளேயே — நமது வெற்றிக் கொடியை அவர்கள் இரத்தத்-

திற் தோய்த்துத் தலைநகர்க் கொத்தளங்களில் நாட்டி விடுவோம்.

[எல்விராவும் வல்வெர்தேயும் தவிர எல்லாரும் போகிறார்கள்]

வல்வேர்தே — எல்விராவின் ஆவியை நடுங்கச் செய்யும் இவ்வித குரூர அக்கிரமங்கள் அதிகரிக்க அதிகரிக்க எனது எண்ணமும் நிறைவேறுமென்கிற நம்பிக்கையைப் பலப்படுத்திக் கொள்வது அதிகப்பிரசங்கித்தன மல்லவே!

எல்விரா — பயத்தினாலும் கோபத்தினாலும் நானிப்பொழுது ஆவேசம் கொண்டிருக்கிறேன்! ஐயோ! இக் கொடுமைகளைக் காணாது நான் ஓடலாகாதா!

வல்வேர்தே — ஏன், வல்வெர்தேயின் உண்மை நேசம் உனக்கு மாறாப் புகலிடமா யிருக்கலாமே?

எல்விரா — என்னை மீட்டவாவது, எனது பழியைத் தீர்ப்பதற்காவது நீ என்ன செய்வாய்?

வல்வேர்தே — உனக்கிழைத்த நிந்தனைக்குத் தக்க தண்டனையாக எதை வேணுமானாலும் செய்யத் துணிந்திருக்கிறேன் — ஒரே வார்த்தை — இரத்தமொழுக உன் காலிற் சாய்கிறான் பார்.

எல்விரா — இன்னொரு சமயம் இதைப் பற்றிப் பேசிக் கொள்ளலாம். இப்பொழுதென்னை விட்டுப்போ.

[வல்வெர்தே போகிறான்]

கூடாது! கூடாது!! இப்படிப் பழி வாங்குவ-தில்லை. அதுவும் இவனல்ல கருவி அதற்கு. சீ! சீ! எல்விரா நீயா ஒரு நிமிஷமாகிலும் இக் கடைகெட்ட துரோகியுடன் கலந் தாலோசிப்பது! நம்பி யிருக்கும் தன் தலைவனை மோசம் செய்யும் இப் பாதகன் என்மேலாசை யென்று வைத்த சத்தியத்திற்கும், உண்மைக் கவுரவத்திற்குமா கட்டுப்பட்டிருப்பான்? பிஸாரோ என்னைக் கைவிட்டு விடுவான் — ஆம்! அவனை நம்பி எத்தனை எத்தனையோ — ஐயோ, தெய்வமே — அவனுக்காக நான் எதைத்தான் மனதாரத் துறக்கவில்லை. இருக்கட்டும். என் ஹிருதயத்தில் கொதித்தெழும் பெருஞ்சினத்தைச் சிறிதடக்கி யவனை இன்னும் சோதித்துப் பார்க்கிறேன். ஓ, புருஷர்களே! உத்தம கன்னிகைகள் உங்கள்மேற் கொண்டிருக்கும் பிரிய காதலில் வெகு சீக்கிரம் சலிப்படைந்து, உல்லாசச் சரசிகள் கண்களினின்று நூதன வின்பம் அருந்த முயல்கின்றீர்கள்; மனோ வாக்குக் காயங்களால் காதல் காட்டிக் கவர்ந்த எங்கள் ஹிருதயத்தையுடைத்துவிட்டு —ஆத்ம சிந்தனையையும் அடக்கி விட்டால், நமக்கு வேறென்ன விருக்கிறதென்று நிர்ப்பயமாயு மிருக்கின்றீர்க ளல்லவா? ஏனெனில் அப்படிப்பட்ட ஹிருதயங்களுக்கு — நீங்கள் என்னதான் நிந்தித்துத் திரஸ்கரித்தாலும் — மாசற்ற கீர்த்தியும் பழியற்ற மனச்சாட்சியு மாகிய கவுரவப் புகலிடங்க ளுளவன்றோ?

ஆயினும், பதிவிரதா தர்மமென்னும் கோட்டையினின்றும் எங்களை மோசவார்த்தைகளால் வெளியிழுத்துவந்து பிறகு கைசோரவிடும் பாதகக் காமுகர்களே, வேறுவிதத் தேறுதலற்ற என்னைப் போன்ற ஸ்திரீகளும் உளர் என்பதை மறவாதீர். வேறென்னவிருக்கிறது. எனது பழிவாங்கும் ஸாஹஸத்தைப் பார்!

[போகிறாள்.]

# இரண்டாம் அங்கம்

## முதற் களம்

இடம் — கற்பாறை நடுவிற் செடி கொடிக ளடர்ந்தவோர் ஆற்றங்கரை.

[கோரா தன் குழந்தையுடன் விளையாடிக்கொண் டிருக்க அலான்ஸோ மனக்களிப்புடன் அவர்களைச் சுற்றி உலாவிக்கொண்டிருக்கிறான்.]

**கோரா** — இதோ, இப்பொழுது பாருங்கள். உங்கள் ஜாடை அப்படியே இருக்கிறதோ இல்லையோ?

**அலான்ஸோ** — இல்லை. உன் ஜாடைதான் அதிகம்— உனது மிருது சரீரமும், உன் மந்தஹாஸ வதனமும் —

**கோரா** — ஆனால் அவன் கார்மேகக் கூந்தலும், கண்களி னிறமுமோ — பிராணநாயக! அட என் நாதனின் ஸ்வரூபமே; அட எனது செல்வச் சிறுவிக்ரகமே.

(குழந்தையை மார்போடணைத்துக் கொள்கின்றாள்.)

**அலான்ஸோ** — நீ எனக்குக் காட்டும் ஆசையிற் பாதி இச் சிறு விஷமக் கண்மணி கவர்ந்து விடுகிறான் போலத் தோற்றுகிறது, கோரா. என்னவோ, இப் பையல் பிறப்பதற்கு முன்னால் எனக்கே கிடைத்திருந்த உன் முத்தங்

களில் சிலவாகிலும் போய் விடுகின்றன இவனுக்கல்லவா இப்பொழுது.

கோரா — இல்லை. அப்படி யன்று, என் தலைவ! ஒருதாய் தனதினிய குழந்தைக்குக் காட்டும் ஆசை தன் அருமைக் கணவனுக் கென்று வைத்திருக்கும் களஞ்சியத்தினின்று திருடி-னுற்ருன் உண்டோ? தனது பேரின்பத்தைப் பெருக்கிய அக்கடவுளுக்கு விரைந்து செலுத்-தும் நன்றியின் நூதன இன்பமன்ருே விது!

அலான்ஸோ— என்ன! கோரா! நான் சொன்னது வாஸ்தவ மென்ருே எண்ணிக்கொண்டனை?

கோரா — என் கண்மணி கூடிய சீக்கிரத்தில் பேச வாரம்பித்து விடுவான். அப்பொழுதே, ஜக-தீசன் அன்புள்ள அன்னைக்கு அளித்திருக்கும் மூன்றுற்சவ நாட்களிற் கடைசி நாள் கொண்-டாடுவேன்.

அலான்ஸோ — அம்மூன்று மெவையோ?

கோரா — பிறந்தவுடனுண்டாகும் பேருற்சாகத்தை விட்டுவிடுவோம். அது சுய நயத்தாலுண்-டான தென்றும் சொல்லலாம். முதல் முதல் மலராகிய பற்கள், செம்மொக்குப் போன்ற ஈரினின்றும் வெளியாகின்றனவே; அதுவே முதல்நாள் உற்சவம். அடுத்தது, தன் தந்தை-யின் கொஞ்சும் கரங்களினின்றும் மீறித்தள்-ளாடித் தள்ளாடிவந்து தன் தாயின் கால்களைக் கட்டிக்கொண்டுச் சிரித்து மகிழ்கின்ருனே; அந்நாளே இரண்டாம் நாள். மூன்ருநாள்

இதனிலும் இனியது. முதல் முதல் நாத்தடு மாற மதலைச் சொல்லில் நம் காது குளிர 'அப்பா' 'அம்மா' வென்றழைக்கின்றனே! ஆகா! அதனிலும் பேரின்பம் வேறென்ன வேண்டும்!

அலான்ஸோ — காதல் நிறைந்த கோரா!

கோரா — ஓ! எனது நாத! நாள்தோறும் நிமிஷம் தோறும், நான் இப்பாலகனையு முங்களையும் பெற்ற பாக்கியத்திற்காக தெய்வத்தைத் துதித்து வருகிறேன்.

அலான்ஸோ — தெய்வத்தையும், ரோலாவையும்!

கோரா — ஆம், தெய்வத்தையும், ரோலாவையும். நீங்களும் அவர்களை நன்றியுடன் நினைக்கவில்லையா, நாதா! என்ன, சுகமாகவில்லையோ நீங்கள்?

அலான்ஸோ — கோராவும் அக் கேள்வி கேட்பாளோ?

கோரா — பின் ஏன் நீங்கள் சிறிது நாட்களாய் நித்திரை யின்றிப் படுக்கையிற் புரள்கிறீர்கள். ஏன்? கண்ணயராமற் காத்திருக்கும் எனது காதிற்கு, நீங்கள் அடக்க முடியாமல் விடும் பெருமூச்சுகளை, நிச்சப்த நள்ளிரவு காட்டிக் கொடுத்து விடுகின்றது.

அலான்ஸோ — எனது சுதேசச் சகோதரர்களுக்கு விரோதமாய்ச் சண்டை போட வேண்டி யிருக்க வில்லையா?

கோரா — அவர்கள் நமது நாசத்தைத் தேடப் பார்க்க வில்லையாக்கும்! பார்க்கப் போனால் மனிதர்களெல்லாம் சகோதரர்கள் தானே.

அலான்ஸோ — அவர்கள் ஜயமடைந்தாலோ?

கோரா — நான் பறந்து வந்து உங்களை மலைமேற் சேருகிறேன்.

அலான்ஸோ — பறப்பாயா! குழந்தையுடனா கோரா?

கோரா — என்ன! உயிர் தப்ப ஓடுகையில், ஒரு தாய்க்குத் தன் குழந்தையின் பாரமும் தெரியுமோ?

அலான்ஸோ — கோரா, இனியாய்; என் மனம் நிம்மதியா யிருக்க வேண்டு மென்றுனக்கில்லையா?

கோரா — ஆம், ஆம், ஓ ஆம்!

அலான்ஸோ — ஆயின் மலைகள் நடுவில் எல்லாக் கன்னிகைகளும், எல்லா மனைவிகளும், எல்லா பாலர்களும் யுத்தத்தின் முடிவை எதிர் பார்த்து ஒளிந்திருக்கும் புகலிடத்திற்கு நீயும் விரைந்து செல். கோரா மாத்திரம் தனது கணவன், தனது சகோதரிகள், தனது வேந்தன் இவர்களுடைய இஷ்டத்திற்கு விரோதமாய் நிற்பானேன்?

கோரா — பிராணநாதா. நானுங்களை விட்டெப்படி இருப்பது? உங்களுக் கருகிலில்லா ஒவ்வொரு நிமிஷமும், நீங்கள், காயப்பட்டும் தனியாயும் — பரித்யாகம் செய்யப்பட்டும் —

ஐயோ என்னென்னவோ எண்ணுத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணி உருகுவேனே! ஐயையோ! நானுங்களை விடமாட்டேன்.

அலான்ஸோ — ஏன்! ரோலா இருப்பான் என்னுடன்.

கோரா — வாஸ்தவம்தான்; யுத்த முழக்கத்தில் போரடர்ந்த விடத்தில் ரோலாவைப் பார்க்கலாம். பழிதீர்க்க முடியுமே யன்றி யுங்களைக் காப்பாற்ற முடியுமோ, அவரால்? கொலை தொடர்ந்து செல்கையில் உங்களை அவர் மறப்பினு மறக்கலாம். இவைகளெல்லா மிருக்கட்டும். உயிரிழந்தாலன்றி நானுங்களை அரைக்கணமும் விட்டுப் பிரிகிறதில்லை யென்று பிரதிஞ்ஞை செய்துளேனே—எனது இனிய—நான் சத்தியம் பிறழ்வது முங்களுக்குச் சம்மதமோ?

அலான்ஸோ — ஆயின் சரி. ரூபத்திலும், தீரத்திலும், சாந்தத்திலும், சத்தியத்திலும் உத்கிருஷ்டமான எனது உயிரே, எனது அன்பே; சகலமும் நீதானெனக்கு. ஆகா! காதல் மனையாளைக் கடந்து சென்று சுவர்க்கம் தேடப்புகும் மதியிலிகளும் இவ்வுலகில் இருக்கிருர்களே!

கோரா — என்னிறைவ! உங்களுக்குத் தக்க வந்தனம் அளிப்பதெப்படி என்று தெரியாமல் திகைத்து நிற்கிறேன். மௌனமே அந்தரங்கக் காதலின் அறிகுறி. அதை ஒலியால் உரைக்க முயல்வோர் வழிதப்பிவிட்டவராவர். (உள்ளே இரைச்சல்) நமதரசர் வருகின்றனரோ?

அலான்ஸோ — இல்லை. பலியிடும்போது கோவிலைச் சுற்றிக் காவலாகச் சேவகர்களை நம் சேனாதிபதி நிறுத்துவது. இதோ ஜயவீர சிகாமணி ரோலா வருகிறார்.

ரோலா — (உள்ளே) ஆயின் நமது சேனையைக் குன்றின்மேல் பகைவரை நோக்கி அணி வகுத்து நிறுத்தி வை.

[ரோலா வருகிறான்]

கோரா — ரோலா, என் நண்ப, எனது சகோதர!

அலான்ஸோ — ரோலா! என் நண்ப, எனது பேருபகாரியே! நீ எங்க ளிருவருக்கும் செய்ததற்குப் பிரதி யுபகாரம் நாங்கள் எங்கள் வாழ்நாட்களுக்குள் எப்படிச் செய்யப் போகிறோம்.

ரோலா — உங்கள் வாழ்நாட்களைச் சந்தோஷத்திலும் சமாதானத்திலும் கழியுங்கள். ரோலா அதைக் கண்ணாரக் காணட்டும். வேறு என்ன வேண்டும்!

கோரா — இதோ இந்தக் குழந்தையைப் பார் — எனது உயிரே இவன் — ஆனால் தந்தையினு முன்னை இவன் சிறிது குறைய மதித்தாலும் — உன்னிடத்துக் குறைந்த அன்பு வைத்தாலும்— இதோ பார் அவன் தாயின் சாபம் அவன் தலைமேலேயே —

ரோலா — ஓ போதும் போதும். இந் நன்றிக்குப் பாத்திரனாக நானென்ன பெரும் காரியம் செய்து விட்டேன்? என் காதல் நாடியது

கோராவின் பாக்கியத்தையே. இதோ! கோரா வெகு சந்தோஷமாயிருக்கிருள். எனதெண்ணம் நிறைவேறி விடவில்லையா? எனக்குத் தக்க வெகுமதியும் கிடைத்துவிட வில்லையா? கோரா, ஒரு நண்பன் சொல்லும் வார்த்தையைக் கேள். நீ போய்விட வேண்டும்; நம் நாட்டு ஸ்திரீகளும், விருத்தர்களும் குழந்தைகளும் ஒளிந்திருக்கும் குகைக்குச் சென்று பத்திரமாய் இரு, போ.

**கோரா.** — நீயும் என் நாதரும் இருக்கு மிடத்தை விடவா பத்திரம் அது, ரோலா?

**ரோலா** — பிஸாரோ நம்மேல் திடீரென்று பாயப் போவதாகத் தெரிய வருகிறது. கோரா, நீ இருப்பதால் எங்களுக்குப் பிரயோஜனமொன்று மில்லாமற் போவதுமன்றி, பெரும் தடையாகவு மிருப்பாய்.

**கோரா** — தடையாகவா?

**ரோலா** — ஆமாம். நாங்கள் — உன் கணவனும், உன் நண்பனும் — உன் மேல் வைத்திருக்கும் ஆசை இவ்வளவென் றறிவாய். நீ எங்களருகில் இருக்கிருயா? — ஆயின் எங்களெண்ணம் எங்கள் சக்தி, ஒன்றும் எங்களுடைய தன்று. மூற்பழி எங்கிருந்து தீர்ப்பதப்போ? ஆயிரம் வருகிறதா யிருந்தாலும் நீ யிருக்குமிடத்தை விட்டு அடி எடுத்து வைப்போமோ? உன்னைக் காக்கவன்றி ஆபத்திலுள்ள அயலோனுக்குதவி புரியவும் கூடுமோ? உண்மைக் காதலனுக்குத் தன் கண்மணி யுத்த அபாயத்தில்

இல்லை யென்று திட்டமாய்த் தெரிந்தாலன்றி போர் முகத்தில் அவனுடலே அவனுக்குச் சுவாதீனமா யிராதன்றோ!

அலான்ஸோ — வந்தனம், எனது நண்ப! இவை-களையே அவளுக்கு நான் எடுத்துரைக்க வேண்-டுமென் றிருந்தேன்.

கோரா — இவ்விதம் பராக்கிரமமன்றிப் பயத்தை யுண்டாக்குவது காதல் மேற்கொண்ட கோழைத் தனம். இதனால் எனக்கு முகஸ்-துதியே யன்றித் திருப்தி யில்லை. மனைவி ஒருத்தியும் நம்பாளிதை.

ரோலா — குழந்தையைப் பெற்ற தாயும் செவி கொடாளோ இதற்கு?

கோரா — (குழந்தைக்கு முத்தம் கொடுக்கிறாள்) இது போதும்! என்னை என்ன வேணுமானாலும் செய்யுங்கள். எனது நண்ப, எனது கணவ! சொன்ன விடம் செல்லத் தயாரா யிருக்-கிறேன்.

அலான்ஸோ — எனது விக்ரகமே! இதற்கு மிக்க வந்தனம். (உள்ளே சப்தம்) கேள்! அரசன் கோயிலுக்குப் போகிறார். என்ன, ரோலா, திடீரென்று பாயப் போகிறார்க ளென்றென்-னவோ சொன்னாயே. எனதாட்களுள் ஒரு-வனைக் காணோமாம்; எதிர்த்தோ, அபக-ரித்தோ அவனைக் கொண்டனர்; யானறியேன்.

ரோலா — எப்படியானா லென்ன. நாம் எதற்கும் தயாரா யிருக்கிறோம். வா, கோரா, நமது

காரிய நிமித்தம் நீ கடவுளுக்கு ஜபம் பண்ணு. உடல் நடுங்கும் மனைவியும், அன்பு நிறைந்த தாயும், பக்தியுடன் அனுப்பும் பிரார்த்தனையே, அன்பர்க் கருள்புரியும் இரக்கம் நிறைந்த நம் கடவுளின் சிம்மாசனத்தைச் சீக்கிரம் எட்டுகின்றது. (போகிறார்கள்)

## இரண்டாம் களம்

இடம் — சூரியபகவான் கோயில். குருமாரும், கன்னிகைகளும் இருக்கிறார்கள். அத்தாலிபாவும் அவன் படைத்தலைவர்களும் ஒருவழியாய் வருகிறார்கள். மற்றொரு வழியாய் ரோலாவும் அலான்ஸோவும், கையிற் குழந்தையுடன் கோராவும் வருகிறார்கள்.

**அத்தாலிபா** — அலான்ஸோ, (ரோலாவைப் பார்த்து) உறவினரே வருக. (கோராவைப் பார்த்து) இத்திவ்ய பாலனைப் பெற்ற உனது பாக்யமே பாக்யம்.

**கோரா** — குடிகளைக் குழந்தை போற் காத்தருளும் எங்களிறைவனுக்குச் சூரிய பகவான் எந் நாளும் வெற்றி தருவாராக.

**அத்தாலிபா**—'குடியுயரக் கோல் உயரும்' — — — நண்பர்காள், நமது போர் வீரர்கள் எந் நோக்க கொண்டுளர்?

**ரோலா** — தாங்கள் மேற்கொண்டிருக்கும் செய்கையின் தன்மைக்கு எவ்விதத்திலும் குறைந்ததன்று. ஜயம் அல்லது சாவு நமது அரசன்;

நமது தேசம்; நமது தெய்வம் என்று ஆரவாரம் செய்யாநின்றனர்.

**அத்தாலிபா** — ரோலா, நீ விபத்துற்ற வேளையில் வெற்றிக் கொடி தாங்கிப் போர்முகம் செல்லுமுன், நமது போர் வீரர்களின் பராக்கிரமத்தைச் சற்றுத் தூண்டுவ துண்டல்லவா?

**ரோலா** — ஆம், ஆயினும் — இப்படிப்பட்ட விபத்து இவ்வளவு கிட்டியிருக்க — வார்த்தைகளாலா தூண்ட வேண்டும் இவர்கள் சௌரியத்தை இப்பொழுது! எனது வீரசிங்கங்காள்— எனது கஷ்ட நஷ்டத்தையும், எனது கீர்த்தியையும் கூட நின்றனுபவிக்கும் நண்பர்காள்!— உங்கள் ஹிருதயத்தினின்று எழும் வெஞ்சினத்தை விடவா, ரோலாவின் வார்த்தைகள் வீர்யம் கொடுக்கப் போகின்றன இப்பொழுதுங்களுக்கு? இல்லை. இக் கடற்கொள்ளைக்காரர் நம தாஸ்தியெல்லாம் அபகரிக்கிறதுமன்றி, நம்மை ஏமாற்றி மயக்கப் பிரயோகிக்கும் அப் பாதகர்களின் வஞ்சனை மொழிகளின் கேடுகெட்ட தன்மையையும், என்னளவு, நீவிரும் அறிவீர்கள். அவர்களை இப் போர்க்குத் தூண்டும் இழிநோக்கத்தின் தன்மையையும், நம்மை இதே போர்க்குத் தூண்டும் தூயநோக்கத்தின் தன்மையையும், என்னைப்போலவே, நீங்களும் சீர்தூக்கிப் பார்த்துள்ளீர்கள். அவர்கள் அகங்காரம் மேலிட்டு, அதிகாரத்திற்காகவும், கொள்ளைக்காகவும், அரசிற்காகவும் படையெடுத்து வந்திருக்கிறார்கள். நாமோ, நமது நாட்டிற்காகவும், தேவா-

லயங்களுக்காகவும், நமது மனைவிமக்களுக்காக வும் சண்டைசெய்ய நேரிடுகிறது. அச் சைனி-யம், கள்வர் தலைவனைப் பின்பற்றிச் செல்வ-தற்குக் காரணம் பயமே. தாங்கள் கீழ்ப்-படியும் சக்தியைப் பகைக்கிறார்கள். நாமோ, அன்பு மேலிட்டு அரசனுக்கும், பக்தி மேலிட்-டுக் கடவுளுக்கும் சேவகம் செய்கிறோம். அவர்கள் கோபத்தில் நாசமும் சாந்தத்தில் துக்கமும் அடைகிறார்கள். என்னவோ, நமது ராஜாங்கத்தைச் சீர்திருத்தி, நமது எண்ணங்-களை மேம்படுத்தி, நம்மைப் பிழையினின்று விடுவிக்கத்தான் தாங்கள் வந்திருப்பதாக வீம்பு பேசிக்கொள்கின்றனர்! ஆம். காமக் குரோதாதிகளில் பந்தப்பட் டுழலும் இக் கீழ்மக்கள்களாலா நமக்கு ஞானோதயம் உண்-டாகப் போகின்றது? நம்மைக் காப்பாற்ற வருகிறோம் என்கின்றனர்: ஆம், ஆட்டுக் குட்டிக்குக் கழுகு அளிக்கும் அபயம்தான்—வட்டமிட்டு, வட்டமிட்டு விழுங்கி விடுவது. பூர்வகாலம் தொட்டு நாம் அன்புடன் ஆத-ரித்துவரும் குலாசார மதாசார தேசாசாரங்-களைக் கைசோரவிட்டு, இவ்வன்னியர் காட்டும் நூதன அனுசரணைகளையும், அதனுடன் அன்னியமதக் கடவுளையும், நாம் கைப்பற்றவேண்டு மென்று கட்டாயப்படுத்த எங்கிருந்து வந்த திவர்களுக்குத் தைரியம். இதுவே நமது உத்-தரம்—"மகிமைபெற்ற நமதரசரைக் குடிகளே தெரிந்தெடுத்தார்கள். நாம் வழிபடும்மதம் ஒப் பற்ற ஜீவகாருண்யத்தை உபதேசிப்பதுமன்றி,

மரணத்திற்குப்பின் மோட்ச முண்டென்னும் நம்பிக்கையையும் நமக்குக் கொடுக்கின்றது.'' சொல்லுங்களிதை இக் கள்வர்களுக்கு; வேறெவ்வித மாறுபாடுகளும் எங்களுக்கு வேண்டாமென்று சொல்லிவிடுங்கள். அதுவும் அவர்கள் காட்டும் வழியைத் திரும்பியும் பார்க்கமாட்டோம் என்று சொல்லுங்கள்.

[பெருவிய போர்வீரர்கள் பெரும்கோஷம் செய்து தலை வணங்குகிறார்கள்]

அத்தாலிபா — (ரோலாவைத் தழுவுகிறான்) நல்லது நண்பர்காள். இத் தூய உண்மையை அனவரதம் மனத்தில் ஊன்றி அர்ச்சனையை ஆரம்பிப்போம்.

[சப்தமின்றி எல்லோரும் வரிசை வரிசையாய் நிற்கின்றனர். குருக்கள் பீடத்தைச் சுற்றி நிற்கக் குருத்தலைவர் அர்ச்சனை செய்ய ஆரம்பிக்கின்றனர். தலைமைக்குரு சொன்னதை மற்ற குருக்களும் சூரிய கன்னிகைகளும் பின் பாட்டாகச் சொல்லுகின்றனர். மேலிருந்து அக்கினி பீடத்தின்மேல் வந்து இறங்குகிறது. எல்லோரும் எழுந்து புகழ் பாடுகின்றனர்.]

நமது நைவேத்தியம் அங்கீகரிக்கப் பட்டது. நண்பர்காள் வாளையுருவிச் சண்டைக்கு ஆயத்தமாகுங்கள்.

[ஒரேனோ வருகிறான்]

ஒரேனோ — பகைவர்! பகைவர்!

அத்தாலிபா — எவ்வளவு தூரத்தில்?

ஓரேனே — அக் குன்றின் சிகரத்தினின்று நான் நாலுதிசையும் நோக்குங்கால், பகைவர் படை கிளப்பி நமது கூடாரமுகமாய் வருவதைக் கண்டேன். நாமெல்லோரும் இவ்விடம் வந்து விட்டது அவர்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

ரோலா — வெகுதூரம் வராமுன்னர் நாமே எதிர் சென்று சந்திக்கவேண்டு மவர்களை.

அத்தாலிபா — நீங்களோ, பெண்காள், உங்களரு-மை மைந்தர்களுடன் குறிப்பிட்ட விடத்திற்கு விரைவிற் போய்ச் சேருங்கள்.

கோரா — ஓ! பிராணநாதா! (அலான்ஸோவைத் தழுவிக் கொள்ளுகிறாள்)

அலான்ஸோ — மறுபடியும் சந்திப்போம் நாமிரு-வரும்.

கோரா — போவதற்கு முன்னால் எங்களை இன்னொரு தரம் வாழ்த்திச் செல்லுங்கள்.

அலான்ஸோ — எனது அன்பே, உன்னையும், எனது செல்வமே உன்னையும் கடவுள் வாழ்த்தி ஆசீர் வதிப்பார்.

அத்தாலிபா — புறப்படுங்கள்! புறப்படுங்கள்! ஒரு நிமிஷமும் தாமதிக்கலாகாது.

கோரா — விடை பெற்றுக் கொள்கிறேன், எனதன்ப! உனதுயிர் எனதென்பதை மாத்திரம் மறவாதே.

**ரோலா** — (கோரா அவனருகிற் செல்லும்போது) ரோலாவுக்குப் பிரிவுமொழி யொன்றுகூட வில்லையா?

**கோரா** — (ரோலாவின் கையைப் பிடித்துக்கொண்டு) போய்வருகின்றனையா? தைரிய லக்ஷ்மியினருள் உனக்குச் சம்பூர்ணமா யிருக்கட்டும்: என் பிராணநாதரை மாத்திரம் காப்பாற்றியழைத்-துவா.

[கோரா குழந்தையுடன் போகிறாள்]

**அத்தாலிபா** — (தன் வாளையுருவிக் கொண்டு) எனது சகோதரர்களே, எனது மைந்தர்காள், எனது நண்பர்காள், உங்கள் பராக்கிரமம் இவ்வள வென்ப தறிவேன். யுத்தத்தில் தோல்வி யடைவோ மென்று தோற்றினால், மனத் தளர்ச்சிக்குக் கடைசி யிடம் கொடுங்கள். போர் முகத்தில் வெற்றி பெறுவோமானால், பகைவர்க்கு இரக்கம் காட்டுவது உங்கள் முதல் கருத்தா யிருக்கட்டும். அலான்ஸோ, மலைக் கணவாயைக் காத்து நில் நீ: வனத்-திற்கு வலப்புறம் ரோலாவினிடம். நானோ நேரெதிர் முகமாய்ச் சென்று சண்டையில் கை கலக்கிறேன். ஒன்று, நான் என் பிரஜை-களைக் காப்பாற்றிக் காண வேண்டும், அல்லது என் பிரஜைகள், தங்கள் அரசன் வெட்டுண்-பதைக் காண வேண்டும். அதுவரையில் போர் முகத்தினின்று மீளேன்.

[வரிசையர்ப் போகிறார்கள்]

## மூன்றும் களம்

இடம் — கோவிலுக்கும் கூடாரங்களுக்கும்
இடையிலுள்ள ஓர் மரமடர்ந்த விடம்.

[ரோலாவும் அலான்ஸோவும் வருகிறார்கள்.]

ரோலா — இவ்விடத்தில்தான் — என் நண்ப — நாம் பிரியவேண்டும். கூடிய சீக்கிரத்தில் நாம் சேர்வோம் என்று நம்புகிறேன்.

அலான்ஸோ — அல்லது மறுபடி முகம் காணுமற் போகிறேமோ, என்னவோ — ரோலா! சற்று நில்; சற்று! ஒரு வார்த்தை, ஒரு கடைசி விண்ணப்பம்.

ரோலா — இன்றையதினம் நம் பாஷையில் 'யுத்தம்' என்கிறதைத் தவிர வேறு வார்த்தை கிடை-யாதே.

அலான்ஸோ — ஆம், ஆயினும் ஒரு வார்த்தை — ஒன்று — கோரா!

ரோலா — கோரா! — சொல், சொல்!

அலான்ஸோ — அடுத்த நிமிஷம் நமக்கு —

ரோலா — சாவோ, ஜயமோ!

அலான்ஸோ — நம்மிருவரில், ஒருவனுக்குச் சாவும், மற்றவனுக்கு ஜயமாயுமிருக்கலாமே.

ரோலா — அல்லது இருவரும் இறக்கலாம்.

அலான்ஸோ — அப்படி ஆயின், என் மனைவியையும் மைந்தனையும் நமதரசனும் கடவுளும் தான் காப்பாற்ற வேண்டும் — ஆனல் — நான்

மாத்திரம் விழுவேனுனல், ரோலா, நீதான் என் வார்ஸா யிருக்கவேண்டும்.

ரோலா — எப்படி ?

அலான்ஸோ — கோரா உனக்கு மனைவியாகட்டும் — எனது மைந்தனுக்கு நீயே தந்தையாயிரு.

ரோலா—விழித்துக்கொள் அலான்ஸோ! இத்தகைய கோழை எண்ணங்களை உதறிவிடு உடனே.

அலான்ஸோ — ரோலா, எவ்வளவோ பிரயத்தனப் பட்டேன். என்னவோ, இவ்வித எண்ணம் என் மனதைவிட்டு நீங்கமாட்டேனென்கிறது. ஆனுல் யுத்தத்தில் இவ்வித சலனங்களெல்லாம் என்னை யசைக்கா வென்பதுனக்குத் தெரியுமே: நான் வேண்டுவதுபோலச் செய்கிறேனென்று வாக்களிப்பாய்.

ரோலா — கோராவிற்குச் சம்மதமானுல் — ஆம் — வாக்களிக்கின்றேன்.

[கையடிக்கிருன்]

அலான்ஸோ—இதுவே எனது கடைசிக் கோரிக்கை என்று அவளிடம் சொல்! அவளுக்கும் என் குழவிக்கும் எனது கடைசி யாசீர்வாதத்தையும் சொல்.

ரோலா — செய்கிறேன்—சரி, இப்பொழுது நம் நம்மிடங்களுக்குச் செல்வோம். இனி நமது வாட்களே பேசட்டும்.

[கத்தியை உருவிக் கொள்கிருர்கள்]

அலான்ஸோ — அரசனுக்காகவும் கோராவிற்காகவும்!

ரோலா — கோராவிற்காகவும் அரசனுக்காகவும்!

[போகிறார்கள்]

## நான்காம் களம்

இடம் — பெருவியர் கூடாரம்.

[ஒரு கண் தெரியாத கிழவனும் அவன் பையனும் வருகிறார்கள்]

கிழவன் — ஒருவரும் இன்னும் கூடாரத்திற்குத் திரும்ப வில்லையா?

பையன் — ஒரு தூதன் மாத்திரம் வந்தான். கோவிலினின்றே யுத்தத்திற்கு நேராகப் புறப்பட்டு விட்டார்களாம்.

கிழவன் — கேள்! போரின் பேரொலி கேட்கிறதிப்போ. ஐயோ, இக் கண்கள் மாத்திரம் போகாமலிருந்தால் இப்பொழுதுகூடக் கத்தி எடுத்துச் சென்று வீரசுவர்க்கம் சேரும் வழியைத் தேடுவேனே! — வேறு ஒருவரும் இல்லையே இங்கே பையா?

பையன்—இல்லை! — அப்பா சாக்கிரதையாயிருப்பாரோ!

கிழவன் — அவன் கடமையை அவன் செய்து விடுவன். உன்னைப் பற்றித் தான் எனக்கு அதிக விசாரம் குழந்தாய்.

பையன் — உங்க கிட்டவே இருக்கிறேன், தாதா.

கிழவன் — ஆனால் சத்துருக்கள் இங்கே வருவார்களானால், பையா, உன்னை இழுத்துக் கொண்டு போய் விடுவார்களே.

பையன் — அப்படிச் செய்யவே மாட்டார்கள், போங்கள், தாதா. உங்களுக்கோ வயதாய் விட்டது. கண்ணும் தெரியாது. அப்படியிருக்க என்னை இழுத்துக் கொண்டு போய் விட்டால் நீங்கள் திண்டாடிப் போய் விடுவீர்கள் என்று ஒரு நொடியில் கண்டு பிடித்துக் கொள்ள மாட்டார்களா! ஹ! ஹ!

கிழவன் — ஐயோ பாவம்! அந்த ராக்ஷதர்களின் ஹிருதயம் எவ்வளவு குரூரமானதென்பது-உனக் கெப்படித்தெரியும். (பீரங்கி சப்தம் கேட்கிறது) இதோ, சப்தம் வெகு சமீபத்தில் கேட்கிறது. கொலை புரியக் கொண்டிருக்கும் இக் கொடியோரின் அக்னி இயந்திரங்களின் பேரொலியைக் கேட்டாயா, பையா. (தூரத்தில் இரைச்சல் கேட்கிறது) என்னை யறியாமலே கையில் கத்தி யிருக்கிற ஞாபகத்தோடு, ஒவ்வொருதரம் சப்தம் கேட்டதும் கையை இறுகப் பிடிக்கிறேன்! ஐயோ! என் தேசத்திற்காக நானிப்பொழுது ஜபம் தானே பண்ணலாம். சகலமும் வல்ல கடவுளே * 'இன்கா' வையும் அவன் வீரர்களையும், காப்பாற்றி யருள்வாயாக.

---

* 'இன்கா' என்பது அத்தாலிபாவின் சந்ததிப் பெயர்.

பையன் — ஓ! தாதா! சில சிபாய்கள் ஓடுகிறார்-களே —

கிழவன் — ஸ்பானியரா, பையா?

பையன் — இல்லை, பெருவியர்!

கிழவன் — என்ன! பெருவியர் புறங்காட்டி யோடு-வதா! — ஒருபோது மிராது.

[இரண்டு பெருவிய சிபாய்கள் வருகிறார்கள்.]

ஓ இவர்களை விசாரி, பையா? — எங்கிருந்து வருகிறீர்கள்? யுத்தம் எவ்வளவில் இருக்கிறது?

சிபாய் — நிற்க நேரமில்லை; குன்றிற்குப் பின்னால் நிறுத்தி வைத்திருக்கும் சைனியத்தையும் அழைத்து வர அனுப்பி யிருக்கிறார்கள். இன்று நமக்கு நல்ல காலமில்லை.

[போகிறார்கள்.]

கிழவன் — போங்கள், ஆயின், சீக்கிரம் போங்கள்.

பையன் — ஈட்டி முனைகளனேகம் வெய்யிலில் பிர-காசிக்கின்றன இப்பொழுது.

கிழவன் — அது நம் சைனியம்தான். இவ்வழி தான் வருகிறார்களோ?

[ஒரு பெருவிய சிபாய் வருகிறான்.]

பையன் — சிப்பாய், எனது குருட்டுத் தாதா சொ-ல்வதைக் கேள்.

சிபாய் — திக்கற்ற தாதாவை மலையுட்போய் ஒளி-ந்து கொள்ளச் சொல்லத்தான் வந்தேன்; எல்லாம் போய்விட்டது. அரசனும் காய முண்டார்.

கிழவன் — சீக்கிரம், பையா! குன்றிற்கு அழைத்-துச் செல். அங்கிருந்து நீ சண்டையை நன்-ருய்ப் பார்க்கலாம்.

[காயப்பட்ட அத்தாலிபா, ஓரேஞே உத்தியோ கஸ்தர் முதலானவர்களுடன் வருகிருன்.]

அத்தாலிபா — காயத்தைக் கட்டியாய் விட்டது. பலமான காயமுமன்றிது. நான் யுத்தத்திற்கு மீளலாமே.

ஓரேஞே — அடியேனை மன்னிக்கவேண்டும்; எங்களரசனின் இரத்தம் ஒருதரம் சிந்திவிட்டால், பிறகு அவர் யுத்தகளத்தினின் றகலும்வரை-யில் நமக்கு ஜயம் தோற்ருதென்று தூய கொடிதாங்கி நிற்கும் தலைமைக்குரு சொல்லியிருக்கிருர்.

அத்தாலிபா — இதுவென்ன கஷ்டமிது! எனது ஒப்பற்றவீரர்களின் பராக்கிரமச் செய்கைகளை நான் காணவும் கொடுத்துவைக்க வில்லை போலும்; இருக்கட்டும், நீங்கள்போய் உங்களுங்கள் வேலையைப் பாருங்கள். எனக்காக இங்கொருவரும் இருக்கவேண்டியதில்லை. விழுந்த உங்கள் தோழர்களின் இரத்தப் பழி-யைத் தீருங்கள்.

[ஓரேஞே, உத்தியோகஸ்தர், சிப்பாய்கள்]
போகிருர்கள்]

நான் வியாகுலத்தால் உருகிப் போய்விடமாட்-டேன். என கதியைப்பற்றி எனக்குச் சிறிதும் கவலை இல்லை. என் பிரஜைகளே, உங்களுக்-காகத்தான் நான் படும்பாடெல்லாம்.

**கிழவன்** — (முன்னுக்கு வந்து) அதிர்ஷ்டஹீனனொருவன் பேசவில்லையா இங்கே! — இவ்விதம் முறையிடுகிறவர் யாரோ?

**அத்தாலிபா** — நம்பிக்கையை முற்றிலும் கைவிட்ட ஒருவன்.

**கிழவன்** — நம்மரசர் உயிருடனிருக்கின்றாரா?

**அத்தாலிபா** — அரசன் இன்னும்கூட உயிர் வைத்திருக்கிறான்.

**கிழவன்** — ஆயின் நீ சிறிதுகூட கைவிடப்பட்டவனாகாய். அத்தாலிபமகாராஜன் தன் குடிகளுள் மிக்க அற்பனையும் கூடக் காப்பாற்றுகின்றார்.

**அத்தாலிபா** — ஆம், அத்தாலிபாவைக் காப்பாற்றுவதாரோ?

**கிழவன்** — நியாயத்தை நிலைநிறுத்தி எங்கும் வியாபித்திருக்கின்ற சகலமும் வல்ல ஜகதீசன், நமது இராஜோத்தமனின் தர்மசிந்தை குடிகளின் அன்பையும் கடவுளின் காருணியத்தையும் ஒருங்கே பெறுகின்றதல்லவா!

**அத்தாலிபா** — (ஒருபுறமாய்) நான் என் விதியை நொந்திருப்பேனானால் என்ன தெய்வ துரோகியாயிருந்திருப்பேன்! ஈசா, சகலமும் வல்ல உனது செய்கைகள்தான் எவ்வளவு வியக்கத் தக்கன! நரகவேதனை இதனிலும் கொடியதன்றென்று எண்ணியிருக்கும் இந்த வேளையிலே, — என்னைப் பிரம்மானந்த பரிதனாக்கி

விட்டனை — குடிகள் என்னை நேசிக்கிறார்கள் என்னும் நம்பிக்கையை மெய்ப்படுத்தினையே.

**பையன்** — (முன்னுக்கு வந்து) ஓ, தாதா! ஓ, ஐயா! நம்மேல் வெறிகொண்டு பாய்ந்துவரும் அவ்வகோர ரூபங்களைப் பார் அதோ!

**அத்தாலிபா** — ஹா! ஸ்பானியர்கள்! நான், ஹாம், அத்தாலிபா — துர் அதிர்ஷ்ட தேசப்பிரஷ்டனே! அரசனுயிர் ஒன்றை மீட்டிப் பார்க்கக் கையிற் கத்திகூட வில்லையே!

[தவில்லா, அல்மாக்ரோ, ஸ்பானிய போர்ச்சேவகர்கள் வருகிறார்கள்.]

**தவில்லா** — அவன் தான் — நமதெண்ணம் நிறைவேறி விட்டது — அவனை எனக்கு நன்றாய்த் தெரியும் — அரசன் தான் அவன்.

**அல்மாக்ரோ** — போவோம்; கவர்ந்த வெகுமதியுடன் விரைந்து செல்லுங்கள். இப் பெருவியர் ஓடுகிறவர்களானாலும் அவர்களருகில் நெருங்கவேண்டாம். இவ்வழி, இவ்வழி செல்வோம்.

[வந்தவர்கள் அத்தாலிபாவைச் சிறை பிடித்துச் செல்கிறார்கள்.]

**கிழவன்** — நமதரசனை அது! அவரது திவ்ய ஸ்வரூபத்தைப் பார்க்கும் பாக்கியம் பண்ணவில்லையே இப் பாவிகிழவன். பையா, என்னை அம் மூர்க்கர்கள் கைக்கெட்டுந் தூரத்தில் அழைத்து மாத்திரம் சென்றிருப்பாயானால்—

பையன் — தாதா! நமது போர்ச்சேவகர்கள் இங்கே ஒளிந்துகொள்ள ஓடிவருகிறார்கள்.

கிழவன் — அப்படிக் கிராது — அரசனைக் காப்பாற்றவிருக்கும் — நமதரசனை ஒருபோதும் கைவிடார். (உள்ளே ஆரவாரம்)

[பெருவிய இராணுவ அதிகாரிகளும் போர்ச் சேவகர்களும் ஓடிவருகிறார்கள். பின்னால் ஒரேனோ வருகிறான்.]

ஒரேனோ — நில்லுங்கள்! நிற்கத்தான் வேண்டும்! ரோலா கூப்பிடுகிறார் உங்களை.

இராணுவ அதிகாரி — அவர்களது கொடிய போர் யந்திரங்களுக்கு முன்னால் எங்களால் நிற்க முடியாது.

[ரோலா வருகிறான்]

ரோலா — நில்லுங்கள்! நீசர்களே! கோழைகளே! என்ன உயிரழிவதற்குப் பயந்து மான மழிவதற்குப் பயப்பட வில்லையா நீங்கள்? நான் கொண்டிருக்கும் இக்கோபத்தின்மேல் ஆணையாய், இங்கிருந்து ஒரு அடி நகருபவனை இரு துண்டாய்க் கிழித்தெறிவேன்! இல்லையாயின் இவ் வபகீர்த்தியை கண்ணுருவண்ணம் உங்கள் தலைவனாகிய என் மார்பில் அவ் வாண்மையற்ற கத்தியால் குத்திவிடுங்கள். எங்கே நமதரசன்?

ஒரேனோ — இக்கிழவரும் பையனும் சொல்வதிலிருந்து, நம் அரசனைச் சிறைப்படுத்திச் சென்றிருக்கின்றனர்போல் தோன்றுகிறது. அதோ பாருங்கள். இன்னும் அப் பாதகர்கள் மறையவில்லை.

ரோலா — ஆயின் 'இன்கா'வையும் சிறைப்படுத்திச் சென்றனரோ! கேளுங்கள் கேடுகெட்ட இராஜ பக்தியற்ற கும்பலே! அதோ பாருங்கள்! உங்களரையன், உங்கள் தந்தை, அத்தாலிபா மகாராஜனுக்கு விலங்கிட்டு அக்கொடியோர் இழுத்துச் செல்வதால் உண்டாகி எழும் தூளியைப் பாருங்கள்! இப்பொழுது கூடுமானல் பறந்து சென்று உங்களிழிவான உயிரைக் காப்பாற்றிக் கொள்ளும் வழியைத் தேடிக் கொள்ளுங்கள்.

கிழவன் — ரோலாவின் குரலன்றோ விது — என் கண்களைக் குத்தின புண்ணிய புருஷன் நீடூழி வாழ்வானாக. இல்லாவிடில் ரோலாவின் பின் செல்லத் துணியாமல் நடுநடுங்கி விழித்து நிற்கும் இவ் வெட்கம் கெட்ட கழுதைகளை எவ்விதம் கண்டு சகிப்பேன் — அதுவும் நம்மரசனை மீட்பதற்கு — கண்களே! நீங்கள் செய்த பாக்யமே பாக்யம்.

ரோலா — பகைவரின் பீரங்கிக்குப் பின்னிட்டு, இவ் வயோதிகன் வசையையும் சகிக்கிறீர்களோ? பார்வையற்ற இவ் வயோதிக வீரனுடலிற் பொங்கி வீணே ஓடும் தீர ரத்தத்தின் ஒரு பிந்து உங்கள் உதிரத்திற் கலந்திருக்கலாகாதா! தெய்வமே! என்னை இத் தருணத்திற் கைவிட்டுச் செல்வீர்களானல் படுநாசமாய்ப் போகக் கடவீர்கள்! — போங்கள் — போய்த் தான் விடுங்கள்—நானே செல்கிறேன் — தனியாக—எனது சக்ரவர்த்தி சிரேஷ்டனுடன் சேர்

த்தியோடு மாய்த்துக் கொள்ளுகிறேன் என துயிரை !

சிப்பாய்கள் — பிரபு ! நாங்களும் வருகிறோம்.

[எக்காளம் ஊதி ரோலாவிற்குப் பின்னால் பாய்ந்து ஓடுகிறார்கள்]

கிழவன் — ஓ ரோலா ! நீ தெய்வாம்சம்! — சூரிய பகவானே, ரோலாவிற் குதவியாக மின்னலிடியைச் சற்றுக் கொடுத்து வை. ஏதாவது ஒரு உயரத்திலேறி, பையா, கவலையா யிருக்கும் எனக்கு என்ன நடக்கிறதென்று சொல். ஆய் விட்டதா?

பையன் — இதோ இப் பாறையின்மேலேறி அந்த மரத்தில் தொத்திக்கொள்ளுகிறேன் (அப்படியே செய்கிறான்) ஆ — இப்பொழுது தெரிகிறது — இப்பொழுது—ஆமாம் — ஸ்பானியர் அதோ திரும்பிச் செல்லுகிறார்கள்.

கிழவன்—ரோலா பின்தொடரவில்லையா அவர்களை?

பையன் — ஆம் ஆம் — அம்புபோற் பாய்கிறார். இதோ நம் சிப்பாய்களைக் கைகாட்டி யழைக்கிறார் பார் (பீரங்கி வெடிக்கிறது) இதோ ! நெருப்பும் புகையும். இதோ !

கிழவன் — ஆம், இப் பிசாசுகளின் ஆயுதம் நெருப்புத்தானே !

பையன் — புகையைக் காற்றடித்துக் கொண்டு போய்விட்டது. அதோ கைகலந்து விட்டார்கள்.

கிழவன் — அரசர் தெரிகிறாரா கண்ணுக்கு?

பையன் — இதோ! ரோலாவும் அவராருகிலேதானிருக்கிறார். பொரி பறக்க இருபுறமும் அடிக்கிறார் பார்!

கிழவன் — நீடூழி வாழ்க ரோலா! ராக்கதர்களை விடாதே.

பையன் — தாதா! தாதா! ஸ்பானியர் பறந்தோடுகின்றனர்! ஓஹோஹோ! — அரசன் ரோலாவைக் கட்டிக் கொள்ளுகிறார்; இதோ பார்!

[பையன் சந்தோஷத்தில் குதிக்கிறான். உள்ளே எக்காளமும் பேரிரைச்சலும்]

கிழவன் — (முழங்காற் படியிட்டு) பிராணமூலமாகிய தெய்வமே! என் வாழ்நாட்களுள் இந்த நிமிஷம் ஒன்று எனக்கு அளித்ததற்காக, குரல் நடுங்கும் இத்தொண்டையன் உன்னை எவ்வாறு வாயார வாழ்த்தித் துதிக்கப் போகிறேன்! — பையா, கீழே வா, — உனக்கொரு முத்தம். நிற்கக்கூடச் சக்தியில்லை எனக்கு.

பையன் — (அவனருகில் ஓடிவந்து) என்னைப் பிடித்துக் கொள்ளேன்! தாதா! ஏன் இப்படி நடுங்குகிறது உன் உடம்பு —

கிழவன் — இதுதான் ஆனந்த பரவசம் பையா!

[கிழவனுக்குப் பையன் கோல்கொடுத்து அழைத்துச் செல்கிறான்]

[அத்தாலிபா, ரோலா முதலான போர்த் தலைவர்களுடன் வருகிறான்]

**அத்தாலிபா** — இத்தேசத்து ஜனங்களுக்காக — அவர்களரசனை இன்று நீ இரட்சித்ததற்காக— ஞாபகார்த்தமாக நீ இவ் வைரமாலையை அங்கீகரிக்க வேண்டும் ரோலா.

[தன் கழுத்தில் அணிந்திருக்கும் வைரமாலையைக் கழற்றி ரோலாவிற்குக் கொடுக்கிறான்]

அதன்மேல் விழும் இக்கண்ணீர், மணியின் காந்தியைச் சற்று குறைக்குமெனினும் இக் கொடையின் யோக்கியதையைச் சிறிதும் கெடுக்காது.

**ரோலா** — ஜகதீசனது திருக்கைகளன்றி எனதன்று எங்களரையன் உயிரை இன்று காப்பாற்றினது

[பெருவியர் போர்த்தலைவர்களும் சிபாய்களும் வருகிறார்கள்]

**ரோலா** — என்ன, சேவகா, அலான்ஸோவினிடமிருந்தா ?

**சேவகன்** — எங்கள் ராணுவம் பயத்தாற் சற்று கலங்கினதேனும் அலான்ஸோவின் சாமர்த்தியத்தால் எல்லாம் வெகு சீக்கிரம் நேராய் விட்டது. ஆயினும் அலான்ஸோவை நாம் இழந்ததற்காக துக்கம் கொண்டாட வேண்டியவர்களா யிருக்கிறோம்: அவரது ஆவலானது அவரைச் சத்துருக்கள் நடுவில் வெகு தூரம் இழுத்துக்கொண்டு போய் விட்டது.

**அத்தாலிபா** — என்ன ! அலான்ஸோ கொலையுண்டனனோ ?

முதல் சிபாய் — அவர் கீழே விழுவதைப் பார்த்-தேன்.

இரண்டாம் சிபாய் — இதைக் கேளுங்கள். அவர் மறுபடி எழுந்து போர்புரிவதை நான் பார்த்-தேன் — ஆனல் பிறகு அவரைச் சூழ்ந்து நிராயுதனுக்கி விட்டார்கள்.

அத்தாலிபா — ஓ! ஜயமே! இவ்வளவு அதிக விலையா வுனக்கு!

ரோலா — ஓ! கோரா! உனக்கார் சொல்வதிதை!

அத்தாலிபா — ரோலா! நமது நண்பனை இழந்-தோம் — நமது சுவதேசம் இரட்சிக்கப்பட்ட தின்றைக்கு! நம் மனத்திலிருக்கும் வியாகுலம் பொதுஜன ஜய குதூகலத்திற்கு இன்றைய தினம் இடம் கொடுக்கவேண்டியதுதான். இப்பொழுது, உயிரைப் பதராகவும் மதியாது போர்முகத்தினின்று வீரசுவர்க்கம் சேர்ந்த தேசாபிமானிகளின் விதவைகளையும் பாலர்களையும் நாம் போய்த் தேற்றுவோம். இதுவே வெற்றிபெற்ருேர் நிறைவேற்ற வேண்டிய கட-மைகளுள் முதன்மையானது.

(எல்லாரும் போகிருர்கள்.)

# மூன்ரும் அங்கம்

## முதற் களம்

இடம் — செடி கொடிக ளடர்ந்த பாறைகள் நடுவில்

[கோரா தன் குழந்தையுடனும், இன்னும் அனேக ஸ்திரீகள் தங்கள் குழந்தைகளுட-னும் இருக்கிருர்கள். ஒருத்தி மாற்றி ஒருத்தி தன் ஸ்திதியைக் குறித்து உருக்கமாய்ப் பாட எல்லாரும் ஒன்ருய்ச் சேர்ந்து நடு நடுவே பல்லவி பாடி ஓய்கிருர்கள்]

**மரீஞ** — இன்னு மொன்றும் தெரியவில்லையா உனக்கு?

**ஸ-ஹுகா** — ஆம், இரண்டு பெருவிய சிபாய்கள் — குன்றின்மேல் ஒருவனும் — மற்ருெருவன் அந்தப் புதரண்டை —

**ஓலியா** — இன்ஞெருவனும் வருகிருன் — இதோ வந்து விட்டான். ஆனல் பயந்து வெருண்டு வருகிருனே.

**கோரா** — என் ஹிருதயம் இம் மாரினின்றும் குதித்துவிடப் போகிறது.

[ஓர் போர்வீரன் இரைக்க இரைக்க ஓடி வருகிருன்.]

**ஸ்திரீகள்** — என்ன! மகிழ்ச்சியா, மரணமா?

**சிபாய்** — காலம் நமக்கு விரோதமா யிருக்கிறது. அரசன் காயப்பட்டது மன்றி அவரைச் சிறை பிடித்தும் சென்றுவிட்டார்கள்.

**ஸ்திரீகள்** — *ஐயோ! குடிகெட்டதே! ஈசுவரா!*

**கோரா** — (*மெள்ள*) *ஹூம், அலான்ஸோ?*

**சிபாய்** — *நான் பார்க்கவில்லை.*

**மரீஞ** — *நமக்கு வேறெந்தப் புகலிட மிருக்கிறது? ஐயோ!*

**ஓலியா** — *இன்னும் காடடர்ந்த இடத்திற்குப் போவோம்.*

**கோரா** — *நான் ஒரு அடி நகர மாட்டேன்.*

**இரண்டாம் போர்வீரன்** (*உள்ளே*) *ஜயம்! ஜயம்!*

(*இரண்டாம், போர்வீரன் வருகிறுன்*)

*மகிழுங்கள்! மகிழுங்கள்! ஜயமடைந்தோம்.*

**ஸ்திரீகள்** (*குதித்தெழுந்து*) *வருக! வருக! மங்களதூத, நமது அரசனே—?*

**இரண்டாம் போர்வீரன்** — *அவர் நமது தீரவீரர்களை நடத்தி வருகிறுர்.*

[*அத்தாலிபாவும் ரோலாவும் போர்வீரர்களுடன் வருகிறுர்கள். ஸ்திரீகள் வாழ்த்துப் பாடி அழைக்கிறுர்கள்; கோரா கையிற் குழந்தையுடன் அலான்ஸோவை அவர்கள் நடுவில் தேடி அலைகிறுள்.*]

**அத்தாலிபா** — *வந்தனம், வந்தனம் குழந்தைகாள்! எனக்கொன்றுமில்லை. நம்புங்கள். உதிரம் ஒரு தரம் நின்றுவிட்டால் அப்புறம் என்ன இருக்கிறது.*

**கோரா** —(*ரோலாவை நோக்கி*) *அலான்ஸோ எங்கே?* (*ரோலா பதிற் சொல்லாமல் ஒருபுறமாய்த் திரும்*

புகிறான்) ஐயோ! என் நாதனெங்கே? இச் சிசுவிற்கு அதன் தந்தையைக் கொடு.

[அத்தாலிபாவின் காலில் விழுகிறாள்]

அத்தாலிபா — அலான்ஸோ இங்கு இல்லையே என்று வருந்துகிறேன்.

கோரா — அவரைக் காணவும் போகிறீர்களோ?

அத்தாலிபா — அதற்குத்தான் பிரார்த்திக்கிறேன்.

கோரா — அத்தாலிபா மகாராஜா! அவர் உயிர் துறக்கவில்லையா?

அத்தாலிபா — இல்லை! ஜகதீசனுக்கு நம் பிரார்த் தனை கேட்டிருக்கும்.

கோரா — உயிரிழந்தனரோ அவர் — அத்தாலிபா.

அத்தாலிபா—உயிருடனே இருக்கிறார்—என் ஹிரு தயத்தில்.

கோரா — ஓ, அரசனே! என்னை இவ்விதம் வதை க்க வேண்டாம். சொல்லிவிடு, இப் பாலகன் தந்தை யற்றதாய் விட்டதோ?

அத்தாலிபா — இனிய கோரா! இருக்கும் சிறு நம் பிக்கையையும் இவ்விதம் நசுக்கிவிடாதே.

கோரா — என்ன! சிறுநம்பிக்கையா! ஆயின் நம் பிக்கை சிறிதாகிலு மிருக்கிறதோ! (ரோலா வைப் பார்த்து) நீயாவது சொல்லேன் ரோலா! பொய் யறியாயே நீ!

ரோலா — அலான்ஸோ அகப்படவில்லை.

கோரா—அகப்படவில்லையா! ஐயோ, இதற்கென்ன அர்த்தம்? நீயாகிலும், ரோலா, உண்மையைச் சொல்லாயோ? தூரத்தில் உருளும் இடி முழக்கத்தைக் கேட்பதைப் பார்க்கிலும், அது தலையில் விழுந்து பொடியாய்ப் போய் விடலாமே. ஐயோ! அவர் அகப்படவில்லை என்று சொல்லாது மாண்டு விட்டார் என்று ஒரே தரமாய்ச் சொல்லி விடேன்.

ரோலா — அப்படிச் சொல்வது பொய்யாகும்.

கோரா — பொய்யா! அப்பா! நீ அவ் வார்த்தையைச் சொன்னதற்காகத் தீர்க்காயுசா யிரு. தயங்கித் திகைக்கும் எனக்கொரு கைதான் கொடுக்க லாகாதா!

[கோராவும் குழந்தையும் ரோலாவுக்கு முழங்கால் படி இடுகிறார்கள்]

குழந்தாய்! கை கூப்பிக் கேள்; ஓர் வேளை உன் தாயின் மரணாவஸ்தையை விட உனது மடமையே எடுத்துப் பேசலாம்.

ரோலா — அலான்ஸோவைச் சிறை பிடித்து விட்டார்கள்.

கோரா — பிடித்து விட்டார்களா! அதுவும் ஸ்பானியர்களா! பிஸாரோவின் கைதியாமே! அவருக்கு உயிரேதினி!

அத்தாலிபா — இதற்குள் முற்றிலும் மனம் தளராதே — அவரை மீட்பதற்கு நம் தேயத்திலுள்ள திரவியத்தை யெல்லாம், ஒருங்கு கூட்டியவருக்குப் பிரதி பொருளாக இந் நிமிஷமே சுமந்து செல்வன் ஒரு தூதன்.

ஸ்திரீகள் — ஓ! அலான்ஸோவை மீட்பதற்காகவா — எங்களாபரணங்கள் — எங்கள் நவரத்னங்கள் — எல்லாம் உன் காலின்கீழ், இனிய கோரா! அன்பே! இதோ, இதோ, இதோ.

[ஸ்திரீகள் தாங்களணிந்திருக்கும் ஆபரணங்களைப் பிய்த்தெடுத்து ஆவலுடன் கொடுக்கிறார்கள்]

அத்தாலிபா — ஆம், அலான்ஸோவை மீட்பதற்கென்றால், யார்தான், எதைத்தான் கொடுக்க மாட்டார்கள். சுயநயமற்ற இவர்கள் போன்ற ஹிருதயமுள்ள குடிகளை யாளப் பெறும் பாக்கியத்தைத் தந்த — சகல லோக நாயக, — நின்னை எவ்விதம் துதிக்கப் போகிறேன் யான்.

கோரா — வேந்தனே! இன்னொரு விண்ணப்பம் தூதனுடன் நானும் செல்கிறேன்.

அத்தாலிபா — கோரா, நீ மனைவியே யன்றி மாதாவும் கூடவென்பதை மறக்கலாகாது. உனது மானத்தையும், அதனுடன் இச் சிசுவின் ஆயுளையும், ஆபத்திற் குள்ளாக்காதே. அக் கொடியோர் உனது இளமையையும், வளமையையும், மடமையையும் உற்று நோக்க நோக்க, அலான்ஸோவைக் கட்டியுள்ள சங்கிலி அதிகமாகவே இறுகும். நீயே அலான்ஸோ ஹிருதயத்திற்கு இன்னொரு அம்பு எவினவளு மாவாய். கோரா! தூதன் மீளுமளவும் சாந்தமா யிரு.

கோரா — அதுவரையில் உயிர் வைத்திருப்ப தெவ்விதம் என்று உபதேசிக்க வேண்டும்.

அத்தாலிபா — இப்பொழுது நாமடைந்த ஜயத்திற்காகவும், அலான்ஸோவின் உயிருக்காகவும் அர்ச்சனை பண்ணிவைக்க ஆலயம் போகிறோம்; வாருங்கள்.

[எல்லாரும் போகிறார்கள்]

## இரண்டாங் களம்

இடம் — காடு.

[கோரா குழந்தையுடன் வருகிறாள்]

கோரா — ஒன்றுமறியாப் பேதையே! உன் கதி என்னவாவதினி?

[ரோலா வருகிறான்]

ரோலா — கோரா, நீ வரச்சொன்ன விடத்திற்கு இதோ வந்திருக்கிறேன்.

கோரா — குழந்தாய், ஓ எனதருமை மைந்தா! உனக்குத் தந்தை என்பவர் ஒருவர் இன்னும் உயிருட னிருக்கிறாரோ?

ரோலா — கோரா, ரோலா உயிருட னிருக்கும் வரையில் உன் குழந்தை தந்தையற்றதாகுமோ?

கோரா — சீக்கிரத்தில் தாயற்றதுமாகும். அலான்ஸோவை இழந்துவிட்டு உயிருடனு மிருப்பே னென்று எண்ணுகிறாயோ!

ரோலா — இருக்க வேண்டும்! அவர் குழந்தைக் காகவாவது. ஆம், நீ அலான்ஸோவின்மீது ஆசை வைத்திருந்தவளானால், கோரா, அவர் நண்பன் ஒருவன் சொல்வதைக் கேட்க வேண்டும்.

கோரா — ஆயின் உலகத்திற்கே செவிகொடுக்கச் சொல்லுகிறாய் நீ — அலான்ஸோவுக்கு இவ்வுலகத்தில் நண்பனாயிராதவன் யார்?

ரோலா — அவர் கடைசி வார்த்தை —

கோரா—அவர் கடைசி வார்த்தை! (பிரமைகொண்டு) ஐயோ! என்ன?

ரோலா — இரண்டு காரியம் என் கைகளில் ஒப்புவித்தனர் — குழந்தைக்குத் தனது ஆசீர்வாதமும், உனக்கோர் கடைசி விண்ணப்பமும்......

கோரா — கடைசி விண்ணப்பம்! ஈசுவரா! கடைசியாமே! ஐயோ! சொல்லிவிடு அதை!

ரோலா — நானிறப்பேனாயின் — முதலிலிருந்தே அவருக்கு என்ன என்னவோ எண்ணங்கள் தோன்றிக் கொண்டிருந்தன — தானிறந்து விட்டால், கோராவை நான் மனைவியாக்கிக் கொண்டு, தன் குழந்தைக்கும் நான் தந்தையாயிருக்க வேண்டுமென்று வற்புறுத்தினார் — நான் ஆகட்டுமென்றேன். பிறகு பிரிந்தோம். கவனி கோரா, இதை நானுனக்குச் சொல்வது அலான்ஸோவுக்கு நான் வாக்களித்திருப்பதினால்தான். என்வரையிலோ நான் அதைப் பாராட்டவுமில்லை — ஸ்வாதந்தரியம் கொண்

டாடவு மில்லை—நிறைவேறு மென்கிற நம்பிக்-
கையுமில்லை.

கோரா — ஹா! எனக்கு என்ன புத்தி மாருட்டமா! அல்லது, என் புத்தியிற் படும் இக் கொடிய சந்தேகம் எங்கிருந்து உதிக்கிறது? ஓ! அலான்ஸோ! உனது கபடற்ற ஹிருதயத்திற்கே நீ இரையாயினை போலும். நீ மாத்திரம் ஒன்றும் சொல்லாமற் சென்றிருப்பா யாயின்—இக் கடைகெட்ட எனது சவுந்தரியத்தை மரண சாசனம் மாத்திரம் பண்ணி வைக்காமற் போயிருப்பாயாயின் — என் பிராணநாத!

ரோலா — கோரா! என்ன கொடிய சந்தேகம் பிடித்துக்கொண்டதுன்னை.

கோரா — ஆம்! ஆம்! புரிந்துவிட்ட திப்பொழுது! நீ வைத்த வஞ்சனைப் பொறியில் அகப்பட்டுக் கொண்டுவிட்டனர். பாழிடத்திற்கு வருந்தியழைத்துக் கொலையாளிகளையும் ஏவினையோ, பாதகா! செத்தார் — வீணே உதவிக்கு ரோலாவைக் கதறி யழைத்தார். நீ எட்டி இருந்து சிரித்து நின்ருய். நீ அவரைக் காப்-பாற்றி யிருக்கலாம் — இருக்கலாம் — ஆனல் செய்யவில்லை.

ரோலா — ஓ! எரிந்துபோகும் ஈசனே! இதற்கு நான் பாத்திரனே! கோரா, இதைவிட இவ் வாளை என் மார்பினுள் செலுத்திக்கொள்ளக் கட்டளை கொடுத்து விடு.

**கோரா** — வேண்டாம்! — சாகாதே! — காதலுக்காக உயிர் வைத்திரு! — நீ இச்சிக்கிறயே அக்காதலுக்காக! இக் காதல், உயிரென் றெண்ணியிருந்த ஒரு நண்பனைக் காட்டிக் கொடுத்து, அவன் புதையுண்ட கல்லறையிலேயே, வேரூன்றித் துளிர்விட்டு மலரவும் வேண்டுமோ! சே! விசுவாசகாதகா! ஆனல் அலான்ஸோவின் அந்தியகால வார்த்தையை எனக்குச் சொன்ஞய். என்னுடையவைகளையும் கேட்டுவிடு: துன்பம் நிறைந்த இம் மாரில் விஷம் தடவி இச்சிசுவிற்குப் பாலூட்டினும் ஊட்டுவேன் — என் நாதனுடனின்று போர் புரிந்து உயிர் நீத்த ஓரற்பச் சேவகனின் சவத்தைத் தழுவினும் தழுவுவேன் — ஒருபோதும் இக் குழந்தை ரோலாவை 'அப்பா' வென் றழையாது; நானும் அவனை 'நாதா' வென்றழையேன்.

**ரோலா** — சரி, நான் யாரோ அவனென் றழையேன் — உனது நண்பன், உனது காவலன்.

**கோரா** — (வெறிகொண்டு) சே, போ! எனக்குக் கடவுளன்றி வேறோர் காவலரும் வேண்டாம்! கையிற் குழந்தையுடன் நான் ரணகளம் செல்கிறேன் இதோ: இக் கைகளாலேயே, எனது இனிய நாதனின் மந்தஹாஸ வதனம் தென்படு மட்டும் ஒவ்வொரு பிணத்தையும் புரட்டிப் பார்க்கிறேன். தொண்டை கிழிகிற வரையில் அவர் திருநாமத்தைக் கதறி யழைக்கிறேன். நீங்கா வுயிர் சிறிது அவர் உடலிலிருக்குமாயின் முகவாசையற்ற தன் கண் திறந்து — தன் கோராவின் குரல்தெரியாதா அவருக்கு—

என்னை வாழ்த்துவார் என்பதற் கையமில்லை. அங்ககப்படா விட்டால், குழந்தாய், நாம் ஸ்பானியர் கூடாரத்திற்குப் போவோமடா! உனது பார்வை ஒன்றே போதுமே? ஆயிரம் வாட்கள் நடுவிலும் நம்மைத் தீண்டாது விட்டு விடுவார்கள். அவர்களும் மனிதர் தானே! உதிரமொழுகும் அன்பனைத் தேடிச் செல்லும் மனைவியைத் துரத்தும் கன் மனத்தவர்கள் கூட உளரோ! சிறைப்பட்ட தந்தைக் கழும் பாலனையுமா கருதார்? இல்லை, இல்லை, நாமெங்கே போனாலும் பத்திரம் தானடா குழந்தாய். துக்கமுற்ற தாயொருத்திக்கு தன் கையிலிருக்கும் திக்கற்ற குழந்தையே உலகத்தில் தாராளமாய் எங்கும் போக இயற்கை யளித்த பயணச்சீட்டாகும். ஆம், ஆம், கண்ணே, நாம் போய் உன் தந்தையைத் தேடுவோம் வா.

[குழந்தையுடன் போகிறாள்.]

**ரோலா** — (சிறிதுநேரம் சும்மா இருந்துவிட்டு) நீ இட்ட வசைகளில் எள்ளளவிற்கேனும் நானருகனாயிருப்பேனாயின், கோரா, நாயினும் கடையேனுக்குப் பாழ்நரகம் பெரு வாய்திறந்து காத்துக்கொண் டிருக்கின்றது. அவள் தன்னை ஆபத்திற் காளாக்கிக் கொள்ளாம லிருக்க வேண்டுமே. என்ன செய்வது — பிறகு அவளெனக்குப் பெருந்தீங் கிழைத்துளாள் என்பதை ரூபித்து விடுகிறேன்.

(போகிறான்)

## மூன்றாங் களம்

**இடம்** — *பிஸாரோவின் கூடாரம்*

[*பிஸாரோ யோசனையும் கோபமும் மேலிட்டவனாய் உலாவுகிறான்*]

**பிஸாரோ** — நல்லது, இச்சாவிகாரமான அதிர்ஷ்டமே! என் நாசமே உன் பெருமையும் கீர்த்தியுமாகுக. இன்னும் கூட எனக்கே நான் உண்மையா யிருப்பேன். என்னுயிர் போமுன் இப்பழி தீர்க்கும் காரியமாவது சித்தியாம்படி சிறிது மனம் தளர்ந்து கடைக்கண் ணளிக்கலாகாதா? — அதுவே அலான்ஸோவின் மரணமா யிருக்கட்டும்.

[*எல்விரா வருகிறாள்*]

யார் அங்கே! இங்குவரத் துணிந்ததார்? என்ன, வாயிற் காப்போனும் தனது கடமையை மறந்தனனோ?

**எல்விரா** — உன் சேவகன் தன்னா லானவளவு தடுத்துப் பார்த்தான் — ஆனா லவனுக்கு அவன் கடமை தெரிந்திருந்ததனால்தான் நான் மறுக்கும்போது அவன் தடுக்காமல் உள்ளே விட்டான்.

**பிஸாரோ** — ஹாம், உனக்கென்ன வேண்டும், இங்கே!

**எல்விரா** — ஒரு வீரன் தனக்குற்ற துயரை எவ்விதம் சகிக்கிறானென்பதைப் பார்க்க வேண்டும். என்ன, பிஸாரோ, அமைதியா யில்லையே! எவ்வளவு மாறி —

பிஸாரோ — என்ன! பகைவராகிய பெருவியரின் ஈட்டி நமது வீரர்களின் மார்பில் ஊடுருவிச் சென்றதற்குச் சந்தோஷம் கொண்டாடச் சொல்லுகிறாயா? ஆகா! அதற்கு அப்பாதகன் அலான்ஸோவே காரணம்.

எல்விரா — இல்லை! புயலடித்துச் சென்றபின் குளிர்ந் திருண்டிருக்கும் இரவைப்போலும், பூகம்பத்திற்கு முன்னால் தோன்றும் கொடிய அமைதியைப் போலும் நீ கடுகடுத்திருப்பது தான் சரி. ஆயினும் இருள் நீங்கிப் புது-நாள் பொழுது புலரும் என்பதை நீயுணர்ந் தறிதல் வேண்டும் என்பதே எனது கோரிக்கை — அப்பொழுது உங்கள் யுத்தா-வேசம் தளிர்த்துக் கொள்ளட்டும் — வருவ-தற்குப் பயமாவது சென்றதற்கு விசனமாவது வேண்டாம்.

பிஸாரோ — ஸ்திரீயே! எல்விரா! எனது சேவ-கர்களுக் கெல்லாம் உனக்கிருக்கும் தீரம் ஏன் இல்லாமற் போய்விட்டது.

எல்விரா — இருந்திருக்குமாயின் இன்றுனது பட்-டாபிஷேக மன்றோ கொண்டாடியிருப்போம்.

பிஸாரோ — எனதுயிருக்கும், கீர்த்திக்கும் களை-யாய்க் கிளைத்திருக்கும் அவ் வலான்ஸோ நம் பகைவரை நடத்தும் வரையில் எனக்கு விடி-யப் போகிற தில்லை.

எல்விரா — பிஸாரோ! வீர! நான் உன்னை மேன் மேலும் பரீக்ஷிக்க வந்திருக்கிறேன் — இப்-

பொழுது உனது தீரத்தையன்று — உனது பெருந்தன்மையை — அலான்ஸோ இத்தருணம் உனது கைதி.

பிஸாரோ — என்ன !

எல்விரா — வாஸ்தவம். விலங்கிட் டிங்கே இழுத்து வருவதை வல்வெர்தே இப்போ பார்த்தான். இவ் வதந்தியை யுனக்கு நானே கொண்டு வராமென்று வந்தேன்.

பிஸாரோ — இவ் வதந்திக்காக — எல்விரா — நீ நீடூழி வாழ்க ! அலான்ஸோ அகப்பட்டுக் கொண்டனன் என் கையில் — ஆயின் நானே விஜயன். வெற்றியும் எனதே.

எல்விரா — பிஸாரோ ! இவ் வஞ்சகரிகக் குதூகலம் ஆண்மைக் கழகன்று. இதோ ! பிஸாரோவையே நடுங்கச் செய்யும் கீர்த்தியும் பராக்ரமு முள்ள மனிதனொருவனை யான் காணக் கொண் டிருக்கும் ஆவல் அதிகரிக்கிறது. அவனது நாசத்திலா உனது வெற்றி ! அவனது விலங்கிலா உன் க்ஷேமம் ?

பிஸாரோ — காவற் சேவகா !

[சேவகன் வருகிறான்]

ஸ்பானிய கைதி அலான்ஸோவை இழுத்து வா. கொண்டு வா அத் துரோகியை யிப்பொழுது.

[சேவகன் போகிறான்]

எல்விரா — அவன் கதி என்னவோ !

பிஸாரோ — மரணம்! மரணம்! சித்ரவதை! பற்றி யெரியும் என் கோபம் எவ்வளவுவித ஹிம்ஸைகள் கண்டு பிடிக்கின்றதோ — வாய்ப் பிராணன் போமளவு அவன் எவ்வளவு உபத்திரவம் தாங்கலாமோ — அவ்வளவு சித்ரவதை!

எல்விரா — வெட்கமில்லை யுனக்கு! அலான்ஸோவைக் கொலை செய்வதற்கு முன்னுற் பிஸாரோவினுல், பெருவியரைச் சயிக்கமுடியவில்லை என்று ஜனங்கள் சொல்லவும் சகிப்பையோ?

பிஸாரோ — எதை வேணுமானுலும் சொல்லிக் கொள்ளட்டும், போ! அவன் முடிவுக்கு முத்திரைபோட்டாய் விட்டது.

எல்விரா — ஆயின் உன் சித்தம்போற் செய்: இது மாத்திரம் தெரியட்டும் — இவ்வீர வாலிபனின் இரத்தம் ஒரு பிந்து அநியாயமாய்ச் சிந்த நீ ஏதுவா யிருப்பாயாயின் எல்விராவை நீ யடியுடன் இழந்தவனுவாய்.

பிஸாரோ — இவ் வன்னியன்மேல் உனக்கென்ன இவ்வளவு கருத்து. அலான்ஸோவின் கதியைப் பற்றி யுனக்காக வேண்டிய தென்னவோ?

எல்விரா — அவன் கதியா லொன்றுமில்லை; உன் கீர்த்தியாலோ சகலமும்! நீ, கீர்த்தி, கவுரவம், மானம் எல்லாவற்றையும் ஒழித்த பின்னும் எனது காதல் மாத்திரம் உன்னிடமிருக்குமென் றெண்ணுகிருயோ? நீ, என்னைச் சரியாய் அறியவில்லை.

பிஸாரோ — என்னையும் சரியாய் நீ ஏற்கனவே அறிந்திருக்க வேண்டும். ஒருதரம் பகை-யுறப் பண்ணிவிட்டால் பழி தீர்க்காது பிஸா-ரோவும் பொறுப்பனோ வென்பது எல்விரா, உனக்குத் தெரியாமற் போயிற்றா?

[சேவகன் அலான்ஸோவை விலங்கிட்டு இழுத்து வருகிறான்]

வருக, வருக, அலான்ஸோ மகாபிரபு அவர்-களே! நாம் சந்தித்து வெகுகாலமாய் விட்டது. தங்கள் முகம் வெகு செழுமையாய்த் தோற்று கின்றதே! கிராமாந்தர வாசத்தினாலோ? யுத்த கஷ்ட நஷ்ட விசாரங்கள் நடுவில் இருந்-தும் தாங்கள் பள்ளியறையி னின்று வெளி வந்த மணவாளனைப் போலன்றோ இருக்கி-றீர்கள்! இதன் இரகசியத்தைச் சற்றுச் சொல்ல வேண்டும்.

அலான்ஸோ — உனக்குச் சொல்லிப் பலனில்லை. யுத்த கஷ்ட நஷ்டங்கள் உண்டெனினும் இவ்-விடத்தில் சதா சாந்தியும் அமைதியும் குடி-கொண் டிருக்கின்றன. (மார்பில் கைவைக்கிறான்)

பிஸாரோ — தூஷிக்கின்றனையோ என்னை, பயலே!

எல்விரா — உனக்கு நன்றாய் வேணும். தௌர்ப்-பாக்கிய சாலிகளுடன் விளையாட் டென்ன வேண்டி யிருக்கிறது.

பிஸாரோ — உம்—விவாகம் கூட ஆய்விட்டதாகக் கேள்விப்பட்டேன்; உம்—ஒரு திவ்ய குழந்தை கூடப் பிறந்திருக்கிறதாமே. தந்தையின் இராஜ பக்தியையும், தாயின் மதக் கொள்கையையும் வகிப்பதற் காக்கும்.

அலான்ஸோ — ஆம்! தனது தந்தைக்கு மோசம், கொடுமை, வஞ்சனைகள் மேலுள்ள வெறுப்பிற்கும்; தனது தாயின் ஸத்யம், சாந்தம், கற்பிற்கும் பாத்தியனாகப் பிறந்திருக்கிறான். பிஸாரோவின் கொடும் பகைக்கும் பாத்தியன் என்பதற்கு ஐயமில்லை.

பிஸாரோ — உண்மையாகவா! பாவம், அப்பாலகனை நினைத்தால் எனக்குப் பரிதாபமாயிருக்கிறது—நாளைச் சூரியன் உதிக்குமுன் அக்குழந்தை உனக்கு உத்தரகர்மம் செய்யவேண்டி யிருக்கும். அலான்ஸோ, உன் காலம் குறுகிவிட்டது.

எல்விரா — பிஸாரோ — இல்லை.

பிஸாரோ — போ! இல்லாவிட்டால் எனக்கு வரும் கோபம் —

எல்விரா — நான் போகவு மாட்டேன் — உனக்கு வரப்போகிறதே அக் கோபத்திற்கு நான் அஞ்சவும் மாட்டேன்.

அலான்ஸோ — தர்மவனிதாய்! வீணாக என் பொருட்டேன் மனம் இரங்குகிறாய்! காலின் கீழ் இரையை அழுத்தி நிற்கும் வேங்கைக்கோர் இடையூறும் செய்ய முயலாதே, அம்மா!

பிஸாரோ — கலகக்காரா, என்ன கர்வம் உனக்கு. தெய்வப்பிரஷ்ட இராஜப் பிரஷ்டனாயிற்றே நீ.

அலான்ஸோ — அது பொய்!

பிஸாரோ — வேறென்னவோ நீ! உனது தேச இராணுவத்தை விட்டோடவில்லையா — அது·

வும் அற்ப அஞ்ஞானிகளுடன் கூடி யுனது நாட்டிற்கே விரோதமாய்ப் போர் புரியவும் துணிந்தனையே !

அலான்ஸோ — இல்லை ! எவ்விதம் கைவிட்டோடி-னவனுவேன் ? நான், திருடர்கள் ! கடற் கொள்ளைக் காரர்கள் ! கொலைபாதகர்கள் நடுவிற் பிறக்கவில்லையே! அச் சைனியம் பொற் பிசாசினுலும் உனது பேராசைப் பிசாசினுலும் தூண்டப்பட்டு மானுட தர்மத்தையும் தமது மேன்மையையும் அடியுடன் கைசோரவிட்ட பொழுது நீங்களன்ருே என்னை விட்டோடிய-வர்களாவீர்! அதன் அதிகாரத்தை அபக-ரித்தவர்களுட னன்றி என் சுதேசத்திற்கு விரோதமாய் நான் ஒருபோதும் கலகம்செய்ய வில்லை. நியாயமும் நம்பிக்கையும் இரக்கமுமே நமது சின்னங்களாகத் தாங்கிச் சென்ற வரை-யில் நானவைகளுக்குப் பின் சென்றேன். இவைகளைத் திரஸ்கரித் துதைத்தெறிந்த பிறகு எனதென் ருெரு நாடுமில்லை—என்மேல் எவ்-விதக் குற்றமும் சாட்ட யாருக்கும் அதிகாரமு மில்லை.

பிஸாரோ — உன்னை விசாரித்துத் தண்டிக்கும் சக்தியாகிலு மிருக்கிறதே !

அலான்ஸோ — எனக்கு நியாயாதிபதிகள் எங்கே?

பிஸாரோ — நீ யுத்தாலோசனைச் சபைக்கு மனு கொடுக்கின்ருயோ.

அலான்ஸோ—ஆம். லஸ்-கஸஸ் இன்னும் அவர்-களுள் ஒருவரா யிருப்பாராகுல். இல்லாவிட்-

டால் தெய்வத்திற்குத் தான் நான் மனு கொடுக்க வேண்டும் !

பிஸாரோ — அசடன் லஸ்-கஸஸை ஏமாற்றி விடலாமென்று பார்க்கின்றாய் போலும். ஆம். நீ செய்த இராஜத் துரோகத்திற்கு என்ன சாக்கு சொல்லப் போகிறாய்?

எல்விரா — லஸ்-கஸஸா அசடர்? அவரது ஹிதோபதேசம் உனது கன்மன விவேகத்திற் கவ்விதம் தான் தோன்றும். ஐயோ! அம் மகானது திவ்ய அசட்டுத்தனம் எனக்குச் சிறிதிருந்திருக்கு மாயின் நான் இக்கதிக்கு வந்திருக்க மாட்டே னன்றோ !

அலான்ஸோ — அவருக்காயின், உங்களருகிலிருந்து என்னைத் துரத்திய கொடுமைகளைப்பற்றி எடுத்துரைக்க வேண்டிய தனவசியம். கைகோத்தழைத்துச் சென்று மானுட முயற்சியின் பலனைய் வெட்ட வெளிகளெல்லாம், நறுமணம் வீசும் நந்தவனமானதைக் காட்டுவேன். இது எனது செய்கை என்று சொல்லுவேன். பிறகு, கொடிய ஆசாரங்களும் மூடபக்தியும் அப்பேதையர் மனதை எவ்விதம் கலக்கி அவர்களை யிருத்தி வைத்திருந்த தென்பதைச் சொல்லி, இப்பொழுது எப்படி உண்மைச் சகோதரர்களாய் ஒன்று சேர்ந்து கிராமம் கிராமமாய்க் கூடி, வேலையில் திருப்தியுடனும் விளையாட்டிற் சிரிப்புடனும் எவ்விதம் வாழ்கிறார்கள் என்பதைக் காட்டுவேன். இதுவும் நான் செய்தது தான். இவைகளன்றி மிருது வசனத்திலேயே, மெய்க் கடவுள் வழிபாட்-

டிற்குக் கொண்டு வரப்பட்டவர்க ளனேகர், வேலையும் விளையாட்டு மொழிந்த வேளையில், பக்தி யொழுகும் கண்களுடன் கைக் கூப்பிப் பகவானைத் துதித்தலைக் காட்டுவேன். இது-வும் அலான்ஸோவின் வேலைதானென்று லஸ்-கஸஸிற்குச் சொல்லுவேன். உடனே லஸ்-கஸஸ் தன் வயோதிகக் கைகள் இரண்டாலும் என்னைத் தழுவி ஆனந்தக் கண்ணீர் விடுவார். அத்திவ்ய துளி யொன்று என் தலையில் வீழ்வதே, இவ் வுலகில் சத்தியம் பிறழாமல் நடந்தேன் என்பதற்கும், மறுமையில் ஈசுவர-னின் கிருபை எனக் குண்டென்பதற்கும் தவ-றாக் குறியாகும்.

எல்விரா — அலான்ஸோ மகாபுருஷ! நீயன்றோ பாக்கியசாலி! பிஸாரோ, இத்தகைய எண்-ணங்களும் அவைகளுக்கேற்ற செய்கைகளு-முள்ள ஒருவனைக் கொலைகொண்டு வெருட்டு-கின்றனையே, நீ!

பிஸாரோ — என்ன வைராக்கியம், என்ன தைரியம் உனக்கு! உனது குருவின் கண்ணீர் கடாட்-சம் இங்கே காத்திருக்கவில்லை உன் பொருட்டு என்றறியாய் போலும். உன்னைப் போலவே அவனும் எங்களை விட்டோடி விட்டான் — உன்னைப்போல் சத்துருக்களுடன் கூடிவிடத் தான் என்பதற்கும் சந்தேகமில்லை. ஆயினும், மறுமையிலடைய பயத்துடன் எதிர்பார்த்-திருக்கும் வெகுமதி கிடைக்கிறதா என்று யுத்-தேசித்திருப்பதை விடச் சீக்கிரம் நீ சோதித்-தறிய நேரிடு மென்றெண்ணுகிறேன்; ஏனெ-னில், நீ யுன்னாட்டிற் கிழைத்த பிழைக்காகவும்

எனக் குண்டாக்கிய பகைக்காகவும் நாளைச் சூரியன் உன்னைச் சவமாகவே காண்பான் !

எல்விரா — நில் ! நில்! பிஸாரோ! ஒவ்வொருவேளை நெறி பிறழ்ந்து நடந்தாலும், எக் காலத்திலும் கம்பீரமாகவே யாயினும் நடந்து கொள். நாட்டிற் கிழைத்த வசையைப்பற்றி யொரு வார்த்தை பேசாதே. அதற்கும் இந்த மனஸ்தாபத்திற்கும் யாதோர்வித சம்பந்தமுமில்லை என்பது நமக்கு நன்ருய்த் தெரிந்த விஷயம். இவ் வாலிபன் மீது நீ கொண்டிருக்கும் கோபத்திற்குக் காரணம் அந்தரங்கப் பகையும், பழிதீர்க்கும் உனது இரத்த வெறியு மன்றி வேறொன்று மன்று. அப்படி யிருக்க—அகப்பட்டுக் கொண்டனை யென்றுனது மனச்சாட்சி கண்கள் வழியாய்க் காட்டிக் கொடுத்து விட்டனவே — அப்படியிருக்க, நியாயத்தையும், நாட்டின் பெருமையையும் வீணே சொல்லி அவைகளை நிந்திப்பானேன். அவர் கையிலும் வாளொன்று கொடுத்துச் சமநிலையில் தனிப் போர் புரிந்து உங்கள் பகையை முடித்துக் கொள்வதன்ருே ஆண்மை.

பிஸாரோ — இராஜத் துரோகிக்குப் பரிந்து பேசும் அதிகப் பிரசங்கியே — வாயை மூடு ! யாரடா அங்கே ! இவ்விடம் விட்டகற்றிவனை. தன் தண்டனை யின்னதென்ப தவனுக்குத் தெரியும்.

அலான்ஸோ — பழிதீர்க்க வெகு ஆவலாயிருக்கின்ருய். அதற்காக அனேக வந்தனங்களுனக்கு — என் வரையில் உனதவசரமே என் அதிர்ஷ்டம் என்று சொல்ல வேண்டும்.

(எல்விராவைப் பார்த்து) வேதனைப் படுவோர்க்-குப் பரிந்து பேசும் இனிய மாதே, அந்திய காலத்தில் நான் மனப்பூர்வமா யளிக்கும் வந்-தனத்தை அங்கீகரிப்பாயாக. அதோ—காட்டு மிராண்டிக ளென் றழைக்கப்படும் — அச் சனங்களுள் உனக் கெவ்வளவோ ஹிதமான நண்பர்கள் கிடைப்பார். இச் சகவாசம் உனக்குச் சற்றும் ஏற்றதன்று.

பிஸாரோ — சரி; உன் சாவு சமாசாரத்தைக் கோராவிற்குப் போய்ச் சொல்ல இவனையே ஏற்பாடு பண்ணுகின்றேன்.

அலான்ஸோ — மனிதத்தன மற்ற பாதகா! இவ் வொரு பாணத்தை யாகிலும் என் மார்மீது எய்யாம லிருக்கலாம் நீ; ஆயினும் உனது குரூரம் கூட என் மனவமைதியைக் கலக்காது. நான் சாகப்போகிறேன். — என் ஞாபகத்தை எல்லோரும் வாழ்த்துவார்களே யன்றிச் சபிப்பார் ஒருவருமில்லை. நீயோ உயிருட னிருப்பாய் — ஆனல் நீ எப்பொழுதும் — பிஸாரோதானே.

[காவலருடன் போய்விடுகிருன்]

எல்விரா — இதோ! பிஸாரோ! உனது ஹீனபுத்-தியைக் கண்டு என் நெஞ்சம் பதைக்கிறது — உடல் நடுங்குகிறது — கோபம் கொதித் தெரிகிறது.

பிஸாரோ — உனது அற்புத மதிஹீனம் எதன் மேல் நோக்கம் வைத்திருக்கிறதோ இப்-பொழுது? அவன் என் சத்துருவாயிற்றே. என் வசத்திலு மிருக்கிருன்.

எல்விரா—உன் வசத்திலிருப்பதினாலேயே அவனுன் சத்துரு வாகமாட்டான். பிஸாரோ! நானுன்னிடம் யோக்கியதை எதிர் பார்க்கவில்லை, பெருந்தன்மை பாராட்டச் சொல்லவில்லை. நீ பெற்றிருக்கும் கீர்த்திக் கேற்றகருமந் தானே செய்யச் சொல்கிறேன். உனது உயர்சிறப்பிற்கு நீயே கொலையாளியாய் வந்து விளையாதே. எல்விராவைக் கவர்ந்ததை விட மேலானபலன் உன் கீர்த்திக்கு என்ன விருக்கிறதென்று ஆயிரம்தரம் உரைத்துளா யன்றோ? நான் எல்லாரையும் போல் உண்டுறங்கி நாதனின் புன்னகையையும் மக்களின் மதலைச் சொற்களையும் கண்டு களித்து, நாட் கழிக்கும் சாதாரண மாதர்களுள் ஒருத்தி யன்றென்பது உனக்குத் தெரியும். இல்லை! கைக்கொண்ட காதலனைக் கடவுளாய்க் கொண்டாடப் பிறந்தவள் நான். அவனது புகழ்ப்பாட்டை யன்றி வேறெந்த கீதத்தையும் ஏற்கா என் செவிகள். அவனது தீரச் செய்கைகளின் மகிமைகளன்றி வேறெதையும் என் உதடுகள் உளறு. உனது நாடும் அரசனும் உனக்கு நன்றி பாராட்டிச் சொரியும் உபசரணைகளை வாசித்து ஆனந்தப் பரவசமாகி விடுவேனே. வெற்றி மாலை சூடி வரும் என் வீரனை எதிர் கொண்டழைக்கும் முரசினும் அதிகமாய்ப் பட படக்குமே எனது ஹிருதயம்; எனது பதிபக்திக்கும் கரையுண்டோ! — நானே வேறோ—வேறு பாசமுமுளதோ எனக்கு—என் பிரபஞ்சமே நீ யன்றோ! காதல் கொள்வது சபல மெனினும்,

இவ்வித காதல் சாதாரண சபல மன்று. பிஸாரோ! எனக்குன்மே லிருந்த காதல் இத்தகைய தன்றோ?

பிஸாரோ — இத்தகையதுதான், எல்விரா!

எல்விரா — ஆயின் — என்னைப் படுநாச மாக்கின பெரு மோசத்தின் மூடியைத் திடீரென்று கிழித்தெறிந்து என்னையே எனக்குச் சத்துருவாக்கி விடாதே! உனக்கிருக்கும் சக்தியைக் கொண்டு இக் கொடுமை தற்காலம் என்னதான் முலாம் பெற்றாலும், நாளடைவில் அம் முலா மழிந்துபோய், நீ செய்த வதைதான் முன்னிற்கும். எல்லோராலும் சபிக்கப்பட்டுப் பாழாவாய். உலக நிந்தனையே உனக்குக் கிடைக்கும் கைம்மாறு.

பிஸாரோ — தற்காலம் பழிதீர்த் தானந்திக்காமல் — பின் வருவோர் கொடுக்கும் புகழ் மொழிகளைக் கேட்டுக் கல்லறையில் உலர்ந்து கிடக்கும் என் எலும்புகள் குலுங்க நகைக்குமென் றெண்ணுகின்றனையோ, பேதாய். இம்மையை அனுபவித் தறியாத மடையர்கள் எதிர்பார்க்கும் கியாதியது. நானறியேனதை. இக் காரியத்தால் உயிருள்ள கீர்த்தி பெற்று, கார்யமும் கைகூடி, பகைவரும் நசித்து எனததிகார மேம்படுமே. இது தெரியா துனக்கு!

எல்விரா — நீ பேசும் ஒவ்வொரு வார்த்தையும் அவைகளைக் கேட்கும் ஒவ்வொரு நிமிஷமும், நானுன்னைப் பற்றிக் கொண்டிருந்த மாயா எண்ணங்களி னின்றும் என்னைத் தெளிவிக்-

கின்றன. பெரும்பேர்பெற்ற சிற்றறிவுடை-யாய் — ஸத்யமான கீர்த்தியும் யோக்ய மகிமையும் இன்னதென்று உணர்ந்தறிய நீபிறந்தவனல்லனென்று இப்பொழுதுதான் தெரிகிறது. போ! அழியாப்புகழ் ஒருபுறமிருக்க, நாளைக்கு நிலையாத் தற்புகழ்ச்சியைத் தழுவி நாசமாய்ப் போ! விசும்பிலெழும் விண்மீன்களைக் கண்-ணுற்று வியப்பதற்குப் பதிலாகக் கீழ்குனிந்து உன் காலிற்படும் மணலைக் கண்டு களிக்கின்ற-னையே. போ! போ! செருக்கின லுண்டாகும் பேராசைக்குத்தெய்வமாகிய "புகழ்" என்னும் தேவதையை இவ்விதந்தான் ஆராதிப்பதோ! சுயநயக் கொடுமை பாராட்டிக் கீர்த்திபெறப் புகுவோன், அவள் கோயிலின் வாயிலுக்கு வெளிநின்று வருவோர் போவோரை வேண்டி நிலையில்லாத புகழ்ப்பிச்சை கேட்கும் கீழ்மகனவன். கிடைத்த சிற்சில புகழ்ப்பிச்சையும் அவனுக்கு முன்பே இறந்து அடக்கமும் பெற்றுவிடும். மூலஸ்தானம் சென்று அம்ம-னிடமே, நித்திய புகழ்வரம் பெற அவனுக்கு யோக்யதை யில்லை. அணுகவும் துணியான். சந்நிதியில் வைக்கத் தகுந்த சுயநயமற்ற கரு-மங்களாகிய, சிறந்த நைவேத்தியம் ஒன்று-மில்லை அவனிடம். பரோபகார சிந்தையுள்ள மெய்ந்நெறி தவறுமேன்மக்களது திவ்ய ஸ்வரூபங்களே நட்சத்திரமாகமாறி விண்ணிற் பொதிந்து, ஜோதிமயமான அவர்களது பிர-தாப ஞாபகத்தைச் சாசுவதப் படுத்தி வைக்-கின்றன. ஆகையாற் பிஸாரோ,— —

பிஸாரோ — எல்விரா, இவ்விடம் விட்டுப்போ!

எல்விரா — பிஸாரோ, என்மீ துனக்கினி ஆசையில்லே.

பிஸாரோ — அதுவன்று எல்விரா. எனக்கென்னென்ன சந்தேகம்தான் தோன்றுது — ஒரன்னிய புருஷனுக்காக நீ இவ்வளவு பரிவது — ஆச்சரியம்! என்மேலேவின வசைகளை மீட்டுக் கொள்.

எல்விரா — இல்லே, பிஸாரோ, இதுவரையிலும் கூட நீ என்னே முற்றும் துறந்தவனுகமாட்டாய். என்னுயுளே யுன் விதியுடன் கட்டியிருக்கும் பாசக்கயிறு இன்னும்கூட வொன்றிருக்கிறது. வேண்டாம் — ஸத்தியமாக — எனக்காகவாவது அவ்வொரு பாசத்தையும் அறுத்து விடாதே! வேண்டாம்! அலான்ஸோவின் இரத்தத்தைச் சிந்தாதே!

பிஸாரோ — என் தீர்மானத்தை மாற்ற முடியாது.

எல்விரா — என்ன! அந் நிமிஷமே நீ எல்விராவை முற்றிலும் துறப்பதானுலும்?

பிஸாரோ — ஆம். அப்படித்தான்!

எல்விரா—பிஸாரோ, கவுரவத்திற்காக வேண்டாம், மனுஷத் தனத்திற்காக வேண்டாம்; என்மேலுள்ள காதலுக்காகவாவது சற்று செவி கொடுக்கலாகாதா! உன்பொருட்டு நான் என்னென்ன துறந்தேனென்பதைச் சற்று எண்ணிப் பார். பெற்ருேர், உற்ருேர், மானபிமானம், சுய தேசம்! இத்தனையும் உன்நிமித்தம் இழந்தேன்.

வெளியோடி யுன் கைப்பற்றிக் கடல்நடுவில் மூழ்கி இறக்கவும் சித்தமா யிருக்கவில்லையா? உனக்குற்ற பேராபத்துகளுக்கு நானும் ஈடு கொடுத்தே னன்றோ! — புயலடிக்கக் கொதித்தெழும் கடல் நடுவிலும்! — பகை யுண்டு வெருட்டும் பாதகர்க ளருகிலும்!! ஈசுவரா! ஹ! இவ் வகோரதினம், இன்றுகூட, பிஸாரோ நிலைகுலைந் தோடுகையில் அவனுட னின்று மார் கொடுத்ததார்?—உன்னை இன்று கூட உன்மீது பாய்ந்துவரும் அம்பினின்றும் காப்பாற்றிய மெய்க் கவசம் எனது மார்பே யன்றோ?

பிஸாரோ — சொன்ன தவ்வளவும் உண்மையே! காதலில் ஸ்திரீரத்னம் நீ. போர்க்களத்தில் வீரர்களுக் கெல்லாம் நீதானே மாதிரி; ஆகை யாற்றான் என் முழு ஹிருதயமும், எனது ஆஸ்தியிற் பாதியும் உனக்குச் சுதந்தரமாகும்.

எல்விரா — உனது ஹிருதயத்தை மாத்திரம் நானடைந்தே னென்று ரூபித்துவிடு. மற்ற-தற்குள்ள என் பாத்யதை யெல்லாம் — அலான்ஸோவின் பிராணனுக்குப் பதிலாய் — கைவிட்டு விடுகிறேன்.

பிஸாரோ — விட்டுவிடு! நானே இரண்டொரு நாட்க ளவனைக் கொல்லாது விட்டு வைத் திருந்தாலு மிருப்பேன். ஆனால் நீ பரிந்-துரைக்கும் ஒவ்வொரு வார்த்தையும், அவ-னுக் கிருக்கும் ஆயுளைக் குறுக்கித் தூக்கு

மரத்திற்கு வெகு விரைவாய்த் தூரத்தித்தான் செல்கின்றது.

எல்விரா — ஆயின், அலான்ஸோ பொழுது-புலரு-முன் உயிர் துறக்கிறுன்?

பிஸாரோ — அதோ அச் சூரியன் அஸ்தமிப்பதற்-கும் சந்தேக முண்டோ! அவன் மறுபடி உதய மாகாமலும் போவானே! அவ்வளவு நிச்சயம்தான் அலான்ஸோ இறப்பது.

எல்விரா — ஆயின் நடக்கட்டும்—மீந்திருந்த ஒரு கயிறும் அறுந்து விட்டது — எம் முடியும் கூட்டாது அதனை யினி. ஆனல் என்னைப் பார் — நானிதுவரையில் கொண்ட சிற்சில தீர்மானங்களை மாற்ற நேர்ந்திருக்கலாம்; இப்-பொழுது பார் என்னை — நிர்க்கதியான ஓர் சத்துருவை இரக்க மென்பது சிறிதுமின்றி—செருக்கு மேலிட்டுச் சீறிப்பாய்ந்து, குரோத-முடன் இகழ்மொழி பொழிந்த உன் உதடுகள் இனி யொருபொழுதும் எனது காதற் குறிக-ளொன்றும் அருந்தா! நிரபராதியான புருஷ-ஞெருவனைச் சித்திரவதை செய்யச் சிறிதும் நடுங்காத இரத்தவெறி கொண்ட வுனது கையை எனது கரங்களும் அன்புடன் இனிப் பற்றுமோ! பிஸாரோ, நான் சொல்வதை இக-ழாதே. என் வார்த்தைகளை யசட்டை பண்ணி மோசம் போகாதே. சாக்கிரதை! எனக்கு உதிக்கும் இவ் வெண்ணங்கள் இகழத் தக்க-னவன் றென்பது எனக்குத் தெரியும். என்-னைப்போல் யார் எண்ணவில்லையோ அவன்

நீசன். எண்ணியும் நான் செய்யப்போவதைப் போல் செய்யாதவன் பாதகன்!

பிஸாரோ — முழுவதும் கேட்டேன். எல்விரா! உனது நோக்கத்தின் பெருந்தன்மையி னள-வும் நன்கு விளங்கிற்று — யோக்கிய சிகா-மணிகளுக்குப் பரிந்துபேச நீயே ஏற்ற நியாய வாதி! இள அலான்ஸோமீது நீ வைத்திருக்-கிற உருக்கமான அபிமானம் வீண் போகி-றதே என்றுதான் வருத்தமா யிருக்கிறது! சூரியோதயத்தில் அலான்ஸோ சாகிறான்.

(போகிறான்.)

எல்விரா — நல்லது! நான் இவ்விதம் தாழ்மைப்-பட வேண்டியது நியாயம்தான் — என்னையே நான் மறந்து காரியத்திற்குத் தக்க மார்க்கம் தேடாமற் போயினேன். நான் வசையுண்டது தகுதியே, அதுவும் பிஸாரோவினால். (கண்ணீர்த் துளிகள் விழ) விழுங்கள், அபலைத் துளிகளே விழுந்து விடுங்கள்; இதுவே இக் கண்கள் சிந்-தும் கண்ணீர்த் துளிகளிற் கடைசி. — ஒரு ஸ்திரீயின் காதல் எவ்வளவு தூரம் போகு மென்பது, பிஸாரோ, உனக்கு வெகு நன்-றாய்த் தெரியுமல்லவா! — அவளது பகை செய்யக்கூடிய தெது என்பதையும் வெகு சீக்கிரத்தில் அநுபவித் தறிவாய். ஆம்! கலங்கா நெஞ்சுடையாய்! மானிடர்க் குறும் விபத் தெதுவும் வெருட்டாத் திடமுடை-யாய்! கற்பாறை யுருகி யொழுகும் எரி மலை வாயிலிற் கொடி நாட்டிய தீரனே!

விண்ணளாவத் திரை கொதித்தெழும் புயற்-கடல் நடுவில் மனவமைதியோடு நித்திரை கொண்டெழுந்த கம்பீரா! வா! வா! அச்சமற்ற ஆடவா! வா! உன்னுயிர்க்குக் காத்திருக்கும் இந்த விபத்தைக் கண்டு சகி இப்போ — ஒரு ஸ்திரீக்குத் தீங்கிழைத்து விட்டு, அவள் கோபாவேசத்திற்குக் கூடுமாயின் நீ தப்பிப் பிழை பார்ப்போம்.

(போகிறாள்.)

# நான்காம் அங்கம்

## முதற் களம்

இடம் — காரா கிருஹம்.

[அலான்ஸோ விலங்கு பூண்டிருக்கிறான். அவனருகில், காவற்காரன் உலாவிக் கொண்டிருக்கிறான்]

அலான்ஸோ — இருள் மூடிக் கடல் மறைவதைக் கடைசிமுறை கண்டு விட்டேன். இச் சிறையினது கூரையிலுள்ள பிளப்பு வழியாய்க் கடைசியாக நான் நட்சத்திரங்கள் குலுங்கியொளிக்கும் காந்தியையும் பார்த்தாய் விட்டது. கடைசியாக, ஓ சூரியனே! காலம் குறுகி விட்டது — அருணோதயத்தையும், உனது கிரணங்களால் இலைமேற் படியும் பனி நீர்ப் பிரகாசத்தையும் கண்டு விடுவேன். பிறகு — நமன் வந்து என் வாழ்க்கை யாரம்பத்திலேயே எனதுயிரைக் கவர்ந்து செல்வன்—இல்லை — அலான்ஸோ, உன் ஆயுளை வருஷமாசந் தேதியாகிய அற்ப அளவையாற் கணக்கிட்டுப் பார்க்கலாகாது. ஒரு யோக்கியனது வாழ்நாட்களை அவனது நற்செய்கைகளாலன்றி வருஷ அளவையாலா அளப்பார்கள்! ஆயின், முணுமுணுக்க நியாயமில்லை. உனக்கிருந்த ஒருசாண் ஆயுளில் துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலன வேலைக்குப் பகவான் உன்னையே கருவியாக் கொண்டு அநாதரக்ஷகனாயிருந்ததற் கவரைத் துதித்துச்

செல்வாய். ஜனோபகார மொன்றும் செய்யாது சென்ற வொருவன் மூப்பு முதிர்ந்திறந்தாலும், அவனுக் குற்றது அகாலமரணமே யாகும். நன்கு வாழ்ந்தவர்களே நீண்டு இருந்தவர்களாவர்.

[போர்ச் சேவகன் ஒருவன்வந்து காவற்காரனுக்கு உத்தரவுச் சீட்டைக்காட்டி, அலான்ஸோவினிடம் வருகிறான்.]

**அலான்ஸோ** — என்ன கொண்டுவருகிறா யங்கே?

**போர்ச் சேவகன்** — இவ் வுணவைத் தங்களிடம் வைத்துவிட்டு வரும்படி உத்தரவு.

**அலான்ஸோ** — யாருனக்கு இவ்வுத்தர வளித்தது?

**சேவகன்**—எல்விரா அம்மாள். பொழுது புலருமுன் அவர்களே இங்கு வருவார்கள்.

**அலான்ஸோ** — எனது தாழ்ந்த வந்தனத்தை அவளிடம் செலுத்தி விட்டு நீயே இவ் வுணவுகளை யுண்டுவிடு — எனக்கிவைக ளொன்று மவசிய மில்லை.

**சேவகன்** — நான் தங்கள் கீழ்ச் சேவகம் செய்துளேன். அலான்ஸோ பிரபூ, மன்னிக்க வேண்டும். தங்களை இந் நிலையிற் காணச் சகிக்கவில்லை. (போகிறான்)

**அலான்ஸோ** — ஆம். பிஸோராவின் சைனியத்திலிருப்பவன் என்னைப் போல் அதிர்ஷ்டஹீனனொருவனைக் கண்டு மனம் உருக, மன்னிப்புக் கேட்க வேண்டியதுதான். (வெளியே பார்த்து) சூரியன் தயங்கித் தயங்கி விடும் கிரணங்க

ளொன் றிரண்டு வெளிக் கிளம்பி விட்டன. எனக் கிருப்பது இன்னும் ஒரு மணி நேரமே. பொழுது புலரக் காத் திங்கே நிற்பானேன்; எனது இருட்டுச் சிறையுட் சென்று சகலமும் வல்ல ஜகதீசனுக் கென் கடைசி ஜபத்தைச் செலுத்தி விடுகிறேன்! என் மனைவி மகவிற் காக! அவர்கள் நிஷ்பாபிகளாய் மன வமைதி யுடன் மனோவாக்குக் காயங்கள் பரிசுத்தமாய் வாழட்டும். கடவுளே! — மற்றொன்றும் வேண்டியதில்லை.

(சிறைக்குட் போகிறான்)

காவற்காரன் — யார் அது? சீக்கிரம் சொல்! யாரது?

ரோலா — (உள்ளிருந்து) உன் கைதியைக் காண வந்த சன்னியாசி யொருவன்.

(ரோலா சன்னியாசி வேடம் தரித்து வருகிறான்)

ரோலா — என்னப்பா, அலான்ஸோவை — இன்-றயதின மகப்பட்ட, ஸ்பானிய கைதியை — இந்தச் சிறையிற் றானே அடைத்து வைத்திருக் கிறார்கள்?

காவற்காரன் — இங்கேதான் அடைத்து வைத்தி ருக்கிறார்கள்!

ரோலா — நானவனுடன் கொஞ்சம் பேச-வேண்டும்.

காவற்காரன் — கூடாது.

[ஈட்டியாற் தடுக்கிறான்]

ரோலா — அவன் எனது நண்பன்.

காவற்காரன் — உனது சகோதரனாய்த்தா னிருக்கட்டுமே.

ரோலா — அவன் கதி என்னவோ?

காவற்காரன் — உதயத்தில் சாகிறான்.

ரோலா — ஹா, ஆயின் நான் சரியான வேளையில் தான் வந்திருக்கிறேன்.

காவற்காரன் — சரியாக — ஆம் அவன் கொலையுண்பதைக் காண —

ரோலா — போர்ச் சேவகா! நானவனுடன் பேச வேண்டும்.

காவற்காரன் — போ! போ! அது முடியாது.

ரோலா — வேண்டிக் கொள்ளுகிறேன். ஒரே நிமிஷம்.

காவற்காரன் — ஏன் வீணே வேண்டுகிறாய். எனக்கிட்ட உத்தரவு அப்படி.

ரோலா — இப்பொழுது ஒரு தூதன் உள்ளிருந்து வருவதைத்தான் கண்டேனே.

காவற்காரன் — அவன் உத்தரவுச் சீட்டுப் பெற்று வந்ததால் உள்ளே விட்டேன்.

ரோலா — இப் பொற் கட்டியைப் பார் — இவ்வைர மணிகளைப் பார். இத்தனையும் உனது. உனக்கும் உன் சந்ததிக்கும் இவ்வளவு பொருள் — கனவிலும் நினைத்திருக்க மாட்டாய் — எடுத்துக்கொள் — உனக்கே — ஒரு நிமிஷம்

என்னை அலான்ஸோவினுடன் மாத்திரம் விட்டு விடு.

காவற்கரான் — போ! போ! பரிதானம் கொடுத்-துக் கெடுக்கப் பார்க்கின்றனையோ என்னை! எனது கடமை எனக்கின்ன தென்று தெரியும்.

ரோலா — வீரனே! உனக்கு மனைவி யொருத்தி இருக்கிறளா?

காவற்காரன் — இருக்கிறள்

ரோலா — குழந்தைகள்?

காவற்காரன் — நான்கு திவ்ய புத்ரமணிகள்.

ரோலா — அவர்களை எங்கே விட்டு விட்டு வந்திருக்கிறய்?

காவற்காரன் — என் கிராமத்தில். ஏன்! நான் பிறந்த குடிசையிலேயே.

ரோலா — உன் மனைவி மக்கள்மேல் உனக்கு ஆசையுண்டா?

காவற்காரன் — என்ன! ஆசையுண்டோவா! — கடவுளுக்கே தெரியும் — ஆம், ஆசை உண்டு.

ரோலா — நல்லது, போர்வீர, இவ் வன்னிய நாட்-டில் நீ இவ்விதம் கொடிய மரண மடைய வேண்டி விதிவசத்தால் நேர்ந்த தென்று சற்று எண்ணிக்கொள்; உனது கடைசிக் கோ-ரிக்கை என்னவா யிருக்கும்?

காவற்காரன்—என் நண்பர்களு ளொருவன் எனது ஆசிர்வாதங்களைத் தாங்கிச் சென்று அவர்க-ளுக்குச் செலுத்த வேண்டுமென்பதுதான்.

ரோலா — அல்லவா! அந்த நண்பனே உன்னை யடைத்திருக்கும் சிறைவாயிலில் வந்துநிற்க — காலையில் உள்ளிருப்பவன் வதை யுண்கிறான் என்பதையும் செவியுற்ற பிறகு — அவனை ஒரு நிமிஷம்கூட நீ பார்க்கக்கூடாதென்று சொல்லி விட்டால் — உனது ஆசீர்வாதத்தையும் வாய் மொழியையும் தயங்கி நிற்கும் உன் மனைவிக்குப பெற்றுச் செல்ல இடம் கொடுக்காது வெருட்டினால் — அக்கொடியோனைப் பற்றி நீ என்னதான் நினைப்பாய்?

காவற்காரன் — எப்படி! எப்படி!

ரோலா — அலான்ஸோவிற்கு ஒரு மனைவியும் குழந்தையும் இருக்கிறார்கள். நான் அவனது வாய்மொழியை ஏற்றுச் செல்ல வந்திருக்கும் நண்பன்.

காவற்காரன் — உள்ளே போ.

(ஒரு புறமாய்ப் போய்விடுகிறான்)

ரோலா — ஹா! மானுட சுபாவமே! உன்னை உதவிக்குக் கூப்பிட்டும் வாயிழந்தவர்களுண்டா! கானவாசியோ, நாட்டு வாசியோ, எவனாயிருப்பினும் உயிர் உடல் தரித்த பிராணி எதுவும் மனைவி மக்களாகிய பாசக் கயிற்றைப் பிடித்திழுத்தால் ஸ்திரீ புத்ர வாஞ்சை மேலிட்டுத் தலைவணங்காதிவ்வுலகிலில்லை. எஃகு இறெக்கை கொண்டு புயற் காற்றைப் பிளந்து செல்லும் உதிரவாய்க் கழுகிற்கும்கூடத் தன் ஹிருதயத் தருகிருக்கும் இறகு இலவம பஞ்சிலும் மெல்லியததா

னன்றோ! இளகிய மணிப்புறு அக் கழுகினும் மிகுந்த ஆசையுடன் தன் குஞ்சுகளை ஆதரிக்கின்றதோ! — ஆம், அதோ போய்விட்டான் வாயிற்படி தாண்டி! அலான்ஸோ! அலான்ஸோ! நண்ப! ஹா! அயர்ந்த நித்திரை! அலான்ஸோ! எழுந்திரு!

[அலான்ஸோ வருகிறான்]

அலான்ஸோ — (உள்ளே) என்ன! என் வேளை வந்து விட்டதா? நல்லது. (வெளி வந்து) சித்தமாயிருக்கிறேன்.

ரோலா — அலான்ஸோ, தெரியாதென்னை?

அலான்ஸோ — அது—யார் குரல்?

ரோலா — ரோலாவினது.

[ரோலா தன் வேஷத்தைக் களைகிறான்]

அலான்ஸோ — ரோலா! எனது நேசா! — (அவனைத் தழுவிக்கொண்டு) என்ன! நீ எப்படி வாயிற் காப்போனைத் தாண்டி வந்தனை — இவ் வேஷம் —

ரோலா — வார்த்தையாடிக் கழிக்க அரை நிமிஷமில்லை இப்பொழுது. நான் வரும் வழியில் கிடந்த சன்னியாசிச் சவமொன்றினின்று கழற்றித் தரித்து வந்தேன் இவ் வுடையை. இதுதான் எனக்கு உள்ளே வர உதவியாய் நின்றது—இதோ இதையே தரித்துக்கொண்டு நீ வெளியே போய்விடு! — பறக்க வேண்டும்.

அலான்ஸோ — ஆ! — ரோலா? —

ரோலா — உனக்குப் பதிலாக இங்கே இருப்பான்.

அலான்ஸோ — சரி! சரி! எனக்குப் பதிலாக இறந்தும் போவான்! இல்லை! இல்லை! இதைவிடக் கொடு நரகம் என்னை வதைத் தண்ணட்டும்.

ரோலா — நான் சாகமாட்டேன். அலான்ஸோ, பிஸாரோ தேடுவது உன் உயிரைத் தான், ரோலாவினதை யன்று; நீ வெளிச் சென்று என்னை வெகுசீக்கிரம் சிறைமீட்டியும் விடுவாய். இல்லை வித்தியாசமாய் முடிந்தாலும்—நானென்ன, மணற் பாங்கில் உலர்ந்து நிற்கும் தனி வாழை தானே! நான் ஆதரிக்க வேண்டியவர்கள் ஒருவருமில்லை. நீயோ ஒருத்திக்குக் கணவனும், குழந்தையொன்றிற்குத் தந்தையாயுமிருக்கிறாய். அவ் விருவரும் உனதுயிரையே ஆதாரமாகப் பற்றி வாழ்கின்றனர். அலான்ஸோ, போ! போ! போய்விடு. உன்னையே காப்பாற்றிக் கொள்ளுவதற்காக வல்லாமற் போனாலும் கோராவுக்கும் குழந்தைக்கு மாகவாவது, போ!

அலான்ஸோ — எனதுயிர்த் தோழ! என்னை நீ இவ்விதம் தூண்ட வேண்டாம். மனவமைதியுடன் உயிர் நீங்கச் சித்தமா யிருந்து விட்டேன்.

ரோலா — மனவமைதி எங்கிருந்து வரும்? உன்னையே ஆராதிக்கும் ஒருத்தியைத் துக்கக்கடலீலாழ்த்திச் சித்தப் பிரமை யுண்டாக்கிக் கொன்ற பிறகா! இதைக் கேள். நானவளை விட்டு வரும்போது அவளிருந்த நிலைமையை யுத்தேசிக்குங்கால், நீ வெகு சீக்கிர மீண்டா

லன்றி எல்லாம் விபரீதமாய் முடியு மென்பதற்கு ஐயமில்லை.

அலான்ஸோ — ஓ தெய்வமே!

ரோலா — இன்னமும் உன் எண்ணம் சலனப்படுமாயின், இதைக் கேள்! ரோலா வார்த்தையொன்று சொல்லிவிட்டு அதை நிறைவேற்ருது நின்ருனென்பது இதுவரையி லில்லை யல்லவா! இவ்விடம் விட்டகன்று கோராவி னுயிரைக் காப்பாற்றும் பாக்கியத்தை எனக்கு நீ மறுப்பாயாயின் — எது வரினும் நானிவ்விடம் விட்டகலேன். பிறகு ரோலா உன்னருகிலேயே வதை யுண்பதைக் கண்ணுரக் கண்டு, அங்கே கோராவும் குழந்தையும் அலறியலறிச் சாவதையும் நன்ருய் எண்ணி, நீயும் கழுமர மேறுவது உனக்குச் சம்மதமாயின் நீ கம்பீரமாய் இங்கேயே இருக்கலாம்.

அலான்ஸோ — எனக்கு வெறி பிடித்துப் போய் விடும்!

ரோலா — போய் விடு! இன்னுமொரு நிமிஷ தாமதம் — எல்லா மிழந்தோம். பொழுது புலர்கிறது. எனக்காக நீ பயப்பட வேண்டாம் — பிஸாரோவிற்கு நாம் அடங்கித் தாழ்ந்து போய் விட்டதாகப் பாவித்து உடன்படிக்கை பேசிக் காலதாமதம் செய்கிறேன் — இதற்குள் நீ விரைந்து சென்று, பொறுக்கான படை வீரர்களுடன் அந்தரங்க சுரங்கத்தின் வழியாய் மீண்டு, வேண்டுமாயின் உன் நண்பனை வெற்றியுடன் மீட்டுச் செல்வதுதானே. ஆம்! அப்-

படித்தான்! அன்ப, அப்படியே செய்! இதோ, கோரா வெறிகொண்டு கதறும் கூக்குரல் உன் காதிற் படவில்லை! போ! போ! போய்விட்டனையா!

அலான்ஸோ — ரோலா, உனது சிநேக வாஞ்சை என்னைக் கவுரவத்தினின்றும், சன்மார்க்கத்தினின்றும் விலக்கி விடுகின்றதே!

ரோலா — ரோலாவும் மானமழியும் தொழிலுக்குட் படுவானோ?

அலான்ஸோ — ஹா! என்னைக் காக்கும் தெய்வமே.

(அவனைத் தழுவிக் கொள்ளுகிறான்.)

ரோலா — உனது வெப்பக் கண்ணீர் என் கன்னத்தில் விழுகின்றது. போ! என் வெகுமதி எனக்குக் கிடைத்து விட்டது.

[சன்னியாசி யுடையைக் கழற்றி அலான்ஸோவுக்கு மாட்டுகிறான்]

இதோ! மூஞ்சியை மூடிக் கொள்! விலங்கும் குலுங்காமற் பார்த்துக் கொள். உம்—போ! ஈசுவரன் உன்னைக் காப்பாற்றுவார்.

அலான்ஸோ — மறுபடி பொழுது புலருமுன் சந்திப்போம். அப்போதுதான் தெய்வத் துணை வேண்டும். நீ என்னுடன் மீளவோ—நானும் உன்னுடன் மாளவோ — வருகிறேன்.........

(போகிறான்.)

ரோலா — (அலான்ஸோ சென்ற முகமே நோக்கின வண்ணமாய்) அப்பா! அதோ, வெளி வாயிலையும் தாண்டி விட்டான். வெகு சீக்கிரம் கோரா-

வையும் குழந்தையையும் கட்டித் தழுவுவானல்லவா! இப்பொழுது! கோரா! நீ யெனக்குத் தீங்கிழைத்தவ ளன்றோ? என்னுயுளுள் இதுதான் முதல் தடவை நான் ஒருவனை ஏமாற்றினது. நான் செய்தது தவறுயின் ஸத்திய தேவதை என்னை மன்னித்தருள வேண்டும். நாம் மறுபடி சந்திப்போ மென்று அலான்ஸோ பொய்யெண்ணம் கொண்டு சென்றிருக்கிறான்; பாவம்! ஏன்? ஆம், அங்கே (மேல் லோகத்தைக் காட்டி) கட்டாயம், அங்கே மறுபடி — ஒருவரை யொருவர் காண்போம். இம்மையில் அரைகுறையாய் விட்ட உண்மை நட்பு முற்றுப் பெறுவது மறுமையிலேயே. நல்லது, படுத்துக் கொள்ளுகிறேன். காவற்காரன் கண்டு விட்டால் அலான்ஸோவுக்கும் இன்னு மாபத்துத்தான். (படுத்துக் கொள்கிறான்)

[எல்விரா வருகிறாள்.]

எல்விரா — (தனக்குள்) கூடாது. பிஸாரோ என்ன தான் மூர்க்க துரோகியாயிருந்தாலும், அதனுடன் இத் திவ்ய வாலிபனின் மேன்மை இலட்சணங்கள்தான் என்னவா யிருந்தாலும், மானமிழக்கும் செய்கை யொன்றிற்கும் தத்தளிக்கு மென் ஹிருதயத்திற்கு நான் இடங் கொடுக்கலாகாது. இவ்விடம்பக் குரூரன் பிஸாரோவைத் தொலைத்தென் பழி முடித்து விட்டே மறுவேலை பார்க்கிறேன். இது ஸத்தியம். அலான்ஸோதான் கருவி அதற்கு. ஒருவேளை அலான்ஸோ இச் செய்கைக் குடன்படாவிடிலோ..............சரி, ஆயினுமென்!

அலான்ஸோ சிறைதப்பி யோடட்டும் - - - - அதனால், தயங்கி நிற்கும் கோராவிற் கவள் நாதனையும்; திக்கற்ற மகவொன்றிற் கதன் தந்தையையும் ; இவன் பேராண்மையையே தங்கள் புகலிடமாகவும், இக் குணசீலனது திவ்ய ஸ்வரூபமே தாங்கள் வழிபடு விக்கிரக-மாகவும் கொண்டாடும் அப்பேதை பெருவிய-ருக் கவர்கள் அநாத ரக்ஷகனையும் ஒருங்கே மீண்டளித்தேன் என்னும் பேருவகையாயி-னும் எனதாமன்றோ.

[ரோலா வருகிறான் ]

ரோலா — ஹ! நீயார் ? அலான்ஸோ எங்கே ?

அலான்ஸோ — பறந்து விட்டான்.

எல்விரா — பறந்து விட்டனனா!

ரோலா — ஆம் — அவனைத் தொடரலாகாது.

[அவள் கையை இறுகப் பிடித்துக் கொள்ளுகிறான்]

இம் முரட்டுத் தனத்திற்காக என்னை மன்னிக்-கவும். தங்கள் கையை விடமாட்டேன். ஒவ் வொரு நிமிஷத் தாமதமும் அலான்ஸோவின் உயிரைப் பலப்படுத்துகிறது.

எல்விரா — நான் காவற் சேனைகளைக் கூப்பிட்டா லென்ன பண்ணுவாய் ?

ரோலா — செய்யுங்கள். எப்படியானா லென்ன ? சற்று காலதாமதம் தானே வேண்டும்.

எல்விரா — இதைக் கொண்டு நான் மீறிக் கொ-ண்டாலோ ? (ஒரு சிறு கட்டாரியைக் காட்டுகிறாள்)

**ரோலா** — இதோ மார்பைத் திறந்து விட்டேன். எனினும் — வாய்ப்பிராணன் போகும் வரையில் — உயிர் துடித்துச் சென்று உடல் விறைக்கிற வரையில் — இக் கையை மாத்திரம் விடேன்.

**எல்விரா** — விட்டு விடு — உண்மையாக — நான் காவற் சேவகனையும் கூப்பிடவில்லை — அலான்ஸோவைத் தேடச் சொல்லவுமில்லை — வாஸ்தவம்.

**ரோலா** — ஆயின் இதோ விட்டு விட்டேன். உங்களிரு கண்களின் தீரப்பார்வை தங்கள் மேன்மையை எனக்கு ரூபித்து விடுகின்றது.

**எல்விரா** — உன் பெயரென்ன? நன்றாய்ச் சொல்லலாம். என்னுத்தரவுப்படி காவற்காரன் இதை விட்டுப் போய் விட்டான்.

**ரோலா** — என் பெயர் ரோலா.

**எல்விரா** — ஹ! பெருவியர் தலைவன்!

**ரோலா** — நேற்று வரையில் அவன் தான். இன்று, ஸ்பானியர் கைதி.

**எல்விரா** — அலான்ஸோமீதுனக்கிருந்த வாஞ்சையுன்னை இக் காரியம் செய்யத் தூண்டிற்று?

**ரோலா** — அலான்ஸோ என் நண்பன் தான். அவன் பொருட்டு என்னுயிரைத் துரும்பாகவும் மதியேன். ஆனால் என்னை இக்காரியத்தில் தூண்டியது நட்பிலும் மிக்க பலமான மற்றோர் நோக்கம்.

எல்விரா — நட்பல்லா விடில் இன்னொரு பிரேரே பணை தான் இவ்வித சுயநய மற்ற செய்கைக்கு ஏதுவா யிருக்கும்.

ரோலா — அது வென்ன வென்றால் —

எல்விரா — காதலா ?

ரோலா — அதுவே !

எல்விரா — சரி, நாமிருவரும் இங்கு ஒரே காரி யத்தை யுத்தேசித்து வந்திருக்கிறோம். நான் உனது நண்பனைக் காப்பாற்றும்பொருட்டே—

ரோலா — என்ன ! தயாளமும் தீரமும் நிறைந்த ஸ்திரீ, கோராவன்றியும், ஒருத்தியுண்டோ !

எல்விரா — ஆயின், ரோலா ஸ்திரீகளை இவ்வளவு இழிவாகவா மதிக்கிறான் !

ரோலா — அப்படியன்று, நீங்கள் எங்களைவிடச் சில விஷயங்களில் தாழ்ந்தும் சில விஷயங்-களில் உயர்ந்து மிருக்கிறீர்கள்.

எல்விரா — ரோலா ! உன்னை இக் கொடியோனின் வாளினின்று காப்பாற்றி, உன்னை யுன் நாட்டிற்கும், உன் நாட்டிற்குச் சமாதானத்தையும் நான் மறுபடி யளிப்பேனாயின் — அப்பொழுது எல்விராவைக் கோராவுடன் சேர்த்துச் சொல்லுவா யல்லவா !

ரோலா — இதற்கு வழி யெப்படி என்பது தெரிவ-தற்குமுன் ஒன்றும் நிச்சயமாகச் சொல்லலா-காது.

எல்விரா — இக் கட்டாரியை எடுத்துக் கொள்.

ரோலா — எவ்விதம் உபயோகப் படுத்துவது இதை ?

எல்விரா — பாழும் பிஸாரோ படுத்துறங்கும் கூடாரத்திற்குன்னை அழைத்துச் செல்கிறேன். சாதுக்களுக்குச் சனியனும், — உங்கள் வம்சத்திற்கே நமனும் — இந் நாட்டைக் காடாக்கும் இராட்சசனும் அவதாரம் செய்திருக்கின்ற அவனை —

ரோலா — உனக்கும் ஏதோ தீங்கிழைத்திருக்கின்-றானல்லவா ?

எல்விரா — அலட்சியமும் அகம்பாவமும் எவ்வளவு விஷம் புகட்டலாமோ அவ்வளவு —

ரோலா — உம், அவனைத் தூக்கத்தில் கொன்று விட வேண்டுமென்கிறாய் !

எல்விரா — ஏன். அலான்ஸோவை யவன் விலங்கிட்டுக் கொன்றிருக்க மாட்டானோ ? தூங்குகிறவனும் கைக்குத் தளையிடப் பட்டிருப்பவனும் ஒரே ஸ்திதியிற்றானே இருக்கிறார்கள். கேள். ரோலா, நான் இக் காரியம் செய்யப் புகுவது முற்றிலும் அவனெனக்கிழைத்த வஞ்சனை கொடுமைகளுக்காகப் பழிதீர்க்கும் பொருட்டு மாத்திரமே அன்று; பொது ஜன நன்மையையும் தூய நடு நிலைமையும் கருதியே பெரும்பாலும் நான் இந் நித்திராஹத்திக்கும் துணிந்தேன். விளங்கிற்றோ ?

ரோலா— நன்மை செய்வதற்குக்கூட தீய வழியைக் கடைபிடிக்கக் கடவுள் நமக்கனுமதி கொடு

க்க வில்லையே! துன்மார்க்கத்தில் மகிமை பெறப்பார்ப்பது, களைமாட்டில் கறவை பழகுவது போலன்றோ!

எல்விரா — சே! உன்னுட்டோர் நன்மையைப் பற்றி யுனக்கிருக்கும் அக்கறை இவ்வளவு தானு! இக் கைகளே — எனதாவியும் உடலும் சற்று நடுங்கினுலும் — குத்தைப் போட்டு விடுகின்றன பார்.

ரோலா — ஆயின் உனக்கு விநாச காலம் தான்! பெருவியற்காக நீயேன் உயிர்துறக்க வேண்டும்? கத்தியைக் கொடு என்னிடத்தில்!

எல்விரா — இந்தா — என்னுடன் வா — ஆனால் முதல் — வெகு கொடுமை தான் — காவற்காரனை வீழ்த்தித் தீர்க்கவேண்டிய தவசியம்.

ரோலா — இங்கு காவல் காத்து நின்ற போர்வீரனையா?

எல்விரா — அவனைத்தான். இல்லாவிட்டால் உன்னைக் கண்டவுடன் கூக்குரலிட்டுப் படையைக் கூட்டி விடுவான்.

ரோலா — போகும் வழியில் அப்போர்ச் சேவகனை நான் குத்தித் தள்ள வேண்டும்? உம் — இதோ கத்தியை வாங்கிக் கொள்.

எல்விரா — ரோலா!

ரோலா — அச் சேவகன், வாஸ்தவமாய், ஓர் புருஷன். ஆளுருவம் சுமப்பவர்களெல்லாம் புருஷர்களாக மாட்டார்கள். பொன் வேண்

டான். என் வேண்டுகோள்களுக் கிணங்-
கான். அவன் ஹிருதயமே அவனுக்குப் பரி
தானமாய் நின்று என்னைச் சிறைச் சாலைக்குள்
விட்டது. என்னாட்டோர் க்ஷேமமா யிருக்க
வேண்டுமாயின் அவனுக்குத் தீங்கு கனவிலும்
நினையேன்.

எல்விரா—ஆயின், அவனும் நம்முடன் சேரவேண்-
டியது தான். அவனுயிர்க்கு நான் உத்தர
வாதம்.

ரோலா — இதை மாத்திரம் நீ சரியாய் அறிய
வேண்டும். நமக்கென்ன நேரிடினும் அவ்
வீரனது ரோமமொன்றிற்குக்கூட யாதோர்
வித விபத்தும் வர இடங்கொடேன்.

(போகிறார்கள்.)

## இரண்டாங் களம்

இடம் — பிஸாரோவின் கூடாரம்

[பிஸாரோ ஓர் கட்டிலில் படுத்துறங்குகிறான்.]

பிஸாரோ — (தூக்கத்தில்) இரக்கமா, உனக்கு?
பாதகா! — உம், மாரைப் பார்த்துக் குத்துங்
கள்! ஒதுங்கி நில்லுங்கள், எங்கே, இரத்தம்
பெருக நான் பார்க்கட்டும்! — ஹ, ஹ, ஹா!
இன்னுமொருதரம் — எதோ! நான் அம்முறு
வலைக் கேட்டனுபவிக்கட்டும்.

(ரோலாவும் எல்விராவும் வருகிறார்கள்.)

எல்விரா — அதோ! ஒரு நிமிஷம் தாமதிக்காதே
இப்பொழுது.

ரோலா — ஆம்! நீ இங்கே இருக்கலாகாது. இவ் விரத்தச் களம் ஒரு ஸ்திரீ இருப்பதற்குத் தக்க இடமன்று.

எல்விரா — ஆம், ஒரு நிமிஷம் தயங்கினுல் —

ரோலா — போ, உன் அந்தப்புரத்திற்குப் போய் விடு. மறுபடி இங்கே வராதே. நான், நீ இருக்குமிடம் வந்து சேருகிறேன். நீ இக்கொடிய காரியத்தில் சம்பந்தப் பட்டதாகத் தெரிய வேண்டாம். வேண்டிக் கொள்ளுகிறேன்.

எல்விரா—சரி. நான் காவற்காரனையும் அழைத்துச் செல்லுகிறேன். (போகிருள்)

பிஸாரோ — (தூக்கத்தில்) போங்கள்! ஐயோ, போய் விடுங்கள்! அகோர ராட்சசர்களே! என் மார்பை இப்படிக் கிழிக்க வேண்டாம்!

ரோலா — இல்லை! நான் எண்ணினது தவறு — ஆருயிர்க்கு அமைதி தரும் அரிய நித்திரையின் இனிய சுகத்தையும் அனுபவிப்பனே இப் பாதகன் இனி. இதோ பாருங்கள், பேராசைகொண்ட பெருமடையர்காள்! மதம் மே விட்டு மானுட இரத்த வெறி பிடித்து அலையும் இக் குற்றவாளியின் அமைதியைப் பாருங்கள். இதோ, இவனென் கத்தி நுனியில் இருக்கின்ருன் — ஒரே குத்து. சே! கூடாது. எனது மனமும் காயமும் மறுக்கின்றன. ரோலா ஒரு பொழுதும் கொலையாளியாக மாட்டான்! ஆயினும், எல்விராவையும் காப்பாற்ற வேண்டும் (கட்டிலருகில் வந்து) பிஸாரோ, எழுந்திரு!

பிஸாரோ — (திடுக்கிட்டெழுந்து) யார்! சேவக! —

ரோலா — பேசாதே — இன்னொரு மொழி உன் மரணம். உதவிக்குக் கூப்பிடாதே. உன் மெய் காப்பாளர் வருவதைவிட வேகமாய் இக் கை காரியத்தை முடித்து விடும்.

பிஸாரோ — நீ யார்? உனக்கென்ன வேண்டும்?

ரோலா — நான் உன் சத்துரு — பெருவிய ரோலா — உன்னைக் கொல்ல வேண்டா மெனக்கு. அதுவாயின் நீ தூங்குகையிலேயே கொன்றிருப்பேனே!

பிஸாரோ — சொல்! இன்னுமென்ன!

ரோலா — நீ இப்பொழுது என் இரக்கத்திற்குட் பட்டவனு யிருக்கிறுய். இதற்குப் பதிற்சொல். இது வரையில் பெருவியன் ஒருவன் உனக்காவது உன் இனத்தாருக்காவது எவ்வித ஹிம்சையாவது செய்திருக்கிறுனு? இன்னும், நீ யாவது உன் கூட்டத்துள் எவனுவது அகப் பட்டுக் கொண்ட பெருவியன் ஒருவனுக்காவது இரக்கம் காட்டி யிருக்கிறீர்களா? இரண்டுமில்லை. இப்பொழுது ஒரு பெருவியன் பழிவாங்குவ தெவ்விதம் என்பதுணர்வாய். உனக்கிருதயம் என்ப தொன் றுண்டானுல் நன்று யுணர்வாய் (கட்டாரியை பிஸாரோ காலின் கீழ்ப் போட்டு விடுகிறுன்) அதோ!

பிஸாரோ — என்ன விந்தை யிது!

(ஒரு புறமாய்த் திகைத்து நிற்கிறுன்.)

ரோலா — பிஸாரோவும் இதைக் கண்டு வியப்பனே? தங்களுக் கிழைத்த தீங்கை க்ஷமிக்க வேண்டு மென்பது, கிறிஸ்தவ கோட்பாடுகளுள் ஒன்றென்று எண்ணி யிருந்தேன். ஆனல் உண்மையில் அதை — பெருவியராவது — கையாடக் காண்கின்ருய்.

பிஸாரோ — ரோலா! நீ என்னை யுண்மையில் பிரமிக்கச் செய்து விட்டாய் — என்னை நீ வென்றடக்கி விட்டனை. (கலங்கி யுலாவுகிருன்.)

[எல்விரா வருகிருள்]

எல்விரா — ஆய்விட்டதா? மாண்டனனு அவன்? (பிஸாரோவைப் பார்க்கிருள்) என்ன! இன்னும் உயிருடனு? ஆயின் என்குடி கெட்டது. கடைகெட்ட பெருவியர்களே, உங்களுக்கினி மனமிரங்குவதில்லை! ஓ ரோலா! இதென்ன பயங்காளித்தனமா? இரண்டகச் செய்கையா?

பிஸாரோ — என்ன! இப்படியும் கூட —

ரோலா — போ! — எல்விராவுக்குத் தான் இன்ன பேசுகிருேமென்பது தெரியாது. (எல்விராவைப் பார்த்து) என்னைப் பிஸாரோவுடன் தனியே விட்டகல் — போய் விடு!

எல்விரா — ரோலா, என்ன! நான் பின் வாங்குவேனென்று எண்ணுகின்றனையோ? அக் கொடியோனின் மாருட் செலுத்த உன் கையில் நானே ஒரு கட்டாரி வைத்தேன் என்பதையும் பயந்து மறுப்பேனே! இல்லை. எனக்கிருக்கும் வருத்தமெல்லாம் நானே செய்யா

மற் சக்தியற்ற உன் கைகளை நம்பிக் கத்தியைக் கொடுத்தேனே என்பது தான். இம் மனிதன் பொருட்டு நீ காட்டிய இரக்கத்திற்கு நேர் கைம்மாறு உன் வம்சத்திற்கு நாசம் தான் என்பதை நீ கூடிய சீக்கிரத்தில் கற்றுணர் வாய். — பேதையே, போ !

பிஸாரோ — யாரங்கே, சேவகா! சீக்கிரம் வா! ஆவேசம் பிடித்திருக்கும் இந்த ஸ்திரீயை இழுத்துச் செல்.

எல்விரா — ஆம். சேவகனைத் தான்! நானும் கூப் பிடுகிறேன் அவர்களை. வெகு சீக்கிரம் அவர்க ளென்னைக் கொலைக் களம் கூட்டிச் செல்வார் கள் என்பதும் தெரியும். ஆனால் பிஸாரோ,— உன் கண்கள் என்ன தான் அக்கினி கக்கின லும் — என் தைரியம் ஓரணுக் குறையும் என் றெண்ணாதே. அல்லது, ஒரு ஸ்திரீயின் கோப மும் பகையுமே அவளை இக் காரியத்துட் தூண்டின வென்றும் நினைக்காதே. அதுவே காரணமாயின், — இவ்வபஜயத்தால், — நான் அவமானத்திலும் ஆத்ம நிந்தனையிலு மன்றோ ஆழ்ந்து கிடக்க வேண்டும். ஆனால், நான் இவ் விதம் தோல்வியுற்று அழிவடைந்தாலும் எனது நோக்கத்தின் மேன்மை எத்தன் மைத்து என்பதறிவேன். முயற்சியிலேயே எனக்குக் கீர்த்தி யுண்டு. கோடிக்கணக்கான ஒன்றுமறியாப் பேதைகளை — உன்னை மறு வுலகனுப்பி இரத்தப் பிசாசின் நகங்களி னின்று மீட்டவே நான் இக் காரியம் செய்யப் புகுந்தேன் என்பதை நான் பெருமையுடன்

முறையிட்ட வண்ணமே வாய்ப் பிராணன் விடு-வேன்.

ரோலா — நோக்கத்தினளவு யோக்யதை செய்கைக்கு மிருக்குமாயின் ரோலாவுமதைச் செய்யச் சலிப்பனோ? (மெய்காப்பாளர் வருகிறார்கள்.)

பிஸாரோ — ஸ்வரூபத்தைக் காட்டிய இவ் விராட்சசியைப் பிடியுங்கள். உங்கள் தலைவனைக் கொல்ல முயன்றாளிவள்.

எல்விரா — உங்கள் மேல் ஆணையாய்த் தொட வேண்டா மென்னை — உங்கள் கைதியே நான் — உங்கள்பின் வருகிறேன். ஆனால், அடே, அவர்களின் தலைவ சிகாமணி, முதலில் நான் சொல்வதைக் கேட்டு விடு. ஆனால், முதலில், ஏ ரோலா! என் மன்னிப்பை யங்கீகரி. உன் பெருந்தன்மைக்கே நான் இரையாயினும் அதற்காக நானுன்னை மெச்சாம லிருக்கலா-காது. ஆனால் நானே தான் என்னாசைத்தைத் தூண்டிக்கொண்டேன் — நீ என்னைக் காப் பாற்றியு மிருப்பாய். உனது நிந்தனை கல்லறை வரையில் என்னைப் பின்பற்ற வேண்டாம். ஆதியில், இப் பாஷாண்டி என்னென்ன தந் திரங்களால் கபடற்ற என் கற்பிற்குச் சுரங்கம் வைத்தான் என்பது மாத்திரம் உனக்குத் தெரிந்தால்! — நான் வாழ்ந்திருந்த கன்யா மடத்தில், நான் நம்பியிருந்தவர்களை மோசத்-தினாலும் பணத்தினாலும் எவ்விதம் கெடுத்து — மதிமயங்கி நின்ற வென்னை, படிப்படியாய்ப் பாபப் படுகுழியில் —

பிஸாரோ — என்ன! கட்டளையைக் கேளீர்களோ! இழுத்துச் செல்லுங்க ளவளை இவ்விடம் விட்டு.

எல்விரா — ஆனதாய்விட்டது — என் சரித்திரம் முழுவதும் உனக்குத் தெரியுமாயின், ரோலா! என்னைக் கண்டு நீ மனமிரங்குவாய்.

ரோலா — பஞ்சபூத சாட்சியாய் என் உள்ளம் உருகுகிறது.

பிஸாரோ — கழுதைகளா! காராக்கிருகம் கொண்டு போய்த் தள்ளுங்கள்! — கழுமரம் இந்நிமிஷமே தயாராக வேண்டும்.

எல்விரா — வீர சிபாய்களே. ஒரு நிமிஷம் — உங்கள் தலைவனை ஸ்தோத்திரம் பண்ணத்தான் — ஒருதரமாகிலும் பிஸாரோ நியாய தண்டனை விதித்தான் என்பதைத் திகைத்து நிற்கும் உலகிற்குச் சொல்ல வேண்டும். ஆம். மனுஷ புத்தி தனக்கு எட்டியவரையில் சிருஷ்டித்திருக்கும் கருவிகளைக் கொண்டு என்னைச் சித்ரவதை செய்யுங்கள். அது நியாயம்தான். ஆம். உனது ஆட்களை விட்டு, உன்னைத் தழுவி யானந்தித்த — சில சமயங்களி லுன்னுயிரைக் காப்பாற்றியு மிருக்கிற, இக் கரங்களின் நரம்புகளை யெல்லாம் துண்டு துண்டாய் வெட்டச் சொல். காதலும் வணக்கமும் ஒழுக உன் வதனத்தைக் கண்டு மலர்ந்த இக் கண்களில், பொங்கும் ஈயத்தைப் பாய்ச்சக் கட்டளையிடு. பிறகு நீயே சாரதியாய் வந்து, நாமிருவரும் உல்லாசமாய்ச் சென்ற இரதத்தை என் மார்பு மேற் செலுத்தி உனக்கொரு காலத்தில் தலை-

யணையாய் இருந்து மானமிழந்த இம்மார்பு மரணாவஸ்தையிற் துடிப்பதைக் கண் குளிரக் கண்டனுபவி. இவைகளெல்லாம் நான் சகிப்பேன். ஏனெனில் அவ்வளவும் எனக்கு நியாயமாகும். கடைசியாக கதறிச் சாகும் கர்ணாம்ருத சங்கீதத்தைக் கூசாது செவியுற் றனுபவிக்க வேண்டி என்னை இரண்டாகக் கிழிக்க அவர்களுக்குக் கட்டளை யிடுவையாயின், நீ ஏமாந்தவ னவாய். புலம்பிக் கூக்குர லிட மாட்டேன். இப்பொழுது என் ஆத்மா உன் அதிகாரத்தைத் திரஸ்கரிக்கிறது போலவே, கடைசி வரையில் என் உடலின் பொறுமை உன் குரூரத்தை லட்சியம் பண்ணாது.

பிஸாரோ — கையிற் கொலை கொண்டு நிற்கும் இப் பாதகி சொல்வதற்கும் செவி கொடுக்கின்றனையோ ?

ரோலா — ஆம் ! இவள் சாட்டும் குற்றம் பொய்யேயாயின் நீ யதைக் கேட்பதற்கு இவ்வளவு கூசமாட்டாய். உண்மையாயின், உன் மனச்சாட்சி யுன்னைப் படுத்தும் வேதனாவஸ்தைகளில் அரைவாசி கூட உன் மூர்க்கம் அவள் சரீரத்திற் குண்டாக்க முடியாது. ஏன் வீணே பிரயாசப் படுகின்றாய் !

எல்விரா —ஹா ! பிரபஞ்சமே போய் வருகிறேன். ரோலா, போய் வருகிறேன். (பிஸாரோவைப் பார்த்து) விடைகொடுக்கவேண்டும், ஏமோட்சபிரஷ்டா, காமக் குரோதாதிகளை தவிர வேறு-

ன்றிற்கும் உன் ஹிருதயத்தில் இடமில்லை — நாம் மறுபடி சந்திப்போம்! நாமிருவரும் இன்னொரு இடத்தில் சந்திக்கப் போகிறோம் என்பதை எண்ணி எண்ணி உயிர்வாழ் இங்கே. நீ கடைசியாகக் கண் மூடும்பொழுது நிர்க்கதியான உனதாத்மா தவித்துருகுமே, அப் பொழுது, என்னைக் கன்னிமடத்தி னின்று வஞ்சித்தபகரிக்கையில் என் பரிசுத்த குரு இட்ட சாபமெல்லாம் உன் செவியில் தொனிக்கும். தன் குழந்தையைக் கெடுத்தவனைத் தெய்வமே கேட்க வேண்டுமென்று கதறி மரித்த என் தாயின் கூக்குரல்! இரத்தம் உறைந்த வாயுடன் முறுகி மடிந்த என் தமயனின் மரண முறுவலும் — அட சண்டாளா! தன் தங்கைக் கிழைத்த மானபங்கத்திற்கு உத்தரம் கேட்ட அவனையும் மென்னியைப் பிடித்துக் கொன்றனையே, கொடிய பாதகா! அவைகளெல்லாம் எனக் கிப்பொழுது கேட்கின்றன! இந்த ஞாபகமே எனக்குப் பைத்திய முண்டாக்கி விடுகிறது. நமன் வந்திருக்கும்போது உனக்கெப்படித்தான் இருக்குமோ பார்த்துக் கொள்!

பிஸாரோ — ஒரு நிமிஷம் இன்னும் தாமதிப்பீர்களாயின் — உங்களுயிர் உங்கள் —

எல்விரா — முடித்து விட்டேன் — கடைசி மானுட சபலமும் ஆய்விட்டது. இனி, கலங்கா நெஞ்சத்துடனும் அசையாத் திடத்துடனும் என் விதியை யனுபவிக்கப் போகிறேன். நான்

சிறப்பாய் வாழாதது பிஸாரோவின் செய்கை. ஆனால் சிறப்புடன் சாவது எனதே.

(சேவகர்களுடன் போகிறான்)

பிஸாரோ — ரோலா, மேன்மையும் கீர்த்தியுமுள்ள உன்னைப் போன்ற வீரனொருவன், ஆவேசம் கொண்டுளறும் இவ் வபலையின் கட்டுக் கதைகளை நம்பலாகாது. இக் கடுஞ் சொற்களுக் கெல்லாம் காரணம்—ஹா! இக் கலகக்காரன் அலான்ஸோமீதிவள் கொண்டிருக்கும் காம மிகுந்த மோகம்தான் காரணம். எனது சிறையிலவன் —

ரோலா — அலான்ஸோ உன் வசத்திலில்லை.

பிஸாரோ — என்ன!

ரோலா — ஆம். அவனை மீட்ட வந்தேன்—காவற்காரனை ஏமாற்றிக் காரியத்தைச் சாதித்தும் விட்டேன். நானே உனது கைதியாக விருக்கிறேன் இப்பொழுது

பிஸாரோ — அலான்ஸோ தப்பிவிட்டனனா! ஆயின் என் ஹிருதயம் தனக்கினிய பழியைத் தீர்த்துத் திருப்தி பெறக் கொடுத்து வைக்க வில்லையா?

ரோலா — இவ்வித விகாரங்களை உன் ஹிருதயத்தினின்றும் துரத்தி விடு. அப்பொழுதே அதற்கு அமைதி நீ தேடுபவனாவாய்.

பிஸாரோ — ஒருங்கே எனமேற் பாயும் ஒருகோடி பகைவர்க்கும் என்னால் மார்கொடுக்க முடியும். ஆனால் என் சுபாவத்தோடு சண்டை போட முடியாதே.

**ரோலா** — ஆயின், பிஸாரோ, வீரனென்று பேர் எடுக்கும் வீணைசை ஏனுனக்கு? தன்னையே தான் வெல்வதிலுள்ள வெற்றி யொன்றிலேயே 'அதிர்ஷ்டம்' என்று சொல்வதற்கு இடமில்லை. சாதாரண போரில் தற்செயலாய் வெற்றிமாலை உன் கழுத்தி லிருந்து நழுவி விடலாம். அல்லது தற்செயலாய்க் கிரீடமொன்று உன் தலையிலேறினும் ஏறலாம். உன்னுடனேயே நடக்கும் உட்போரில்—திடமாய் மாத்திரம் இருப்பாயாயின் — சன்மார்க்க பிரேரேபணையே கடைசியில் வெற்றி பெறும்.

**பிஸாரோ** — பெருவியனே! நானுன்னிடத்தில் நன்றியற்ற துரோகியா யிரேன். நீ யுன் இருப்பிடம் செல் — உன்னை விடுதலை செய்து விட்டேன்.

**ரோலா** — இதில் நீ கவுரவத்தையும் கடமையையுமே கடைப்பிடித்து நடக்கிறுய்.

**பிஸாரோ** — உன்னைக் கண்டு ஆச்சரியப் படாமலிருக்க முடியவில்லை. ரோலா, நாமிருவரும் மித்திரர்களா யிருக்கலாகாதா!

**ரோலா** — போய் வருகிறேன்! எல்விராமீ திரக்கம் கொள்! நன்மைக்கு நண்பனுக முயற்சி செய்— அப்பொழு தெனக்கும் நண்பனுவாய்.

(போகிருன்)

**பிஸாரோ** — பேராசையே! நான் பின்பற்றி வந்து மாயை யின்னதென்று சொல். எனக்கே சுதந்தரமான அவ்வொரு இன்பம் எங்கே? எனது

புகழ் அழுக்காற்றிற் கடையாளம். எனது காதல் துரோகத்திற்கு ஏமாந்த பேதை. எனது மகிமைக்கு என்னிடம் கற்ற பையனாலேயே கிரகணம். எனது பழிதீர்க்கும் நோக்கமும் காட்டுமிராண்டிப் பகைவனொருவனின் முரட்டபிமானத்தால் தோற்கடிக்கப்பட்டு நிந்தனையும் பெற்றது — அவனது ஆவியின் சுய மகிமையைக் கண்டு நான் மயங்கி அமிழ்ந்துவிட்டேன்! நான் வந்த வழியே மீண்டால் தேவலை — என்றால் முடியாது. இவ்வித ஆத்ம நிந்தனை ஞாபகங்களி னின்று தப்பினால் போதுமே! இல்லை. எண்ணமும் ஞாபகமுமே எனது நரகம்.

(போகிறான்)

# ஐந்தாவது அங்கம்

## முதற் களம்

இடம் — காடு. தூரத்தில் ஒரு குடிசை தென்படுகிறது.

[குழந்தையை இலைகள் பரப்பிப் படுக்கவிட்டு கோரா பக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாள். மின்னலிடியுடன் புயல் அடிக்கிறது]

**கோரா** — ஓ பிரகிருதியே! வாஞ்சையின் வலிமை யுனக்கில்லை. எனதாவி எதற்கும் சலிக்காது. தாங்கமாட்டாமற் தவிப்பது நடுங்கும் எனது உடல்தான். என் கண்ணே! உன்னைச் சுமக்கத்-தான் முடியாமல் அயர்ந்து போனாலும், இந்-தப் படுக்கை கூடவா உனக்குப் போடாமல் போய் விடுவேன்! உன் தந்தை மீளாவழி போயே விட்டார் என்பது மாத்திரம் நிச்சய மாய் விட்டால், நானும் உன் பக்கத்தில் விழுந்து விடுவேனே. எழுந்திருக்காதே — அப்பா! படுத்துக்கொள். ஒரே படுக்கை யாய்ப் படுத்துக்கொள்! (மின்னலு மிடியும்) இரக்கமற்ற புயலே! கோராவின் துன்பத்தைக் கண்டு மனமிரங்கி உன் ஆவேசத்தை யடக்கச் சொல்லவில்லை. உங்கள் இடி கூட அவரைத் தூக்கத்தினின் றெழுப்பாதவரையில் தூங்கு மிக் குழந்தையை நான் அலட்டவுமாட்டேன். உயிருளோர் குரலொன்று கேட்க நான் தவிப்-பது தெய்வத்திற்குத் தான் தெரியும். என்

பிரஞ்ஞை அடியுடன் தப்பிப் போகிறவரையில்
நான் எதையும் சகிப்பேன். (பாடுகிறாள்.)

### அகவல்

கொடியதாம் புயலே! கொடியதாம் புயலே!
அடிகொள் என்மேல் அருள்நீ கொள்ளேல்;
ஆம்ஆம் அதுவுநின் அருளே யாகும்,
ஆமோர் அச்சமும் அடையும் நிழலும்
இல்லா தன்னை எதிர்ப்பேன் எதிர்ப்பேன்,
கொல்லும் நினது கோபத் தீக்கும்
என்றன் மனத்தை இரையாத் தருவேன்,
நன்றுநீ எனையென் நாயகன் அலான்ஸோ
பக்கலிற் சேர்ப்பின் பண்பே என்பேன்,
மிக்குயர் நினது மின்னலின் ஒளியால்
அவருடல் கண்டு அருகிற் சார்ந்து
தவமுறக் கட்டிச் சஞ்சல நீங்குற
அணைத்தே முத்திட் டங்கங் குளிர்வேன்
பிணைப்புற இறந்து பேரின் படைவேன்.

### தாலாட்டு

முத்தே பவழமே முழுமணியே என்கண்ணே
இத்தரையில் நீயும் எழுந்திடவே கண்விழியாய்.

நீரார் உலகினில்நீ நீடூழி வாழ்ந்திடவே
சீரார் பசுங்கிளியே செல்வமே கண்விழியாய்.

உன்றனருந் தந்தையோ ஒருபோதும் கண்விழியார்
என்றன் அருமருந்தே இப்போதே கண்விழியாய்.

அன்பான கண்மணிநீ அயர்ந்து துயில்போவதற்கு
இன்பாக என்கரங்கள் எழில்தொட்டி லாகவே.

தேடரிய மாமணியே தெள்ளமுதே முக்கனியே
காடறியக் கண்காண நாயகமே கண்விழியாய்.

இன்னும், சாந்தமாகமாட்டீர்களா! உணர்ச்சி
யற்ற பூதங்காள்! இதற்கும் நீ மந்தஹாஸத்-

துடன் தூங்குகின்றனையே, என் செல்வமே! ஓ, காலனே! இக் குழவியின் தாய்க்கும் எப்பொழுது நீ இவ்வித அமைதி அளிக்கப்போகின்றனையோ? ஐயோ, பாவம். நன்றாய்ப் போர்த்துகிறேன். பாழும் புயலுன்னை?

[தனது மேலங்கியை அவள் குழந்தைமேல் சுற்றும்போது அலான்ஸோவின் குரல் தூரத்தில் கேட்கிறது]

அலான்ஸோ — கோரா!

கோரா — ஹ! (எழுந்திருக்கிருள்)

அலான்ஸோ — கோரா!

கோரா — ஹோ! ; என் ஹிருதயமே! தெய்வமே என்னைச் சோதிக்காதே! அது அலான்ஸோவின் குரலன்ரே?

அலான்ஸோ — (இன்னும் சமீபத்தில்) கோரா!

கோரா — அது! அது — அலான்ஸோதான்!

அலான்ஸோ — (வெகு சமீபத்தில்) கோரா! என் செல்வியே!

கோரா — அலான்ஸோ! இதோ! இங்கே! அலான்ஸோ. (வெளியே ஓடுகிருள்.)

[இரண்டு ஸ்பானிய சேவகர்கள் வருகிருர்கள்]

முதல் சேவகன் — நமதெல்லை தாண்டி வெகுதூரம் தான் வந்து விட்டோமென்று சொல்லுகிறேனே. குழூஉக்குறி எல்லை எல்லாம் மாறிவிட்டது.

**இரண்டாம் சேவகன்**—ஏதோ! தப்பியோடுகையில் அவர்கள் அந்தரங்க வழியைக் கண்டுபிடித்து விட்டோம். நமது அதிர்ஷ்டம்தான். பிஸா-ரோவினிடம் தக்க வெகுமதி பெறலாம்.

**முதல் சேவகன்** — இப்படிவா: சூரியன் மேகமூடி யிருந்தாலும் இடது பக்கத்திலிருக்கிறது.

[குழந்தையைப் பார்க்கிறான்]

இதென்ன விந்து! ஒரு குழந்தை! என்ன ஆச்-சரியம்!

**இரண்டாம் சேவகன்** — வெகு அழகானவொரு சிறு சிசு விது! அதன் அஞ்ஞானித் தாயின் ஆதீனத்தினின் றிதை மீட்டிச் செல்வோமா-னால் பெரிய தர்மமாகும்.

**முதல் சேவகன்** — ஆம். நம் வீட்டிலும் ஒரு குழந்தை யிருக்கிறது. அதுவு மிதுவும் ஒன்-றாய் விளையாடும் — வா போவோம்.

[குழந்தையை எடுத்துச் செல்கிறார்கள்.]

**கோரா** — (உள்ளே) இந்த வழி வா, அன்ப.

[கோராவும் அலான்ஸோவும் வருகிறார்கள்.]

நான் சொன்னது சரிதான் — அங்கே — அதோ — அந்த மரத்தடியில் — எந்தத் தாய் தான் தன் குழந்தையை விட்டுவந்த இடத்தை மறப்பாள்! நீயே போய் அவன் தூங்குகையில் பார்க்கிறாயா? மலர்ந்த கண்களுடன் அவனே உன்னை வரவழைக்க, இதோ எழுப்பி வரட்-டுமா? ஆம், அதுதான் சரி! நீ இங்கேயே இரு; அவனை ரோஜா மலர் போன்ற நித்திரையினின்

றெழுப்பி அருணோதயமெனச் சிவந்த முகத்துடன் நானே கொண்டு வருகிறேன்.

[அங்கு சென்று போர்வை மாத்திர மிருக்கக் குழந்தை போய்விட்டதைக் கண்டு கதறுகிறாள்.]

அலான்ஸோ — (அவளிடம் ஓடி) கோரா! என தினியாய்! என்ன நேரிட்டு விட்டது?

கோரா — ஐயோ! போய் விட்டதே!

அலான்ஸோ — ஐயோ! தெய்வமே!

கோரா — போயே போய்விட்டாயே! என் கண்ணே! என் பவழமே!

அலான்ஸோ — எங்கே! எங்கே விட்டிருந்தாய்?

கோரா — இங்கே! இங்கே!

[குழந்தையை விட்டிருந்த விடத்தில் மோதிக் கொள்கிறாள்]

அலான்ஸோ — பொறு! பொறு! கோரா! விழித்துக்கொண்டு இங்குதான் எங்கேயாவது தவழ்ந்து போயிருக்கிறான்; அகப்படுவான். நீ அவனை விட்டு வந்த இடம் இதுவே என்பது நிச்சயம்தானா?

கோரா — ஐயோ! நான்தானே இவ் விலைகளைப் பரப்பினேன். ஐயையோ! போர்வைகூட இருக்கிறதே இதோ!

அலான்ஸோ — அந்தக் குடிசையைப் பார்க்கவில்லையே, இன்னும்.

**கோரா** — ஹா! ஆமாம். என் குழந்தையைத் திருடிய கொடியவன் இங்கேதான் இருக்கிறான்.

(போய்க் கதவை இடிக்கிறாள்)

என் குழந்தையைக் கொடுத்துவிடு. கண்மணி!

[லஸ்கஸஸ் குடிசையினின்று வெளியே வருகிறார்]

**லஸ்கஸஸ்** — விழுந்து கிடக்கும் என்னை வெளியே அழைப்பதார்?

**கோரா** — கொடுத்து விடு; குழந்தையை! (குடிசைக்குள்ளோடி) கண்மணி! பார்ணண்டோ, கண்மணி!

**அலான்ஸோ** — சகலமும் வல்ல கடவுளே! இதென்ன, என் கண்கள் என்னை ஏமாற்றுகின்றனவா? லஸ்கஸஸ் பிரபோ!

**லஸ்கஸஸ்** — அலான்ஸோ, என்னுயிர் நண்ப!

**அலான்ஸோ** — எனது குரு சிரேஷ்டா!

(தழுவிக்கொள்கிறார்கள்.)

[கோரா மறுபடியும் வருகிறாள்.]

**கோரா** — என்ன! குழந்தையைக் கொடுக்குமுன்னால் இவனைத் தழுவுவையோ?

**அலான்ஸோ** — ஐயோ! நாமென்ன துன்பமுற்ற வேளையிற் சந்திக்கிறோம்!

**கோரா** — ஆயினும் இவர் கண்களினின்று தருமமும் தண்மையுமே ஒழுகுகின்றன. உங்களுக்கோ வயதாயிற்று. துக்கமுற்ற ஒரு தாயின் மீது கொஞ்சம் இரக்கம் கொள்ளுங்கள் —

ஆயுளுள்ள வரையி லுங்களுக்கு அடிமையா யிருக்கின்றேன். வேண்டாம், ஐயோ, என்னி-டத்திலில்லை யென்று சொல்ல வேண்டாம். மறுக்காதீர்.

(காட்டிற்குள் ஓடுகிறாள்.)

**லஸ்கஸஸ்** — என்ன அர்த்தம் இதற்கு?

**அலான்ஸோ** — அவளென் மனைவி. சிறையிலிருந்து இப்பொழுது தான் தப்பி வரும் நான் அவள் கானகம் சென்று விட்டாளென்ப தறிந்து அவளை இங்கே தேடி வந்தேன். என் குரலைக்-கேட்டவள், குழந்தையை விட்டு விட்டு என்-னிடம் ஓடி வந்தாள். குழந்தை அம்மரத் தடி-யில் தூங்கிக்கொண்டிருந்தது.

[கோரா மறுபடியும் வருகிறாள்.]

**லஸ்கஸஸ்** — என்ன! தனியாகவா விட்டுச் சென்-றனை?

**கோரா** — ஹோ! சரி! நீங்கள் சொல்வது வெகு சரி! கேடு கெட்ட தாய் நான்! குழந்தையை விட்டோடினேனே. பாவம் பேதையைக் கை விட்டனனே! இருக்கட்டும்; பூ மண்டலம் முழுவதும் ஓடித்தேடிக் கண்டு பிடிக்காமற் போகிறேனா!

(ஓடுகிறாள்.)

**அலான்ஸோ** — மன்னிக்க வேண்டும். லஸ்கஸஸ், நானவளைப் பின்பற்றிச் செல்கிறேன். மேலும் ரோலாவினது விமோசனத்தையும் வெகு சீக்-கிரம் தேடவேண்டும்.

**லஸ்கஸஸ்** — நானும் வருகிறேன், அலான்ஸோ. நீ யவளைச் சரியான வழியில் அழைத்துச்-செல். நீ யவ்வழி போகவேண்டும். என் தளர்ந்த நடைக்காகத் தாமதிக்காதே. நான் பின்னால் வந்து சேர்கிறேன்.

(போகிறார்கள்.)

## இரண்டாங் களம்

இடம் — ஸ்பானியர் கூடாரம்.

[தூரத்தில் ஓர் நீரோடையும் அதன் மேல் ஒரு மரக்கட்டைப்பாலமும் தெரிகிறது. எக்காளம் முழங்குகிறது. அல்மாக்ரோ, போர்ச் சேவகர்கள் பின்தொடர, ரோலாவைச் சங்கிலி கட்டி இழுத்து வருகிறான்.]

**அல்மாக்ரோ** — இழுத்து வாருங்கள் இங்கே! இந்தக் கதை யெல்லாம் பலிக்காது! பொய்!

**ரோலா** — பொய்யா! ரோலா பொய் சொல்வதா! ஆகா! இப்பொழுது நீ யொரு பாலைவனத்தில் சைனியத்துட னிருக்க, என் வாளொன்றே துணையாய் நானுன்னைத் தனித்தெதிர்க்க இடமிருந்தாலன்றோ தேவலை!

[உள்ளே எக்காளம் ஊதுகிறது]

**அல்மாக்ரோ** — பெருவியரின் பேர் பெற்ற ரோலா கள்ளனைப் போல் வேவு பார்க்க வந்து ஒளிந்தொளிந்து திரிவது ஆச்சரியமே!

**ரோலா** — ஒளிந்திருந்தேனா!

அல்மாக்ரோ — எங்கள் தலைவனுக்கே பதிற்சொல், இதோ வருகிறார்.

[பிஸாரோ வருகிறான்]

பிஸாரோ — இது வென்ன இது! ரோலா !

ரோலா — வெகு ஆச்சரியம் தான் உனக்கு; ஓ! சந்தேகமென்ன !

பிஸாரோ — கட்டுண்டு கூடவா !

ரோலா — ஆம் வெகு கெட்டியாக — என்னருகில் நீ நிர்ப்பயமாய் வரலாம்.

அல்மாக்ரோ — புறஸ்தானத்தில் காவற் சேவகர்கள் இவனைப் பிடித்துக் கட்டி விட்டார்கள்.

பிஸாரோ — அவிழ்த்து விடுங்கள், இக்கணமே! ரோலா, வாஸ்தவமாய் உனக்கு இந் நிந்தனை நேரிட்டதற்காக வருந்தப்படுகிறேன்.

ரோலா — ஆயின் நீ செய்ய வேண்டியதைச் செய்கிறாய்.

பிஸாரோ — மேலும் ரோலாவைப்போல் பேர் எடுத்த ஒரு வீரன் நிராயுதபாணியாயிருக்கச் சகியேன். உனது சத்துருவினதாயினும், இதைத் தயவு செய்து அங்கீகரித்துக்கொள்.

[ஒரு வாளைக் கொடுக்கிறான்]

ஆண்மைக்குரிய மரியாதையை ஸ்பானியன் அறிவான்.

ரோலா — தமக்கிழைத்த தீங்கை மன்னிக்கவும் பெருவியர்க்குத் தெரியும்.

பிஸாரோ — ரோலாவும் பிஸாரோவும் சத்துருக்-
களா யில்லாமலிருக்க முடியாதா ?

ரோலா — ஆம் ! உன்னையு மென்னையும் இக்-
கடல் பிரிக்குமாயின்! --- நான் போகலாமா?

பிஸாரோ — தடையின்றி.

ரோலா — மறுபடி வழி மறிக்க மாட்டார்களே ?

பிஸாரோ — மாட்டார்கள் ! ரோலாவை இடை-
யூறின்றி அனுப்பச் சொல்லுங்கள்.

[தவில்லா, இரண்டு சிபாய்களுடன், அலான்-
ஸோவின் குழந்தையை எடுத்து வருகிறான்.]

தவில்லா — நேற்றுச் சிறையுண்ட நம்மிரு சேவகர்-
களும் இதோ தப்பி வந்து விட்டார்கள். நாம்
கண்டு பிடிக்க வீணே இவ்வளவு கஷ்டப்பட்ட
பெருவியர் அந்தரங்க மார்க்கத்தையும் —

பிஸாரோ — சே ! வாயை மூடு! முன் புத்தி வேண்-
டா முனக்கு? கண் தெரியவில்லை, இதோ! —

(ரோலாவைச் சுட்டிக் காட்டுகிறான்.)

தவில்லா — வழியில், இப்பெருவிய குழந்தையைக்
கண்டெடுத்தார்கள். அதைப் பார்த்தால் —

பிஸாரோ — இந்தச் சனியன் என்னத்திற் கென-
க்கு — காலைவாரிக் கடலில் போட்டு விடச்-
சொல்லு.

ரோலா — அடதெய்வமே! இது அலான்ஸோவின்
குழந்தை ! என்னிடம் கொடுத்து விடு.

**பிஸாரோ** — ஆகா! அலான்ஸோவின் குழந்தையா!

[குழந்தையைத் தன் கையில் வாங்கிக் கொள்கிறான்]

வருக, வருக, சிசுப்பிணையாளியே! இப்பொழுது அலான்ஸோ மறுபடி என் கைதியாயினான்!

**ரோலா** — இச் சிசுவைத் தாயினின்று பிரித்து வைப்பாயோ?

**பிஸாரோ** — மாட்டேனோ? என்ன! அலான்ஸோ மார்தட்டிப் போர் புரியும்போது, தன் குழந்தை என் வசத்திலுள தென்பதை யுணர அவன் கைவாள் கீழ் நழுவச் சோர்ந்து நின்றென் வாளிற்கு இரையாகாமற் தப்புவனோ?

**ரோலா** — நீ சொல்வது விளங்கவில்லை.

**பிஸாரோ** — வெகுநாட் பட்டபகை வட்டியு முதலுமாக மிக அதிகமா யிருக்கிறது. அதை அலான்ஸோவினுடன் முடித்துக்கொள்ள வேண்டும். இச் சிசுவே அக் காரியத்திற்குப் பிணையா யிருக்கும்.

(குழந்தையை ஒரு சேவகனிடம் கொடுக்கிறான்.)

**ரோலா** — அடே, அடே! நீயும் ஒரு மானுடப் பிறவியா? அந் நிரபராதிக்குத் தீங்கிழைக்கவும் மனம் வருகிறதோ உனக்கு! தெய்வமே, உன் மூஞ்சியைக்கண்டு சிரிக்கவும் சிரிக்கிறதே அது.

**பிஸாரோ** — கேட்கிறேன் — அதற்குக் கோராவின் சாடை யிருக்கிறதோ?

**ரோலா** — பிஸாரோ, என் ஹிருதயத்திற்கு நீ தீ வைத்துவிட்டாய். நீ சிந்தும் அதன் இரத்தம்

மலட்டு மணற்பாங்கில் தோய்ந்து கிடக்குமென் றெண்ணுதே. இல்லை, உனது கொடுமையின் தாபத்தால் அது ஆவியாகி வானமேறிக் கருணைக் கடவுளைக்கொண்டு தன் உயிர் மாய்த்த பாபியின் படுதலையில் இடிவிழத் தூண்டாது விடாது. சண்டாளா!

பிஸாரோ — என் கர்மம் என் தலைமேலேயே இருக்கட்டும்.

ரோலா—(பிஸாரோவின் காலில் விழுந்து) உன் காலின் கீழ்க் கிடக்கும் என்னைப் பார்.—நான், ரோலா — நான் — உன்னுயிரைக் காப்பாற்றினவன். நான்—இதுவரையில் சிருஷ்டிக்கப்பட்ட மனுஷனொருவனுக்கு முன்னும் வணங்கி நின்றிராதவன்! இரங்கிக் கேட்கிறேன் — காலில் விழுந்து வேண்டுகிறேன் — இச் சிசுஹத்தி பண்ணுதே, நானுன்னடிமையாய் விடுகிறேன்.

பிஸாரோ — ரோலா! நீ எதேச்சையாய்ப் போகலாம் — இப்பயல் என்னிடமேயே இருக்கட்டும்.

ரோலா — ஆயின், இவ் வாள் எனக்குக் கடவுள் கொடுத்த பிரசாதமே, நீ கொடுக்கவில்லை!

[குழந்தையைப் பிடுங்கிக் கொள்கிருன்.]

என்னைப்பின் பற்ற ஒரு அடி நகர முயலுபவன் இருக்கு மிடத்திலேயே உயிர் துறந்தவனாவான்!

(குழந்தையுடன் விரைந்து போகிருன்.)

**பிஸாரோ** — ஓடுங்கள் அவன் பின்னால். ஆனால் அவனுயிர்க்கு மாத்திரம் ஒரு சேதமும் வேண்டாம்.

[தவில்லாவும் அல்மாக்ரோவும், சேவகர்களுடன் போகிறார்கள்.]

அடடா! என்ன ஆவேசத்துடன் தன்னைக்காத்துக்கொள்ளுகிறான். ஹா, ஒவ்வொருவனும் மடிந்து விழுகிறானே—உம்—இப்பொழுது —

[அல்மாக்ரோ வருகிறான்.]

**அல்மாக்ரோ** — இம் மடையனின் உயிரைத் தொட வேண்டாமென்ற உன் கட்டளைக்கு ஏற்கனவே நம் வீரர்களுள் மூவர் இரையாய் விட்டனர்; — இன்னும் கொஞ்ச தூரம் தப்பிச் சென்று விடுவானேயாயின் —

**பிஸாரோ** — இனி தயை யொன்றும் வைக்க வேண்டாம்.

[அல்மாக்ரோ போகிறான்.]

பீரங்கிக்கு எட்டாமற் போவானோ — என்ன அதற்கும் தப்பி விடுவான் போலிருக்கிறதே — பேஷ் ஒரு குதிரை வீரன் துரத்துகிறான். ஐயோ, ரோலா அவனை பார்த்துவிட்டானே— இதோ நீரோடையண்டை வந்து விட்டானே, இன்னும் எங்கு ஓடுகிறான் பார்ப்போம்.

[ரோலா பாலத்தைக் கடந்து அதைக் காலால் உதைத்து உடைத்து விடுகிறான்.]

[சிபாய்கள் ரோலாவைப் பார்த்துச் சுடுகிறார்கள் — ஒரு குண்டு அவன்மேற் பாய்கிறது.]

இதோ, சீக்கிரம், சீக்கிரம், குழந்தையைப் பிடுங்கிக் கொள்ளுங்கள்.

[ரோலா குழந்தையுடன் ஓடுகிறான். அல்மாக்ரோவும் தவில்லாவும் வருகிறார்கள்.]

**அல்மாக்ரோ** — தப்பியோடி விட்டனனே! — அதுவும் குழந்தைக்குச் சிறிதும் காயப்படாமல் —

**தவில்லா** — இல்லை — அவன் எமனையும் அவனுடனேயே சுமந்து செல்கிறான். விலாவில் குண்டு பாய நானே பார்த்தேன்.

**பிஸாரோ** — என்னவாறு லென்ன, குழந்தை தப்பி விட்டது — அலான்ஸோவின் குழந்தை! ஹோ! இங்கேயுமா ஏமாந்து போக வேண்டும் நான்!

**அல்மாக்ரோ** — வாய்ப் புலம்பலில் யாது பயன் — காரியத்தைப் பார்ப்போம்! அவர்களந்தரங்க வழியின் இரகசியமும் நமக்குத் தெரிந்து விட்ட தென்பதைத் தாங்கள் மறக்கலாகாது. அவ்வழி யவர்கள் மனைவி மக்களை யொளித்து வைத்திருக்கும் கோட்டைக்குட் கொண்டு விடுகிறது.

**பிஸாரோ** — நல்லது அல்மாக்ரோ; பொறுக்கி யெடுத்த படை வீரர்களுடன் பறந்து செல்வோம் — தொகைக்காகக் காக்க வேண்டாம். இரு இரு! அல்மாக்ரோ, எல்விரா இன்றையதினம் இறக்க வேண்டுமென்பது வல்வெர்தேவுக்குத் தெரியப் படுத்தி யிருக்கிறதோ!

அல்மாக்ரோ — தெரியப்படுத்தி யிருக்கிறது — அவள் கடைசி விண்ணப்பம் ஒன்று —

பிஸாரோ — நானென்றிற்கும் செவி கொடேன்.

அல்மாக்ரோ — அவள் கேட்கும் வரம் வெகு சிறியது. தாங்க ளவளை முதல் முதல் கண்ணுற்ற போது அவள் அணிந்திருந்த கன்னிமாட உடையைத் தனக் கிப்பொழுது தரவேண்டு மென்பதுதான். தனது அவமானத்தை யெல்லாம் கிளப்பும் இப் பட்டாடைக ளணிந்து உயிர் துறக்க அவளுக்கு மனமில்லை.

பிஸாரோ — நல்லது. உன்னிஷ்டப்படி செய் — ஆனால் இதை மாத்திரம் வல்வெர்தேயுடன் சொல் — அவனுயிர் மேல் அவனுக்காசை யுண்டானல் — எல்விரா இறந்து விட்டாள் என்பதை நான் திரும்பி வந்ததும் கேட்க வேண்டும்.

(எல்லாரும் போகிறார்கள்.)

## மூன்றாங் களம்

இடம் — அத்தாலிபாவின் கூடாரம்.

[கோராவும் அலான்ஸோவும் பின்தொடர அத்தாலிபா வருகிறான்.]

கோரா — ஹோ! என்னை விட்டுத் தப்பியோடப் பார்க்காதே, அத்தாலிபா! தன்னரசனுக்கன்றி வேறு யாரிடம் என்னைப்போன்ற பாலனை இழந்த தாயொருத்தி தன் குறைகளைச் சொல்லி

யழப் போகிருள்! கடவுள் என் வேண்டுகோளுக்குச் செவி கொடுக்கவில்லை! என தலான்ஸோ உனக்காகப் போர் புரியவில்லையா? எனது இவ் வினிய பையனும், அவனைத் திருப்பிக் கொடுப்பாயாயின், உனக்காகப் போர்முக நிற்கும் ஒரு புருஷனுக மாட்டானு!

**அலான்ஸோ** — எனதினிய காதலி — ஐயோ, மனமுடைந்த கோரா — இதனுல் நீ நமது காவலனின் மனதைப் புண்படுத்துகிருயே யன்றி உனக்குற்றதை ஆற்றிக் கொள்ளவில்லை.

**கோரா** — நமது காவலனு யிருந்து — நம் குழந்தையைத் திருப்பிக் கொடுக்கச் சக்தியில்லையா?

**அத்தாலியா** — தகுதிக்குத் தக்க வெகுமதியளிக்கும் பொழுதும், குடிகளுக்குற்ற குறைகளைத் தீர்க்கும் பொழுதும்தான் நான் உண்மையாக ஓர் அரசனின் மகிமையை யுணர்கிறேன் — ஆனுல் அவர்கள் வருந்தக் கேட்டுக் குறை தீர்க்க முடியாவிடில் அப்பொழுதே, மனிதர்க்குரிய சக்தியின்மையைக் கண்டு வியாகுலப்படுகிறேன்.

**சேவகர்கள்** — (உள்ளே) ரோலா! ரோலா! ரோலா!

[ரோலா, ரத்த மொழுக, குழந்தையுடன் வருகிருன்.]

**ரோலா** — உன் குழந்தை!

[கோராவிடம் கொடுத்து விட்டுக் கீழே விழுகிருன்.]

கோரா — ஹோ, தெய்வமே! அதன் மேல் இரத்தமா!

ரோலா — எனது இரத்தமது கோரா!

அலான்ஸோ — என்ன, இறக்கின்றனையோ, ரோலா!

ரோலா — உனக்காகவும் கோராவிற்காகவும்.

(சாகிறான்.)

[ஒரேனோ வருகிறான்.]

ஒரேனோ — துரோகி எவனோ நம் அந்தரங்க வழியைக் காட்டிக் கொடுத்து விட்டான். பகைவர், புகலிடம் காத்து நிற்கும் நமது சிறு படையை எதிர்க்கிறார்கள்.

அலான்ஸோ—ஒரு நிமிஷமும் தாமதிக்கவேண்டாம். போர்வீரர்களே, துரிதப் படுங்கள்! உங்கள் மனைவிமக்களுங்களைக் கதறி யழைக்கிறார்கள். இத் திவ்யவீரனது உடல் வண்டியில் வரட்டும். இக் காட்சியே நமதாட்களின் வெஞ்சினத்தையாவேச மாக்கிவிடும். இதோ கொடிய பிஸாரோ, நம்மிருவரில் ஒருவர் காலம் கட்டாயம் குறுகிவிட்டது! போங்கள்! ரோலாவின் திருநாமத்தை ஸ்மரித்துப் பழிவாங்க எதிர்ப்பீர்கள்.

(போகிறார்கள்.)

## நான்காம் களம்

*பாறைகள் நடுவில் அகன்ற இடம்.*

*[பிஸாரோ, அல்மாக்ரோ, வல்வெர்தே, ஸ்பானிய போர்வீரர்கள் வருகிறார்கள்.]*

**பிஸாரோ** — நல்லது! அவர்கள் நம்மைப் புடை சூழ்வார்களாயின் நாம் நடுவிலகப்பட்டு நசிக்கவேண்டியதுதான். ரோலாவும் அலான்ஸோவும் எங்கேபோய்த் தலையைச் சொருகிக் கொண்டு விட்டார்கள்!

*[அலான்ஸோ ஒரேனோ அவர்கள் போர்வீரர்கள் வருகிறார்கள்.]*

**அலான்ஸோ** — அலான்ஸோவுக்கு அவனே பதில் சொல்லுகிறானிதோ. ரோலாவுக்காக அலான்ஸோவின் வாள் பேசும்.

**பிஸாரோ** — உன் ஆட்களின் தொகை வலியால் இவ் விதம் பேசுகின்றனை நீ! பிஸாரோவுடன் தனிப் போர்புரியத் துணிவையோ?

**அலான்ஸோ** — பெருவியர்களே, இருக்குமிடத்தில் நிற்பீர்கள். இப் போரை நாங்களே முடிக்கின்றோம்.

**பிஸாரோ** — ஸ்பானியர்களே! நீங்களு மப்படித்தான்.

*[பிஸாரோவும் அலான்ஸோவும் எதிர்த்துத் தனிப் போர் புரிகிறார்கள். அலான்ஸோ கேடயம் உடைபடுகிறது; பிஸாரோ அவனைக் கீழே தள்ளி முழங்காலால் அமுக்கிக் கொள்ளுகிறான்.]*

**பிஸாரோ** — இதோ, துரோகி, உன் மார்பில் —

[இத் தருணத்தில் கன்னிமாட உடை தரித்து எல்விரா திடீரென்று வருகிறாள். பிஸாரோ *திடுக்கிட்டுப் பின் வாங்குகிறான். அலான்ஸோ எழுந்து மறுபடி போர் புரிந்து பிஸாரோவைக் கொன்றுவிடப் பெருவியர் ஜெய பேரிகை முழங்குகிறது.]

[அத்தாலிபா வருகிறான்.]

**அத்தாலிபா** — எனது தீர அலான்ஸோ!

(தழுவுகிறார்கள்.)

**அல்மாக்ரோ** — நாங்களடங்கிவிட்டோம். உயிர்ப் பிச்சை தரவேண்டும் இந்த க்ஷணம் உங்களூர்விட் டகல்கிறோம்.

**வல்வேர்தே** — எல்விராவின் உயிரைக் காப்பாற்றினது நானேயென்று எல்விராவே சொல்லுவாள். உன்னுயிரைக் காப்பாற்றியது அவளே — ஆகையால் - - - -

**அலான்ஸோ** — பயப்படாதேயுங்கள். உங்களுக் கொன்றும் ஆபத்தில்லை.

[ஸ்பானியர் தங்களாயுதங்களைக் கொடுத்து விடுகிறார்கள்.]

---

* தன் கட்டளைப்படி எல்விரா ஏற்கனவே உயிர் துறந்திருக்க வேண்டுமாகையால் தோன்றியது அவளது ஆவிரூபமாய்த்தானிருக்கவேண்டுமென எண்ணித் திகிலடைந்து பிஸாரோ செயலற்றுப் போயினன். மேலும் பிஸாரோ முதல் முதல் அவளைப் பார்த்தபோது அவள் அணிந்திருந்த அதே கன்னிமாட உடையைத் தரித்துத் திடீரெனத் தோன்றின எல்விராவை அவன் அசதியில் கண்ணுற்றதும் அவன் மனதில் பழைய எண்ணங்களெல்லாம் தோன்றி யவனைத் திகைக்கவும் செய்திருக்கலாம்.

எல்விரா — வல்வெர்தே சொல்வது வாஸ்தவம். ஆனாலவன் என்னை இவ்விடம் சந்திக்க எதிர்-பார்க்கவில்லை. ஏதோ வொரு மாய பிரேரே-பணை என்னை இவ்விடம் வர ஏவிற்று.

அலான்ஸோ — மகா எல்விரா, என்னை நீ ரட்சித்-தாய்! நானும், அத்தாலிபாவும், விடுதலைபெற்ற இந்நாடும் உனக்குட்பட்டிருக்கும் கடமை இவ்வளவென்று சொல்ல முடியாது! நன்றி பாராட்டும் எங்கள் நடுவில் நீ வாழ்வாயானால் —

எல்விரா — அலான்ஸோ, இல்லை! எனது வாழ் நாட்களின் முடிவு இன்னதென்று தீர்மான-மாய் விட்டது. நான் என்னதான் புன்னகை-யுடன் திரிந்திருந்த போதிலும், பலவித பாபச் செய்கைகளால் சதா புசிப் புண்டிருக்கும் என்னுவிக்குப் பிராயச்சித்தம் தேடவேண்-டியவளா யிருக்கிறேன். மனம் நொந்து உடல் மெலிந்து எனது பாபங்களைப் பொசுக்கி, நாவெடுத்து அருள்வள்ளலை அழைப்பதற்கு நான் அருகளான பிறகு, உனக்காகவும் அலான்ஸோ, உனது கோராவிற்காகவும், உன் குழந்தைக்காகவும் — இராஜசிரேஷ்ட, உனக்-காகவும், நீ யரசாளும் சாதுப் பிரஜைகளுக்-காகவும், நான் சதா ஜபம் பண்ணிக்கொண் டிருக்கிறேன். வல்வெர்தே, நீ என்னுயிரைக் காப்பாற்றினுய். பூ த தயை இன்னதென்று தெரிந்து நட — துன்மார்க்கம் விட்டு விமோ-சனம் பெறு — ஸ்பானியர்களே, உங்கள் நாடு மீண்டு, மகிமையும் அதிகாரமும் பெறச் சென்-

றதில் நீங்கள் முற்றிலும் வழிதப்பி விட்டீர்களென்பதை உங்கள் சக்ரவர்த்தியிடம் சொல்லுங்கள். மண் பொன் பெண்ணுசைகளாகிய கானல் நீரைப் பின்பற்றிச் சென்ற மனிதனெவனும் சுகப்பட்டதில்லை. அவர்கள் தேசமும் மேன்மை பெற்றதில்லை. இதை அவர்களுக்குச் சொல்லுங்கள்.

[பிஸாரோவின் சவத்தைக் கடைசியாக வியாகுலத்துடன் பார்த்துவிட்டுப் போய் விடுகிருள். எக்காளம் ஊதுகிறது. வல்வெர்தே முதலானேர் பிஸாரோவின் பிணத்தைத் தூக்கிச் செல்கிருர்கள்.]

அலான்ஸோ — அத்தாலிபா! நமது ரோலாவின் ஞாபகார்த்தமாய்ச் செய்யவேண்டியவைகளைச் செய்துவிட்டே, நம் சைனியத்தின் வெற்றி கோஷத்துக் கிடம் கொடுக்கவேண்டும்.

[எல்லாரும் விசனத்துடன் வந்து நிற்கிருர்கள். போர்ச் சேவகர்கள் முன்னல் வரிசை வரிசையாய் வர, பின்னல் நான்குபேர் ரோலாவைத் தூக்கிவந்து வைக்கிருர்கள். குருக்கள் வெகு உருக்கமாய் ஜபம் பண்ணுகிருர்கள். அலான்ஸோவும், கோராவும் சவத்திற் கிருபுறமும் முழங்கால் படியிட்டு அடங்காத் துக்கத்துடன் ரோலாவின் கையை எடுத்து முத்தம் கொடுக்கத் திரை மெள்ள விழுகிறது.]

PRINTED AT THE 'CAXTON PRESS', MADRAS, E — 1915.